
கல்கி
1.50
KALKI
4-11-84
இந்த இதழில்
புதிய தொடர்கதை–
நிலவே
நீயும்
விலகாதே


நினைவிருக்கிறதா, தவமிருந்து பெற்ற உங்கள் தங்கமகனி
பிறந்த நாளுக்கு வாங்கிவந்தீரே உங்களுக்கு ஒரு அழகான புடவை.
அப்பட்டுச் சேலைக்குப் பொருத்தமாக பிளவுஸ் துணி பெற்றிட
எங்கெல்லாம் தேடி அலைந்தீர்கள்... கடைசியில் அதைக் கைவிடும்
எண்ணம் வந்தபோது நீங்கள் கண்டீர்களே, தொட்டுப் பார்க்க
ஒரு பட்டுமென்மைத் துணி... நீங்கள் நினைத்த அதே நிறம்!
ஆம் அதன் பெயர் தான் "மோன்ட்டீ"!
மோன்ட்டீ பிளவுஸ் துணி
ஆண்டாண்டுகளாய நீங்கள் உபயோகித்து வருவது!
RUSTOM MILLS
எவ்வித சேலைக்கும் பொருத்தமான 150க்கும் மேற்பட்ட வண்ணங்களில் கிடைக்கின்றன
Trikaya RM 1.84 TA



இளவரசி ஆன்

இந்தியாவுக்கு வந்துள்ள இளவரசி

இங்கிலாந்து இளவரசி ஆன் அக்டோபர் 28ம் தேதியிலிருந்து நவம்பர் 10ம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரச குடும்பத்தைப் பற்றிய பல்வேறு புத்தகங்களில் ஆன் பற்றி எழுதப்பட்டிருக்கும் சுவையான விஷயங்களில் சில:

"என்னைப் பற்றிப் பத்திரிகைகள் நன்றாகவே கற்பனை செய்து எழுதுகின்றன. சிலசமயம் வேறு ஒருவர் படத்தைப் போட்டு அதன் கீழ் என் பெயரைப் போடும் அளவுக்கு இவர்கள் கற்பனை வளர்ந்திருக்கிறது!" — இவ்வாறு கூறியவர் இங்கிலாந்து இளவரசி ஆன் (Anne)தான்.

தமது 18-வது வயதிலேயே அரசு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்து விட்ட ஆன்னுக்குச் சிறு வயதிலிருந்தே குதிரை சவாரி செய்வதில் பிரியம் அதிகம். இதில் பல பரிசுகளும் பெற்றுள்ளார். ஒருமுறை யார்க்ஷயரில் நடைபெற்ற குதிரைச் சவாரிப் போட்டியில் ஆன் தமக்கு மிகவும் பிடித்தமான "டபுளெட்" என்ற குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்தார். வெற்றிக் கம்பத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் குதிரையிலிருந்து தவறிக் கீழே விழ, பின்னால் இரண்டாவதாக வந்த மார்க் பிலிப் பரிசைத் தட்டிக் கொண்டு போனார். இளவரசி ஆனையே தட்டிக் கொண்டு போகப் போகிறோம் என்பது அப்போது அவருக்குத் தெரியாது! பின் பல்வேறு போட்டிகளில், ஆன்னும், மார்க் பிலிப்பும் சந்தித்துக் கொண்டார்கள். 'கிசு கிசு' வளர்ந்து கல்யாணத்தில் முடிந்தது! மார்க் பிலிப் திருமணத்திற்கு முன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல. ராணுவத்தில் அதிகாரியாக இருந்தவர்தான். இதனால் இந்தக் கல்யாண விஷயம் பரபரப்பாகப் பேசப்பட்டது.

கல்யாணத்திற்கு முன் பல வதந்திகளை வெளியிட்ட பத்திரிகையாளர்களைக் கல்யாணத்திற்குப் பின்னர் ஆறு மாதம் கழித்துச் சந்தித்த ஆன் கேட்டார்: "நாங்கள் விவாகரத்து செய்து கொண்டதாக இன்னும் செய்தி போடவில்லையே, ஏன்?"

பக்கிங்காம் மாளிகையில் அரச குடும்பத்தினர் வெளியில் போகும் போதும் வரும் போதும், காவலர்கள் மரியாதை செய்ய வேண்டும். சிறுமியாக இருந்த போது ஆன்னுக்கு இதைக் காண வேடிக்கையாக இருக்கும். காவலர்களைக் கிண்டல் செய்வதற்காகவே அவர்கள் முன் பலமுறை போய் வருவார். இது, பின்னர் அரசியின் கவனத்துக்கு வந்து ஆன்னின் இந்தப் போக்கிரித் தனத்துக்கு முடிவு கட்டினார்.

கல்யாணத்துக்குப் பிறகு ஒருமுறை மே. ஜெர்மனிக்கு தம்பதிகள் விஜயம் செய்த போது, கணவரை ஹோட்டல் அறையில் வைத்துப் பூட்டி விட்டார் ஆன்! அவர் சொன்ன காரணங்கள்: "அதிகமாகக் குடிக்கிறார், மாலை வேளைகளை என்னுடன் பகிர்ந்து கொள்ள மாட்டேன் என்கிறார்!"

ஆன்னுக்குக் குதிரை சவாரி மட்டுமல்ல, பாட்மிண்டன், டென்னிஸ் போன்ற ஆட்டங்களிலும் விருப்பம் உண்டு. மாண்ட்ரியல், ம்யூனிக் ஒலிம்பிக் குதிரை சவாரி போட்டிகளில், ஆன் கலந்து கொண்டுள்ளார். ஆன் மிகவும் பிரியமாக, வளர்த்து வந்த "டபுளெட்" குதிரை, 1974-ல் இறந்தது. துக்கம் தாளாமல் 'ஓ'என்று கதறி அழுதார் இளவரசி. அரச குடும்பத்தினர், மூச்சு விட்டாலே மூன்று பக்கங்கள் எழுதும் இங்கிலாந்து பத்திரிகைகள் குதிரைக்காக ஆன் அழுததைப் பெரிதாக வெளியிட்டன.

இளவரசி ஆனுக்குப் பிடிக்காதது புகை பிடிப்பது, நீண்ட நேரம் பேசுவது; நிறைய சாப்பிடுவது. பிடித்தது: நீண்ட தூரம் செல்லும் லாரியின் டிரைவராகப் பணியாற்றுவது! அரச குடும்பத்திலேயே அதிக எடை தூக்கிச் செல்லும் லாரிகள் ஓட்ட லைசென்ஸ் பெற்றிருப்பவர் அவர் ஒருவர்தான்.

இரு குழந்தைகளுக்குத் தாயான ஆன் பல சமூக சேவை இயக்கங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார். "குழந்தைகளைக் காப்பாற்று நிதி" (Save Children Fund) இயக்கத்தின் தலைவர் இவர்தான். முக்கியமாக இது விஷயமாகத்தான் இப்போது இந்தியாவிற்கு வந்திருக்கிறார். 1950-ல் நமது சுதந்திர தினத்தன்று பிறந்தவர் ஆன்.

-ப்ரியன்



ம.பொ.சி. பேசுகிறார்

தலைவர்களைப் பற்றிச் சுவையாகவும் ஆதார பூர்வமாகவும் பேச சிலம்புச் செல்வர் ம. பொ. சியைத் தவிர வேறு யார் இருக்க முடியும்? பேச்சுத் திறன் தவிர, அக்கால — இக்காலத்தலைவர்களை இணைக்கும் பாலமாகவும் அல்லவா இருக்கிறார் ம. பொ. சி.?

தீரர் சத்தியமூர்த்தி, பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பேராசிரியர் கல்கி என்று இவருடனும் நெருங்கிப் பழகியவர். இவர்களைப் பற்றிய சுவாரசியமான தகவல்களை ஐந்து வாரங்களுக்கு, ஆசிரியர் கேள்விகள்தொடுக்க ம. பொ. சி. அவர்கள் சுவையாகப் பதில் அளித்தார். புதிய தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள் அதிலே பல இருந்தன என்றால், பழைய தலைமுறை பெருமிதத்தோடு எண்ணிப் பூரித்த செய்திகள் பலப்பல. சுருக்கமான தொகுப்பு இதோ:

பிரிட்டிஷ் சிங்கமும், இந்தியப் பூனையும்

டெல்லி சட்டசபையிலே ஒரு முறை, நிதிச் செயலாளராக இருந்த வெள்ளையர் சொன்னார்: ''எங்கள் பிரிட்டிஷ் சிங்கம் உங்கள் இந்தியப் பூனைக்குப் பயப்படாது!'' என்று. அதற்கு ''உங்கள் பல் போன கிழச் சிங்கம் எங்கள் பூனையைக் கண்டல்லவா இப்போது பயப்படுகிறது!'' என்று கடச் கடத் திருப்பிக் கொடுத்தவர் தீரர் சத்தியமூர்த்தி.

ஒருமுறை காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜவஹர்லால் நேரு தயாரித்த காங்கிரஸின் 'ஆண்டறிக்கையிலே, உப்பு சத்தியாக்கிரகப் போரில் தென்னாடு அவ்வளவு திருப்திகரமாகப் பங்கு கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே சத்தியமூர்த்தி அவர்கள் எழுந்து நின்று, 'தென்னாட்டைக் குறை கூறும் வாசகத்தை வாபஸ் பெறவேண்டும். இல்லாவிட்டால் அந்த அறிக்கையைத் தென்னவர் ஏற்க முடியாது. எங்களுக்கு வாரி வழங்க பிர்லாக்கள் இல்லை. எங்களுக்குள்ள சக்திக்கேற்ப தியாகங்கள் செய்திருக்கிறோம்!' என்று கோபாவேசத்துடன் கூறினார். காந்திஜியின் ஆலோசனைப்படி நேருஜியே மேடைக்கு வந்து, சத்தியமூர்த்தி ஆட்சேபித்ததை அறிக்கையிலிருந்து நீக்குவதாகக் கூறினார்.

'தீரர்' என்ற அடைமொழிக்கு அவர் உரியவர் தான் என்பதில் அப்புறம் ஏன் சந்தேகம் எழப் போகிறது!

'அவன் தோல் வெளுப்பாம் என் தோல் கறுப்பாம்' என்ற சொற்றொடரை அடிக்கடி சொற்பொழிவு மேடைகளில் பயன்படுத்துவார் தீரர் சத்தியமூர்த்தி. நிறபேதம் காரணமாகவே இந்தியர்கள் இரண்டாந்தரக்





நேரம் நல்ல நேரம்

குடிமக்களாகப் பல சந்தர்ப்பங்களில் கருதப் பட்டு உரிமை இழக்கின்றனர் என்பதை எடுத்துக் காட்ட இதைச் சொல்வார். ஆனால் அப்படிப்பட்டவரே ஒரு ஆங்கிலேய ரிடம் காட்டிய பெருந்தன்மை குறிப்பிடத் தக்கது:

சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தாம் மேயராக இருந்த போது பெருமளவு தீர்க்க முயன்றார் சத்தியமூர்த்தி. அப்போது வெள்ளை அட்வைசர் ஆட்சி சென்னை மாகாணத்தில் நடந்து கொண்டிருந்தது. ஆங்கிலேய அதிகாரிகளிலேயும் அவருக்கு நண்பர்கள் உண்டு. அந்நட்பைப் பயன்படுத்திச் சென்னை மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவேற்றினார். அதிலே தமக்குப்பெரிதும் உதவி புரிந்த அட்வைசருக்கு நன்றி செலுத்தும் அறிகுறியாக, அவரைக்கொண்டே அந்த நீர்த் தேக்கத்தைத் திறந்து வைக்கச் செய்தார். வெள்ளை அட்வைசரை அழைப்பதைக் காங்கிரஸ்காரர்கள் கடுமையாக எதிர்க்க, மேலிடம் தந்தியே அனுப்பியது. தந்தியை வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு, அந்த அட்வைசரைக் கொண்டே திறப்பு விழாவை நடத்தினார்! பிறகு தந்தி நாழி கழித்துக் கிடைத்தது என்று காங்கிரஸ் மேலிடத்துக்குச் சமாதானம் சொன்னார். நிற பேதம் பாராட்டாமல் அவர் காண்பித்த மனிதாபிமானத்துடன் கூடிய நன்றி உணர்ச்சியை, ம. பொ. சி. குறிப்பிட்டுவிட்டு, சென்னை மக்களுக்குத் தண்ணீர் குடிக்கும் போதெல்லாம் தீரர் சத்தியமூர்த்தி அவர்களிடம் நன்றியுணர்ச்சி இருக்க வேண்டும் என்றார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாற்றல் படைத்த தீரர் சத்தியமூர்த்தி அடிக்கடி சொல்லும் குறள்: 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு.''

''தமிழில் மொழி பெயர்ப்பது கஷ்டம்!''

சிறையில் தலைவர் காமராஜர் எப்படிப் பழகுவார் தமது தோழர்களுடன்?

''அதிக நேரம் உரையாடி மகிழ்வார். மிச்ச நேரத்தில் ஆங்கில டிக்ஷனரியைப் படிப்பார். சக கைதிகளின் தேவைகளை நிறைவு செய்வதில் தனி அக்கறை காட்டுவார்.'' உதாரணம் சொன்னார் ம.பொ.சி.:

''அமராவதிச் சிறையிலே கொசுத் தொல்லை அதிகம். என்னிடம் கொசுவலை இல்லாததால் ஆரம்பத்தில் உறக்கமின்றிக் கஷ்டப்பட்டேன். குளிருக்குப் போர்த்திக் கொள்ளக் கம்பளிப் போர்வை என்னிடம் இருக்கவில்லை. சிறை அதிகாரிகளிடமிருந்து கம்பளிப் போர்வையும், கொசு வலையும் கிடைப்பதற்கு முன்பே, திரு காமராசர் தான் எனக்குக் கொசுவலை வாங்கிக்கொடுத்தார்... வேறு சிறைகளில் அவர் 'ஏ' வகுப்பில் இருந்த காலத்திலும், 'சி' வகுப்பிலுள்ள தொண்டர்களின் தேவைகளைக் கவனித்து, அவற்றை இயன்ற அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதிலே மிகுந்த அக்கறை காட்டினார்.''

தொண்டர்களை அரவணைப்பதிலும் அவர்கள் உயர்வுக்குத் தோள் கொடுப்பதிலும் காமராஜர் மற்ற தலைவர்களிலிருந்து எப்படி மாறுபட்டு நிற்கிறார் என்பதை, ம.பொ.சி. குறிப்பிட்ட இன்னொரு சம்பவம் தெளிவாக்கியது: ''ஒருசமயம் தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியிலிருந்து காரிய கமிட்டிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திண்டுக்கல் அப்துல் சத்தார் என்ற உத்தமமான தேசபக்தர் தோற்கடிக்கப்பட்டார். காமராஜருக்கோ ஒரே வருத்தம். தமது கமிட்டி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து அந்த இடத்திற்கு அப்துல் சத்தார் அவர்களைத் தேர்ந்தெடுக்க காமராஜர் வழி செய்தார். கக்கன்ஜி, திருச்சி டி. எஸ். அருணாசலம் ஆகியோரின் உயர்வுக்குக் காரணம் காமராஜர் தான்...''

அரசாங்க உயர் அதிகாரிகளோடு பழகுவது, முதலமைச்சரானவுடன் காமராஜருக்குப் புதிய அனுபவம் தான் என்றாலும், மற்றவர்கள் வியக்கத்தக்க அளவுக்குத்







அருள்வாக்கு

அன்னதானத்துக்கு எல்லை விசேஷம் என்றும் இதிலேதான் ஒருத்தரைப் பூரணமாகத் திருப்திப்படுத்த முடியும். பணம், காசு, வஸ்திரம், நகை, பூமி, வீடு இந்த மாதிரியானவற்றை எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கொள்கிறவன் அதற்கு மேல் தந்தாலும் 'வேண்டாம்' என்று சொல்ல மாட்டான். அன்னம் போடுகிறபோதுதான் ஒருத்தன் என்னதான் முட்ட முட்டச் சாப்பிட்டாலும் ஓர் அளவுக்கு மேல் சாப்பிட முடியாது. 'த்ருப்தோஸ்மி' போதும் என்று சொல்கிறான். ஓர் அளவுக்கு மேல் போய்விட்டால், 'ஐயையோ, இனிமேல் போடாதீர்கள்' என்று மன்றாடச் செய்கிறான். இம்மாதிரி ஒருத்தன் பூரண மனஸோடு திருப்தி தெரிவிக்கிறபோதுதான் தாதாவுக்கும் தானத்தின் பலன் பூரணமாகக் கிடைக்கும்.

நேராக உயிரோடு உடம்பைச்சேர்த்து வைத்து ரக்ஷிப்பதும் அன்னம்தான். அதனால்தான் உண்டிகொடுத்தார் உயிர் கொடுத்தாரே' என்று சொல்லியிருக்கிறது. மணிமேகலையில் இப்படி அன்னதான விசேஷத்தைச் சொல்லியிருக்கிறது. அது பௌத்த சம்பந்தமான காப்பியம். பௌத்தம், ஜைனம் எல்லாமே கலந்தாங்கட்டியாக வைதிக சம்பிரதாயங்களோடு சேர்ந்திருப்பதாகவே தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களிலிருந்து தெரிகிறது. மணிமேகலைக்குக் காஞ்சிபுரத்தில் அக்ஷயப் பாத்திரம் கிடைத்து, அதை அவள் வைத்துக்கொண்டு சகல ஜனங்களின் பசிப் பிணியையும் போக்கினாள். இதற்கு அநேக யுகங்கள் முந்தியே இதே காஞ்சிபுரத்தில் ஸாக்ஷாத் அம்பாளும் இதே அன்ன தானத்தைப் பண்ணியிருக்கிறாள். ஜகன்மாதா இங்கே 'இருநாழி நெல் கொண்டு எண்நான்கு அறம் இயற்றினள்.' என்று சொல்லியிருக்கிறது.

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்



தம்முடைய திறமையை வெளிப்படுத்தினார். ஒன்பதாண்டுக் காலம், போதிய ஆங்கிலப் புலமை இல்லாமலேயே முதல்வர் பதவியைத் திறமையாக நிர்வகித்தார் என்பதும் ம. பொ. சி. காமராஜருக்குச் சூட்டிய புகழாரம்.

ஒருசமயம் தலைமைச் செயலகத்திலிருந்து வந்த கோப்பில் இருந்த ஆங்கிலத்தாள் ஒன்றைத் தமிழில் மொழி பெயர்த்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சொன்னாராம் காமராஜர். ''தமிழ் மொழி பெயர்ப்பது கஷ்டம்...'' என்றாராம் அந்த அதிகாரி. ''அப்படியானால் நீங்கள் அந்தப் பொறுப்பிலிருந்து விலகுங்கள், எளிதாகமொழிபெயர்க்கத் திறமை உடையவரை வைத்துக் கொள்ளுகிறேன்!'' என்றாராம் காமராஜர். ''அதிகாரிகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்ளுவார். அதே நேரத்தில் கண்டிப்பாகவும் இருப்பார் காமராஜர்'' என்று விளக்கினார் ம. பொ. சி.

பிடிக்காதவர்களோடு பேசமாட்டார்!

1936—ஆம் ஆண்டு தொட்டே அறிஞர் அண்ணாவுடன் ம. பொ. சிக்குப் பழக்கம் உண்டு என்பதும், ம. பொ. சி. அவர்களையும் அண்ணாவையும் நட்பில் இணைத்தது தொழிற் சங்க இயக்கம் என்பதும் இளைய தலைமுறை கேள்விப்படாத புதிய செய்திகள்.

அண்ணாவின் பேச்சுத் திறன் யாருக்கும் புதிதல்ல. ''தேனை மொய்க்கும் ஈக்கள் போல மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொள்வார்கள். அவ்வளவு கவர்ச்சியாக அவர் பேசுவார். எதிலேயும் 'ஏன்' என்று கேள்; 'எதற்காக' என்று கேள் – இதுதான் இளைஞர்களுக்கு அண்ணா போதித்த மந்திரங்கள். பழமையைத் தாக்குவதிலே பெரியாருடைய பிரசாரப் பாணி கடுமையானதாக இருக்கும். அண்ணாவினுடைய பாணி கருத்து வேறுபாடுடையவர்களும் செவிகொடுத்துக் கேட்கக் கூடியதாக இருக்கும்.'' பண்பாளர் அண்ணா என்பதற்கு ஒரு நிகழ்ச்சி கூறினார், ம. பொ. சி.:

'தம்மை மேடையில் வைத்துக்கொண்டே தமது இயக்கப் பேச்சாளர் ஒருவர் காமராசரைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய நேரத்தில், அதே மேடையில் அவரை மன்னிப்புக் கேட்கும்படி அண்ணா செய்தார்.'

'நட்புக்கு மிகமிக நல்லவர் அண்ணா. ஒருவருடைய பேச்சோ, செயலோ தமக்குப் பிடிக்காத நேரங்களிலே அவர்களோடு அதிகம் பேச மாட்டார். பிடித்திருந்தால் அவர்களோடு நிறையப் பேசுவார். அந்தப் பண்பு காரணமாக யாரோடும் பகை ஏற்படுவதை அவரால் தவிர்க்க முடிந்தது. அதே நேரத்தில் அண்ணா தன்னிடம் பேசாமல் மௌனம் காப்பதிலிருந்தே தன் தவற்றைப் புரிந்து கொண்டவர் திருத்தியும் விடுவார்.'

அண்ணாவை 'அறிஞர்' என்றும், 'தமிழ் நாட்டு பெர்னாட்ஷா' என்றும் அழைத்தவர் 'கல்கி' தானே?

பெர்னாட்ஷாவோடு ஒப்பிட்டது கல்கி அவர்கள்தான். ஆனால் அறிஞர் என்று

அடுத்த இதழில்

தோழர் எம்.கே.



1946. பொன்மலையில் இரயில்வே தொழிலாளர்களின் மாபெரும் கூட்டம். தோழர் எம். கே. பேசுவதற்காக எழுந்ததும் கூட்டத்தில் தொழிலாளர்கள் விம்மி அழும் ஒலி கேட்கிறது. தோழர் எம். கே. மேடையில் வீற்றிருக்கும் தலைவர்களைத் திரும்பிப் பார்க்கிறார். அவர்கள் கண்களிலும் நீர் உருண்டோடுகிறது.

கண்ணுக்குக் கண்ணான ஒரே மகனைக் காலையில் மண்ணில் புதைத்து விட்டு, மாலையில் மக்கள் முன் நிற்கும் தோழர் எம். கே. யின் கடமை உணர்வு கண்டுதான் அவர்கள் நெகிழ்ந்தார்கள். அந்தக் கூட்டத்தில் அழாதவர் கல்யாணசுந்தரம் ஒருவர்தான்!

தமது 50 வருட அரசியல் அனுபவத்தில், இப்படிப்பட்ட நெகிழ்ச்சியான, மகிழ்ச்சியான, சங்கடமான, கஷ்டமான பல்வேறு சூழ்நிலைகளைச் சந்தித்திருக்கிறார், எம். கல்யாணசுந்தரம். 75 வயது கடந்த அவர் நான்கு தலைமுறைத் தலைவர்களுடன் பழகியுள்ளார். அடுத்த இதழில் தமது அனுபவங்களை கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

முதலில் அழைத்தவர் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள்தான். ஆனால் அவர் எப்படிப்பட்ட அறிஞர் என்று அடையாளம் காட்ட, கல்கி அவர்கள் பெர்னாட்ஷாவோடு ஒப்பிட்டார். இதிலே பெரியார் சொன்னதற்கும் கல்கி சொன்னதற்கும் இடையே ஒற்றுமையைக் குறிப்பிட்டுக் காட்டினார் ம. பொ. சி.

அநுமனா, அபிமன்யுவா?

ராஜாஜியைத் தமது அரசியல் குருவாக ஏற்று மதித்த ம. பொ. சி. அவர்களிடம், நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி:

'ராஜாஜியை ராமனென்றும், தங்களை அநுமன் என்றும் வர்ணித்துக் கொண்டீர்களே?'

ம. பொ. சி. யின் பதிலில் இயற்கையான நகைச்சுவை பளிச்சிட்டது இங்கே:

''ராஜாஜியை ராமரென்று சொன்னேன் என்பது சரி. என்னை அநுமன்என்று சொன்னதாக நினைப்பில்லை. மற்றும், போர் முடிந்து ராமன் ஆட்சிக்கு வந்த போது அவனது அரியணையின் அடியில் நிற்கவேணும் அநுமனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு அதுவும் கிடைக்காததால் அநுமன் என்று உரிமை கொண்டாடுவதற்குச் சந்தர்ப்பமில்லை. ஆனால் அதற்கு முன்னால் மதுரைப் பொதுக் கூட்டத்தில், ராஜாஜி ராமச்சந்திர பிரபுவானால், நான் அவர் கையிலுள்ள கோதண்டம் என்று சொன்னேன். எனக்குப் பின்னால் ராஜாஜி பேசுகிற பொழுது, 'என்னை விடவும் கிராமணியாரைத்தான் என் எதிரிகள் அதிகமாக வெறுக்கிறார்கள். எதிரிகள் வகுத்துள்ள வியூகத்தை உடைத்து உள்ளே என்னை அழைத்துப் போகிற அபிமன்யுவாக அவர் இருக்கிறார்!' என்று சொன்னார்.''

பாகிஸ்தான் பிரிவினையை முதலில் எதிர்த்தாலும், பிறகு அதன் அவசியத்தை உணர்ந்து ஆதரித்தவர் ராஜாஜி. சந்தர்ப்ப சூழ்நிலையின் மாறுதலை எளிதில் புரிந்து கொள்ளுகிற அளவு அவர் மனம் பக்குவம் பெற்றிருந்தது. அதற்கான பழியை ஏற்றுக் கொள்ளும் துணிவும் அவருக்கிருந்தது என்று ராஜாஜியின் குணநிசயத்தைச் சிலாகித்தார் ம. பொ. சி.

'ராஜாஜி அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, கோப்புகளைப் புரட்டி, தனி நபர்களின் தேவைகளை வழங்க முடியாத ஒரு நிலையில் தான் அவர் ஒரு கல் நெஞ்சினர் என்று பெயர் எடுத்தார். ஆனால் அவர் நல்ல ஈர நெஞ்சினர். யாரையும் சுலபத்தில் நம்பிவிட மாட்டார். நம்பிவிட்டால் எந்த நிலையிலும் கைவிடமாட்டார்!''

''கூரை இழந்த சுவர்கள்..!''

எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், அரசியல்வாதி, சமுதாயத் தொண்டர், கலைவிமர்சகர், சுதந்திரப் போராட்ட வீரர் என்று எந்தக் கோணத்தில் பார்த்தாலும் பிரகாசித்தவர் பேராசிரியர் கல்கி அவர்கள்.

சிறுகதைகளையும், நாவல்களையும், அரசியல், சங்கீதக் கட்டுரைகளையும் எழுதவே நேரம் போதாத நிலையில் இருந்த

போது கல்கி அவர்கள் எட்டயபுரம் பாரதி மண்டபமும், கிண்டி காந்திமண்டபமும் நிறுவியதைக் குறிப்பிட்டார் ம.பொ.சி.

மரணம் எப்போதும் உருக்கமாகத்தான் இருக்கும். அதிலும், உறுதியான நட்பில் கட்டுண்ட இருவரில் ஒருவரைக் காலன் அழைத்துக் கொண்ட போது எப்படி இருந்திருக்கும் மற்றவருக்கு? ம.பொ.சி.யே சொல்கிறார்:

''கல்கி அவர்கள் மறையும் முன்தினம்: சென்னைப் பொது மருத்துவமனையிலிருந்து திரும்பியிருந்தார். என் உடல்நிலை பற்றி 'செங்கோல்' இதழில் பார்த்துவிட்டு 'உடம்புக்கு என்ன?' என்று ஃபோனில் அழைத்து விசாரித்தார். நானும் அவர் உடம்பையும் எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன்.

கல்கி சொன்னார்: ''இந்த டெலிபோனைக் கண்டுபிடித்தவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இரண்டு நோயாளிகள் படுக்கையிலிருந்த வண்ணம் உடல்நலத்தை விசாரித்துக் கொள்ளப் பயன்படுகிறது பாருங்கள்! ஏதோ ஆவி உலகத்தில் இருப்பவர்கள் போலல்லவா ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் நாம் பேசிக் கொள்கிறோம்!'' என்றார்.

இப்படி நாங்கள் பேசிக் கொண்ட மறு நாள், அதே காலைநேரம்— ஆறரை மணிக்கு டெலிபோன் ஒலித்தது. எடுத்துக் கேட்டேன். கல்கி கிருஷ்ணமூர்த்தி காலமாகி விட்டார் என்ற செய்தி காதில் விழுந்தது. திடுக்கிட்டேன். ஆம், அவர் உண்மையிலேயே ஆவியுலகத்துக்குச் சென்றுவிட்டார். இந்த உலகை விட்டுப் பிரியும் முன் கடைசியாக ஒரு முறை என்னிடம் பேசிவிட வேண்டும் என்று அந்த ஆன்மா எண்ணியது போலும்!'' என்று உருக்கமாக முடித்தார் ம. பொ. சி.

'கல்கி தொட்ட. தொண்டுகள் எல்லாம் கூரையை இழந்த சுவர்கள் போல நிற்கின்றன' என்று கல்கியின் மறைவை ராஜாஜி வானொலியில் குறிப்பிட்டதை மறக்காமல் நினைவு கூர்ந்தார் ம. பொ. சி.

பெரும் தலைவர்களை நண்பர்களாகப் பெற்றது ம. பொ. சி. செய்த பாக்கியம் எனில் அவர்களின் உயர் பண்புகளை சிலம்புச்செல்வர் கூறக்கேட்டது நம் பாக்கியமாக அமைந்தது.

தொகுப்பு: **சித்தார்த்**

அஞ்சலி

மாறாத புன்னகை முடிவற்ற சேவை



○ சௌந்தரம்.

சின்ன வயதிலேயே, மகாத்மாஜியைச் சந்திக்கும் பேறு பெற்ற சௌந்தரத்திடம் காந்திஜி கேட்டார்: ''உன்னுடைய எதிர் கால ஆசை என்ன?''

''டாக்டராகி கிராமங்களில் பணியாற்றப் போகிறேன்'' என்று தயங்காமல் பதில் சொன்னார் சௌந்தரம்.

இது வெறும் வார்த்தையாக நின்று விடவில்லை. புகழும் செல்வமும் நிறைந்த டி.வி.எஸ். குடும்பத்தில் பிறந்தும், போக்கு வரத்து வசதிகள் ஏதும் இல்லாத அந்தக் காலத்துக் கிராமங்களுக்குக் கட்டுமரம், கட்டைவண்டி, கால் நடை என்றுஓடோடிப் போய் மருத்துவ உதவி செய்தவர் 'அம்மா.'

மகாத்மாஜியைநினைவுபடுத்துகிற மோகனப் புன்னகையுடனேயே காலமெல்லாம் சமூகப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு காந்திக் கிராமம் என்கிற ஓர் ஆலமரத்தையும் உருவாக்கியவர் திருமதி சௌந்தரம்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக 'அம்மா'வுடன் பழகிய திருமதி **சரோஜினி வரதப்பன்**. அண்மையில் காலமான அன்னாரைப் பற்றி நினைவு கூர்ந்தவை:

''கோவளம் போக அப்போதெல்லாம் சாலைகள் இப்போது போல் இல்லை. சேளம் பாக்கம் வரை காரில் போவோம். அப்புறம் உப்பங்கழியில் கொஞ்ச தூரம் கட்டுமரத்தில் பயணம். அதன் பிறகும் கோவளத்துக்கு மணலில் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் மாட்டு வண்டி வரும். அம்மா வருகிறார்கள் என்றால் வழியெல்லாம் பெண்கள், குழந்தைகள் என்று நின்று கொண்டு ஆசையோடு வரவேற்பார்கள். இதேபோல் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அவர் பயணம் போனார்.

''கழனி வேலைக்குப் போகிற தாய்மார்களின் குழந்தைகளின் கல்வி, பேறுகால உதவி என்று பல ஆக்கப் பணிகள். இந்த மாதிரி வேலைகளில் அரசாங்கம் ஈடுபடுவதற்கு வெகு காலம் முன்பே மகாத்மாஜி நிறுவிய கஸ்தூர்பா டிரஸ்ட் பெரும் பங்கு ஆற்றியது.

''தமிழ்நாட்டுக்கு நீதான் 'பிரதிநிதி' என்று அம்மாவை பாபுஜியே நியமித்துவிட்டார். அந்த ஆரம்ப நாட்களில் அம்மாவுக்கு இருந்த உற்சாகம் சொல்லி முடியாது. மூன்றும் வகுப்பு ரயில் பயணம் அம்மாவுக்கு ரொம்பவும் விருப்பமானது. இவ்வளவு வசதியான குடும்பத்து 'அம்மா' இப்படிப் பயணம் போகலாமா என்று நான் ஆச்சரியப்படுவதுண்டு. பாபுஜியின் எளிமை அந்த அளவுக்கு அவரை ஆட்கொண்டது.

நான் புதுதில்லியில் மத்திய சமூக நலத் துறையில் தலைவராக இருந்த போது, 'அம்மா ஒருசமயம் வந்து என்னுடன் தங்கினார்கள். மறுநாள் என்னுடனேயே செக்ரடேரியட் வருகிறேன் என்றார்கள். 'என்ன அம்மா' ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் சொல்லுங்கள். நானே போய்க் கவனிக்கிறேன்' என்ற போதும் விடவில்லை. அவரே முன்னாள் அமைச்சர்தான். தொலைபேசியில் அழைத்துச் சொன்னால் கூடக் காரியம் ஆகி விடும் என்ற நிலை. ஆனால் குமாஸ்தா ஆனால் கூடக் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் இருந்து பார்த்துக் காரியத்தை முடித்துக் கொண்டு தான் வருவார். அவ்வளவு எளிமை. இந்த மாதிரியே 'ஒவ்வொரு செங்கல்லாக' என்பார்களே அப்படி அம்மா உருவாக்கியதுதான் இன்றைய காந்தி கிராமம்.

''கிராமப்புற சுகாதாரம், குழந்தைகள் நலன், பேறுகால வசதிகள், ஊட்டச்சத்துள்ள உணவு — பெண் கல்வி, விதவைகள், ஆதரவற்றோர் மறுவாழ்வு, என்று ஏராளமான துறைகளில் தனி ஒருவராக நின்று தொண்டாற்றி மகத்தான வெற்றி கண்டவர் அம்மா.

''யார் யாருக்கெல்லாமோ ஜம்னாலால் பஜாஜ் அவார்டு கிடைக்கிறது. அம்மாவுக்குக் கிடைக்கவில்லையே என்பது தான் என்னுடைய வருத்தம். அவார்டோ, பணமோ எதுவானால் என்ன காந்திக் கிராம ஆலமரத்துக்குத்தானே பாயப் போகிறது... அவருக்கு என்று கடைசிவரை வேண்டியிருந்தது எப்போதும் தூய கதர் உடையும் புன்னகையும்தான்.''

—சுப்ரபாலன்

வேதாளமும் ஜெயமன்மதனும் 2

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத ஜெயமன்மதன் மீண்டும் வந்து தியேட்டர் இருக்கையில் அமர்ந்த போது பக்கத்து ஸீட்டில் 'ஹெ', 'ஹெ', 'ஹெ' என்று எக்காளக் குரல் கேட்டது. வேதாளம்!

''போன வாரம் சொல்லாமல் கொள்ளாமல் காணாமல் போய் விட்டு இந்த வாரம் என்ன வீரப்பா சிரிப்பு!'' என்று ஜெயமன்மதன் எரிச்சலுடன் வினவ வேதாளம் மறுபடி எள்ளி நகையாடியது. வியர்வை நயாகராவாகக் கொட்டியது ஜெயமன்மதனுக்கு.

''பயம் வேண்டாம். தீபாவளி ரிலீஸ் படங்களை எல்லாம் பாருங்கள். கடைசியில் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறுங்கள்... டைட்டில் ஆரம்பித்துவிட்டது. படம் பாருங்கள்'' என்றது வேதாளம்.

உன்னை நான் சந்தித்தேன்

இளமை பொங்கும் ரேவதி கல்லூரிக்குக் கிளம்பி விட்டார். இளமை இன்னும் விடைபெறாத அம்மா சுஜாதா, கிளம்பி விட்ட மகளுக்கு ரொட்டி ஊட்டி விடுகிறார். துடுக்கு ரேவதி, மிடுக்கு சுரேஷிடம் மோதி இருவரும் கல்லூரி காண்டீனில் ஐஸ்கஜா றுவைக் காலி செய்கிறார்கள். மரப்பாலத்தில் டி.வி.எஸ்.-50ம், சைக்கிளும் மோதிக் கொள்கின்றன. அப்புறம்? காதல்தான். அந்த முதல் பாடலுக்கு அனைவரும் ஃப்ரீZ ஆவது நல்ல ஐடியா.

ரொம்ப நாளைக்கப்புறம் இளமையுடன் ஒரு காதல் கச்சேரி. ஜோர்தான். என்றால் இந்தக் காதல் இளசுகளிடம் பிறக்கிறதோ, என்றால் பின்னால் பிரச்னைகள் முளைக்கின்றனவோ, என்றால் இவர்கள் பிரியப்போகிறார்களோ என்று ஏக்கத்துடன் பார்த்தால், வண்டி திடீரென்று தடம் மாறுகிறது. சிவகுமார் (காதோரம் நரைத்த, கண்ணாடி போட்ட, தமிழ்ப் பேராசிரியர் – பாந்தம், வெகு பாந்தம்) நுழைகிறார். அப்புறம் பார்த்தால் அதுதான் மெயின் லைனே!

பொட்டிழந்த விதவை சுஜாதாவுக்கு, உயிருடன் இருக்கும் சிவகுமார் கணவன். அப்படியானால் ஃபோட்டோவில் இருக்கும் ரேவதியின் அப்பா சரத்பாபு? என்று நம் மனத்தில் வெகு சுவையான கேள்வி விதையை நடுகிறார்கள். அது செடியாக, மரமாக மாற மாற விளக்கம் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். இன்ட்டரெஸ்டிங்!

மேலே மேட்டிலிருந்து ஒரு சைக்கிள் ஜிகுஜிகு என்று இறங்குகிறது. இந்தப்பக்கம் இரண்டு சைக்கிள்கள் 'சேருகின்றன. எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து இளமை ஊர்வலமாய் ஆகும் இடத்தில் ஒளிப்பதிவாளர் தம் பெயரைச் சொல்ல வைத்திருக்கிறார். வெல்டன் தினேஷ்பாபு.

இந்தியன் நியூஸ் ரீலில் ஹெலிகாப்டர் 'சகசக' என்பது, மருதபாண்டியன் கவுண்டமணியும், மலையாள ஒய். விஜயாவும் குதிரை மேல் காதலிப்பது என்று ஏகப்பட்ட இடங்கள் மனம் விட்டுச் சிரிக்க.

அப்புறம் ரசிக்க மூன்று பாடல்கள். இளையராஜா நிறைய உழைத்திருக்கிறார். சிவகுமார் மூலம் ஒரு ஃப்ளாஷ்பாக், சுஜாதா மூலம் ஒரு ஃப்ளாஷ்பாக் என்றாலும் இரண்டிலும் நடை துள்ளல்தான்.

அதுவும் அந்தச் சந்தேக சிவகுமாரிடம் 'நான் அவரை மேடையிலேயே விட்டுட்டு வந்துட்டேன், நீங்க அவரை பெட்ரூம் வரைக்கும் கூட்டிட்டு வந்துட்டீங்களே' என்று சுஜாதா குத்தும் இடம், ஆண்களை மெல்லிய ஊசியால் நகக் கண்ணில் குத்தும் இடம். சுஜாதாவின் ஃப்ளாஷ்பாக்கில் ஒரே ஒரு இடம் மட்டும் உறுத்துகிறது. 'மெட்ரூஸ்–ஐ' உறுத்துகிற மாதிரி. விவரம் தெரியாத ஒரு குழந்தை கேட்டது என்பதற்காக புருஷன் இருக்கும்போதே பூவையும், பொட்டையும் ஒருத்தி எடுப்பதா? கதை சுவையாய் இருக்க வேண்டும் என்று டைரக்டர் எடுத்த முடிவா? இது போக வேறு பல சிறப்பான இடங்கள் டைரக்டர் கே. ரங்கராஜ் என்று திரும்பத் திரும்பச் சொல்ல வைக்கின்றன. என்றாலும் முற்றும் கற்ற பூனை போயும் போயும் கழனிப்பானையில் தலையை விட்ட கதையாய் அந்தக் கடைசியில் எதற்கு இந்த பல்டியாம்? இது ஒன்றும் டைரக்டர் பெயரைச்சொல்லவில்லை.



வெள்ளித்திரை



''ஏறக் குறைய எல்லோருமே இயல்பாய் நடித்திருப்பதால் தனித்தனியே ஒவ்வொருவர் பெயரையும் குறிப்பிட வேண்டுமா வேதாளம்?'' என்று ஜெயமன்மதன் கேள்வி கேட்ட போது. ''அடுத்த அடுத்த படம், அடுத்த படம்...''என்று வேதாளம் அவசரப் படுத்தியது.

உறவைக் காத்த கிளி

தன்னம்பிக்கை வேண்டியதுதான், ஆனால் இந்த அளவுக்கா? சகலகலா வல்லவன் என்று சொல்லிக் கொள்கிற டி.ராஜேந்தரும் உபதேசத்தை ஊட்டி விடுவதற்காக எடுத்திருக்கும் படம்.

எங்கே ஆரம்பிக்கிறது கதை? எங்கே போகிறது?

'யாரோ வருவார் யாரோ போவார்' என்று கண்ணதாசன் சொன்ன மாதிரி நிறைய பேர் வந்து, ராஜேந்தரிடம் அடுக்கு வசனமும், உதையும் பெற்று விசனம் கொள்கிறார்கள். எதற்காக இத்தனை ஆவேசச் சண்டைகள்!

குறிப்பிடலாம் என்று யோசித்தால்:

குடி ராஜேந்தர் தன்மானக் கொள்கையுடன் உள்ளே நுழைந்து (கதவு நிஜமாகவே உடைகிறது) சாப்பாட்டை (குழந்தைகளிடமிருந்து பிரித்து) தூக்கி எறிந்து ஒரு ஆட்டம் ஆடுகிறாரே — அதே வேகத்தில் வெளிநடப்பு செய்கிறாரே, புயல் முன்னறிவிப்பின்றி வந்து சேதம் செய்து விட்டு ஓடிப்போன மாதிரி இருக்கிறது.

'சிறு துளி பெருவெள்ளம்'பழமொழியைச் சாராயம் சேர்ப்பதற்காகப் பயன்படுத்தி இருப்பது நல்ல ஜோக்.

இந்தப் படத்தில் ராஜேந்தருக்கு இரட்டை வேடம். அவருக்கென்று ரசிகர்கள் இருக்கும் வரை இப்படி எட்டு வேஷங்கள் கூட போடலாம். வேண்டாம் என்றுசொல்லவில்லை. அதற்காக இவர் ரசிகர்கள் மட்டும் படம் பார்க்க வந்தால் போதுமா என்ன?

பாடல்கள் — ம்ஹூம்ஹூம்.

'புதுமுகப் பொம்மைகள் ஜீவிதா —ஜயந்த். என்ன செய்கிறார்கள் இந்தப் படத்தில் வெறும் டூயட் பாட மட்டுமா?

குடிக்காதே என்று நீதி சொல்லப் போகிறேன் என்று முதற்காட்சியில் வருகிறது — ராஜேந்தர் முகத்துடன், பின்னணியில் அவர் குரல். மெஸேஜ் கன்வே ஆகி விட்டது என்று அப்போதே எழுந்து வந்திருக்கலாமோ?

இப்படிப் பல கேள்விகளுடன் குழம்பிக் கொண்டு வேதாள பயத்துடன் பக்கத்து இருக்கையைப் பார்த்தால்—


வேதாளம் நீண்ட 'கொர்' 'கொர்'களுடன் இருக்க,

தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஜெயமன்மதன் வில்லம்பாக 'விர்'ரிட்டுவிலகியாகி விட்டது. அப்புறம் அடுத்தவாரம் தான்.

தீபாவளி திரைப்படங்கள்

ஏராள ரிலீஸ்களைப் பார்த்து ஆய்ந்து ஓய்ந்து போயிருந்த ஜெயமன்மதனை ஒரு வரி மதிப்பீட்டுக்காகக் கேள்வி கேட்டுக் குடைந்து கொண்டிருந்தது வேதாளம். முருங்கை மரத்தடியில் உங்களுக்காக ஒட்டுக் கேட்டபோது:

வேதாளம்: ஓசை எப்படி?
ஜெயமன்மதன்: கருதி பிசகினாலும் இசையே.
வே: உன்னை நான் சந்தித்தேன்?
ஜெ: ஆயிரத்தில் இல்லை எனினும் நூறில் ஒருவன்.
வே: வைதேகி காத்திருந்தாள்?
ஜெ: ஒட்டுப் போட்ட வெல்வெட் புடவை.
வே: மை டியர் குட்டிச்சாத்தான்?
ஜெ: எல்லா வயசுக்கும் ஏற்ற மத்தாப்பு!
வே: நீ தொடும் போது?
ஜெ: மறுபடியும் சொல்ல வேண்டுமா?
வே: உறவைக் காத்த கிளி?
ஜெ: கிளியா? கண்ணைக் கொத்தும் கழுகு!
வே: ஓ மானே! மானே!
ஜெ: ஐயோ, செத்தேனே!
வே: நல்லவனுக்கு நல்லவன்!
ஜெ: பாதிக்கு மேல் வல்லவன்.
வே: இயற்கையின் அதிசயங்கள்!
ஜெ: இனித்திடும் ரகசியங்கள்.
வே: வம்சவிளக்கு?
ஜெ: கழுத்து கனுக்கு!
வே: மற்ற படங்கள்?
ஜெ: உடலில் தெம்பிருந்தால் அடுத்த வாரம்!



தீ மிதிக்க நான் தயாராய் இருக்கேன்!
வேணாங்க!
பொதுத் தேர்தல்
பாஸ்கர ராவ்
சரண்சிங்கின் புதிய கட்சி
கட்சிக் கொள்கை
கள்ளிச் செடியிலே பூ மட்டும் நல்லா இருந்து என்ன பிரயோஜனம்?



கல்கி

1984 நவம்பர் 4
மலர் : 43 இதழ் : 14
ரக்தாக்ஷி ஐப்பசி 19



உண்மைதான் — முழு உண்மை அல்ல!

தமிழக அமைச்சரவையில் அதிகாரப் போட்டி, பலப்பரீட்சை ஏதும் நடக்காததும் அப்படி நடந்திருந்தால் அது வெளியே தெரியவராத அளவில் சாமர்த்தியமாக நடந்து கொண்ட முறையிலும் அமைச்சர்கள் விவேகத்துடன் செயல்பட்டிருக்கிறார்கள்.

''முதல்வர் வாய்மொழியாக என்னிடம் 'அவரது கோப்புகளைக் கவனிக்க அதிகாரம் அளித்தார், எனவே நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று நெடுஞ்செழியன் கூறியதில் பிசிறு தட்டியதென்னவோ உண்மைதான். ஆனால் சீக்கிரமே ஆளுநரின் அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளியானதில் இந்த அசம்பாவிதமும் அடிபட்டுப் போயிற்று. அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் நெடுஞ்செழியனே தலைமை வகிப்பார் என ஆளுநர் அறிவித்துள்ளதால் நெடுஞ்செழியன் தாற்காலிக முதலமைச்சர் — அப்படி அதிகாரபூர்வமாக நியமிக்கப்படாவிட்டாலும் — ஆகிறார்.

முதல்வர் ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறப் போராடிக் கொண்டிருக்கையில் அமைச்சர்கள் ஒற்றுமை காண்பிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தலைக்குத் தலை ஒவ்வொன்று பேசிக் குழப்பத்தை விளைவிக்காமல் ஒருங்கிணைந்து செயல்படுவது போன்ற எண்ணத்தை நம்மிடம் ஏற்படுத்தி வருகிறார்கள். இது பாராட்டுக்குரியது.

இப்படிப் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும் அமைச்சரவையினர், முதல்வருக்கு வந்துள்ள நோய்களின் தன்மைகளையும் அவரைச் சூழ்ந்துள்ள ஆபத்துக்களின் அளவையும் ஆரம்ப முதலே குறைத்து மதிப்பிடவும் மறைத்து விடவும் முயன்ற அவிவேகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மக்களுக்கு அதிர்ச்சி ஏற்படக் கூடாது என்பதாலோ அல்லது இவர்களுக்கே பிரத்யட்ச நிலையைச் சந்திக்க அச்சமாயிருந்த காரணத்தினாலோ அல்லது வேறு ஏதோ உள் நோக்கத்துடனோ அபாயத்தைக் குறைத்தும் மறைத்துமே அறிக்கைகள் வெளியிட்டு வந்துள்ளனர். டாக்டர்களும் இருட்டடிப்பு செய்து வந்தது அமைச்சர்களின் கட்டளையின் பேரிலா அல்லது அதீத தன்னம்பிக்கையின் விளைவான அசட்டுத்தனமா? அமெரிக்க டாக்டர்கள் வந்து கூறிய பிறகுதான் மக்கள் யதார்த்த நிலையை உணர்ந்தனர். இப்போதும் கூட — இதை எழுதுகையில் — அமைச்சர் ஹண்டே, எம். ஜி. ஆர். சுற்று வட்டாரத்தைப் புரிந்து கொள்கிறார், மூளையில் ஏற்பட்ட வீக்கம் குறைந்துள்ளது, புன்னகைக்கிறார், எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உள்ளன என்றெல்லாம் சொல்கிறார். இவை உண்மைதான். ஆனால் முழு உண்மை அல்ல.

மூளையில் பைபாஸ் ஆபரேஷன் என்பதும் — அது ஜப்பானில் நடக்குமானாலும் — சிறுநீரக மாற்று ஆபரேஷன் என்பதும் — அது அமெரிக்காவில் நடக்குமானாலும் — எளிதான காரியங்கள் அல்ல. முதல்வருக்கு நீரிழிவு நோய் உள்ளது, சிறுநீரகங்கள் இரண்டுமே பழுதுற்று உள்ளன, மூளையின் ஓர் இரத்த நாளத்தில் இரத்தம் உறைந்து போக உடலின் ஒரு பக்கம் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டது; செயற்கை சிறுநீரகம் பயன்படுத்தப்படுவதால் இருதயம் பலவீனமடையும் வாய்ப்பு உண்டு. சுவாசத்துக்கும் செயற்கை உதவி தேவைப்படுகிறது. இவ்வளவையும் மீறி அந்த மாவீரர் எமனுடன் போராடிக் கொண்டிருக்கிறார். மக்களின் பிரார்த்தனையும் வைத்தியர்களின் ஆற்றலும் துணை நிற்க அவர் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகிறோம். அதேசமயம் முதல்வருக்கான பொறுப்புக்களை இன்னும் நீண்ட காலத்துக்கு அவர் ஏற்க முடியாது என்பதையும் அமைச்சரவை புரிந்து கொண்டு மக்களுக்கும் உணர்த்த வேண்டும். அவர்களிடமிருந்து எதையும் மறைக்க இவர்களுக்கு உரிமை இல்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

இதுவரை

தன்னைத் துரத்தி வந்த பெந்தராக்களிடமிருந்து தப்பி, சோமந்தலம் வந்து சேர்ந்த வாலிபன் மாற வர்மத் தேவன், நகரம் வெறிச்சோடியிருக்கக் காண்கிறான். 'கொள்ளையடிப்பதிலும் பெண்கள் கற்பைச் சூறையாடுவதிலும் வீரம் காட்டும் மராத்தியர், பெந்தராக்கள்' என ஒரு கிழவன் கூறக் கேட்டறிகிறான். அவர்களுக்குப் பயந்துதான் நகரவாசிகள் ஓடிவிட்டிருக்கின்றனர். ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்க, அத்திசையில் சென்று அந்த வயதான பெண் பிரசவ வேதனையில் துடிப்பதைக் காண்கிறான். உதவிக்கு நின்ற உயர் குலத்து இளநங்கையை அவன், 'சிந்து நீங்க இங்கிருந்தால் ஆபத்து. போயிருக்க' என்று துரிதப்படுத்துகிறான். சிந்து இவனை ஒருமுறை 'நீ நல்லவனா கெட்டவனா?' என்று வினவுவதுபோல் பார்த்துவிட்டு அவசரமாகக் குதிரை ஏறிச் சென்றுவிடுகிறாள்.

பெந்தராக்கள் வருகின்றனர். வீதியில் அவர்களை எதிர்த்து வாள் சுழற்றும்மாற வர்மத் தேவனை நன்றாக அடித்து நொறுக்கிவிட்டு ஊரைச் சூறையாடித் திரும்புகின்றனர். முதலில் பார்த்த கிழவன் இவன் சுயநினைவு திரும்ப உதவி ஒளடதமும் தருகிறான். சற்று தெம்பு பெற்ற மாறவர்மன் பிரசவ வேதனையில் துடித்தவளின் நினைவு வர அவளைப் போய்ப் பார்க்கிறான். இதற்குள் குழந்தையைப் பெற்



மோகினி திருக்கோலம்



நெருங்கிருக்கும் அவள், இவ னிடம் ஏதோ கூற யத்தனித்து முடியாமல் போக ஒரு பதக்கத்தை இவன் கரத்தில் போட்டுவிட்டு உயிர் துறக் கிறாள்....

3

சுனை நீர் அருகே கணைகள்

அந்த வீட்டுப் புழக்கடைப் பாரிசத்து முற்றத்தில் நடக்கும் அத்தனை சாட்சி யையும் பெரியவர் அதிச யித்துப் பார்த்தார்.



வர்மன் கலங்கிக் கிடப்பதையும், குழந்தை குவா குவா இரைப்பதையும், பெண்மணி மெள்ள மரண வாயில் அடங்குவதையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வர்மன் அப்போது சடக்கெனக் கீழே அமர்ந்தான். ''பெரியவரே பாரும். இந்த அம்மணி யார்?'' என்றான். களைப்பில் அவன் உடம்பு சுருண்டது.

பெரியவர் அந்த விரிசல் கவரில் பதவாகமாகக் கால் வைத்து உள்ளே வந்தார். நாலாபக்கமும் பார்த்தார். ''தம்பி! இங்கே ஒரு குடித்தனமே நடந்திருக்கிறதே!'' என்றார்.

அந்தப் பெண்மணியைக் குனிந்து நோக்கினார்.

அழகான முக விலாசத்துடன், சிற்ப அமைப்பில் இருந்தாள் அவள்.

கழுத்து கை எல்லாம் வெறுமை.

சந்தனக் குழம்பு போன்ற மேனி!

கண்களின் வில் வளைந்த வளைவு அபிநயச் சமைவில் இருந்தது.

கண்ணுக்குக் கீழ் அந்த வாட்டமும், உடம்பு எங்கும் பரந்த நலிவும் அவள் கஷ்டத்திலோ, நோயிலோ நொந்திருக்கிறாள் என்று தெரிவித்தது.

பெரியவர் கண்கள் அவள் பாதங்களில் விழுந்தன.

செந்தாமரை நிறத்தில் அபூர்வ வெண் சங்கு போல் வடிந்திருந்தது.

காலின் மேற்படத்தில் செம்பஞ்சு வரைந்த சித்திரங்கள்.

''தம்பி! ஒரு உயர்குலப் பெண் போல் தோன்றுகிறாளே!'' என்றார்.

''இவளைத் தெரியுமா?'' என்றான் வர்மன்.

''தெரியாது. இவள் இங்கே எப்படி வந்தாள்? இவளை அழைத்து வந்தது யார்? இங்கே எத்தனை நாள் குடி இருந்தாள்? எதுவும் தெரியவில்லையே!'' என்றார் பெரியவர்.

அதற்குள் குழந்தை குவா குவா என்று இன்னும் பலமாக வீறியது.

பொங்கும் கருணையுடன் நோக்கி, துணிச் சிக்கலிலிருந்து விலக்கி, கைகளில் புனிதப் பொருள் போலப் பத்திரமாகக் குழந்தையை ஏந்திக் கொண்டார் பெரியவர்.

குழந்தைக்கு நல்ல சளை!

சுட்டிப் பார்க்கும் இருட்டு விழிகள். இரண்டு பதுமக் கன்னங்கள். கரும் சுருள்களாகத் தலைச் செழிப்பு!

''ஏதாவது அடையாளம் தெரிகிறதா?'' என்றான் வர்மன்.

வெறுமனே சிரித்த பெரியவர், ''குழந்தை பசியால் துடிக்கிறது. ஏதாவது செய்ய வேண்டும்! உடனே வா!'' என்று அவனை அழைத்து, சுவரின் ஓட்டை வழியே வெளியே போனார்.

வர்மன் அவர் பின்னால் போனான்.

தெருவுக்கு இருவரும் வந்தார்கள்.

வர்மன், இரு பக்கமும் பார்வையைச் செலுத்தினான். அவனது குதிரை எங்கே?

பெரியவர் வீடு வரைக்கும் நடப்பது கடினமாக இருந்தது. இன்னும் உடம்பின் உபாதை குறையவில்லை. அங்கங்கே வலிகள் விண்விண் என்று உதைத்தன. சற்றுத் தூரம் நடந்ததுதான் தாமதம்; கண்முன் னால் சுழன்றுக் கொண்டு ஒரு இருட்டு ஓடிவர, நிற்க முடியாமல் தடால் என்று விழுந்தான்.

எத்தனை நாள் நினைவு வந்து போய்க் கொண்டிருந்தது தெரியாது.

ககன வெளிகளில் சுற்றுவது போலிருந்தது. பிரகாசமான பிம்பங்கள் வந்து போயின. சமயத்தில் நிசப்தமான இருட்டில் மூழ்கிக் கிடப்பது போலவும் இருந்தது.

நினைவு திரும்பியபோது, தூக்கத்திலிருந்து விழிப்பது போல் இருந்தது.

எத்தனை நாழி தூங்கி விட்டோம் என்று தான் நினைத்தான்.

இருக்குமிடத்தை ஊகித்து விட்டு, பார்வையைத் திருப்பிப் பார்த்தபோது,

ஸ்ரீவேணுகோபாலன்

பெரியவர் தாழ்வார அம்மியில் சிறுக்குச் சிறுக்கு என்று எதையோ அரைத்துக்கொண்டிருந்தார்.

அவர் புஜங்களின் தசைகள் பந்துபோல் வீங்கின. விலாப்பக்கம் அவர் உடம்பின் வஜ்ஜிரம் ஜொலித்தது.

''க்கும்'' என்று கனைத்தான் அவன்.

அவர் திரும்பினார்! அதிசயத்தோடு எழுந்து, கையில் அரைத்த மாவை உருட்டிக் கொண்டே வந்தார்.

அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

''தம்பி, பிழைத்து விட்டாயா? நாலு நாளாகக் கவலை தந்து விட்டாயே!'' என்றார்.

''என்ன! நாலு நாள் ஆகிவிட்டதா?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

''ஆமாம், தம்பி! நான்கு நாட்களாக உனக்கு நினைவு இல்லை! மராட்டியர் உன்னைச் செம்மையாக உதைத்திருக்கிறார்கள்!'' என்றார்.

''ஆமாம், பெரியவரே!'' என்று சொல்லிப் பார்வையைத் தாழ்த்தினான் அவன். அவனுக்கு அவமானமாக இருந்தது.

பெரியவர் அம்மிக்கு ஓடினார். குழவியை விரட்டிச் சீக்கிரம் விழுதுசளை வழித்து எடுத்தார். பாத்திரத்தில் வைத்து மூடிவிட்டு உள்ளே அடுப்பங்கரைக்கு ஓடினார். நொடிப் பொழுதில் ஏதோ காஷாயம் செய்து சற்றுச் சூடான நிலையில் அவன் முன்னால் வைத்தார்.

''ஒரு வாய் குடி தம்பி! தெம்பு வரும்'' என்றார்.

திடீரென்று நினைத்தவன் போல் ''ஆமாம், அந்தக் குழந்தை என்னவாயிற்று?'' என்று கேட்டான்.

பெரியவர் வரிகளோடு புன்னகை செய்தார்.

''தகுதியான இடத்தில் சேர்ப்பித்து விட்டேன்.''

''எங்கே?''

''ஒரு பெண்ணிடம்...''

''ஊரில்தான் யாருமில்லையே!''

''ஊரில் இல்லை! ஆனால் எங்கே அவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்!''

''அந்தப் பெண்மணி?''

''அவளைப் புதைத்திருக்கிறேன்.''

''நீங்கள் ஒருவராகவா!''

''ஆமாம்! ஊரில் இடகாத்திரர் யாரும் கிடையாது. என்னைப் போல் வயதானவர்கள் இருந்தால் உண்டு! தம்பி, குடி! ஆறிவிடப் போகிறது!''

வர்மன் ஒரு மடக்கை ஊற்றினான். முகம் பட்டென்று கருக்கமிட்டது. சக்கு உக்கிரமாக இருந்தது. சர்க்கரை அதைத் துவட்டினாற்போல் இருந்தது. வயிற்றுக்குள் ஒரு உத்வேகம் பிறந்தது.

பின்னும் பெரியவர் அவனை ஆதுரத்துடன் கவனிப்பதைப் பார்த்து,

''பெரியவரே, தாங்கள் யார்?'' என்றான்.

''நான் ஒரு சாதாரண மனிதன்! என்னை ஆசான் ருத்ரபதி என்று அழைப்பார்கள்!''

''ஓகோ ஆசானா! வித்தை கற்றுக் கொடுப்பீரோ?''

''தெரிந்ததைக் கற்றுக் கொடுப்பேன்.''

''தங்களுக்கு என்ன தெரியும்?''

''சமையல் தெரியும்.''

சிரித்தான் வர்மன். ''எனக்கு அது தெரிய வேண்டாம்.''

''அப்படிச் சொல்லாதே தம்பி! எது தெரிந்தாலும் நல்லதுதான்.''

''வேறு என்ன தெரியும்?''

''வைத்தியம்!''

''அப்புறம்?''

''அவ்வளவுதான்.''

''உங்கள் உடம்பைப் பார்த்தால் வைரம் பாய்ந்த மாதிரி இருக்கிறதே! அப்பியாசங்கள் பண்ணுவீரோ?''

சிரித்தார் ஆசான். ''தம்பி! எனக்கு மல், வில், சிலம்பு, வகையறாக்கள் எல்லாம் தெரியும்.''

''சொல்லவில்லையே! நானும் கொஞ்சம் கற்றிருக்கிறேன், பெரியவரே!''

''அரைகுறையாகக் கற்றிருக்கிறாய்!''

''இல்லை.''

''முழுதாகக் கற்றிருந்தால் உன் முதுகு இப்படி வீங்கி இருக்காது!''

மீண்டும் அவமானம் ஏற்பட்டது.

ஆசான் தொடர்ந்தார். ''கவலைப் படாதே! உன்னை முழுதாக்கி விடலாம். கொஞ்சம் சீர் செய்தால் போதும் தம்பி! சண்டையில் வலுவை விட உத்திதான் உயர்வானது. கையைச் செலவழிப்பதைவிட மூளையை நிறையச் செலவழிக்கவேண்டும்.''

வர்மன் பேசவில்லை. ஆசான் பேசியது எங்கேயோ தொடுவது போல் இருந்தது.

''என்ன தம்பி?''

''நாம் மட்டும் என்ன செய்ய முடியும் பெரியவரே!''

''அப்படிச் சொல்லாதே. நீங்கள் பலபேர் சேர்ந்தால் வெள்ளமாகி விடுவீர்கள் நாட்டை ஒரு குடைகீழ் கொண்டு வரலாம். இப்போது எத்தனை குடைகள் பார்த்தாயா?'' என்றார் பெரியவர்.

''பார்த்தேன். நாட்டில் யார், யார் எங்கெங்கே பரிபாலனம் பண்ணுகிறார்கள் தெரியவில்லையே!'' என்றான் வர்மன்.

''உண்மை தம்பி! அர்ச்சுனன் பெண்டாட்டிகளையாவது எண்ணி விடலாம்! இங்கே உள்ள ராஜ்யங்களை எண்ண முடியாது! தஞ்சை ராஜ்யம், திருச்சிராப்பள்ளி ராஜ்யம், சேதுபதி ராஜ்யம், மறவர் ராஜ்யம், கள்ளர் ராஜ்யம், நவாபு ராஜ்யம், இதெல்லாம் போதாததற்கு பரங்கிக்காரன் வேறு வந்திருக்கிறான். அட்டகாசம் பண்ணிக் கொண்டு! நாடு குழம்புகிறதே தம்பி, ஜனங்கள் அல்லாடுகிறார்களே! என்றைக்கு விடிவு காலம் வருமோ, தெரியவில்லையே!'' என்று இழுத்துப் பெருமூச்சு விட்டார் பெரியவர்.

வர்மன் பேசவில்லை.

பிறகு பெரியவர் எதையோ நினைத்தது போல் எழுந்து முற்றத்திற்கு ஓடினார். அங்கு உலர்ந்து கொண்டிருந்த களருகளை ஒதுக்கி வைத்தார்.

பிறகு அடுப்பங்கரைக்குச் சென்று பல சுறுசுறுப்பு வேலைகளைச் செய்துவிட்டு மீண்டும் கூடத்திற்கு வந்தார். வர்மன்



இதோ உங்கள்
மெய்க்காப்பாளர்!
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
கோத்ரெஜ்
ஸின்த்தால் துர்நாற்றத்தைப் போக்கும் சோப்
அனைவர் மெய்க்கும்
அவசியமான மெய்க்காப்பாளர்
CHAITRA-B G 189 TAM

இன்னும் யோசித்தவாறே அமர்ந்திருந்தான். படுக்கவில்லை.

''என்ன தம்பி?'' என்றார்.

''இந்த ஊர் ஜனங்கள் எங்கே போயிருக்கிறார்கள்?'' என்றான் வர்மன்.

''அதுதான் சொன்னேனே! பைரவிக் காட்டுக்குள் இருக்கிறார்கள். உனக்கு ஏன் தம்பி?''

''என்னை அழைத்துப் போவீர்களா, பெரியவரே!''

''உன்னையா'' சிரித்தார் பெரியவர். ''நீ இருக்கும் நிலையில் இன்னும் இரண்டு வாரம் ஆகும் பூரண குணம் அடைய!''

''அவ்வளவு நாட்களா?''

''ஆமாம். அதுமட்டுமில்லை. அதன் பிறகு உன்னை அரைகுறை வீரனாகவும் அனுப்ப எனக்கு விருப்பமில்லை. உன்னுடன் பழகிய தோஷத்தால் உன்னை முழு வீரனாக்க என் ஆசை!''

வர்மனின் கண்கள் பனித்திட்டன.

''ஆக்கி விடுவீர்களா, பெரியவரே!''

''நிச்சயம். மூன்று மாத அவகாசம் கொடு, போதும்.''

வர்மன் யோசித்தான்.

''யோசிக்காதே! நீ முழுமை ஆகாவிட்டால் உன்னால் வாழ முடியாது. உன் தந்தையையும் பார்க்க முடியாது. நீ இங்கே பட்ட அவஸ்தையை மனத்தில் வை!''

வர்மன் கலங்கினான். தந்தை என்றதுமே எப்போதோ பார்த்த அவரது முகம் மனத்தில் சில்லிட்டு மறைந்தது. அதே நேரம் தாயார் அவனிடம் வீரவாக்குச் சொல்லிக் கண்ணீரோடு அனுப்பியதும் நினைவுக்கு வந்தது.

ஒரு நீண்ட மூச்சுவிட்டு, ''உங்கள் விருப்பப்படி, பெரியவரே!'' என்று கூறினான்.

மோகனமான காலை ஒளியில் குதிரையில் அந்த கம்பீர புருடன் புறப்பட்டான்.


அவன் பார்வையில் ஒரு மிடுக்கும் அமர்ந்த நிலையில் ஒரு துடுக்கும் இருந்தது.

அவன் அருகில் கீழே ருத்ரபதி ஆசான் நின்று கொண்டிருந்தார்.

''உனக்கு மட்டும் அந்த வீட்லே பிச்சை போடுறாங்களே, எப்படி?''

''நான், 'அம்மா 'மஹேஜ்' தாயே! பிச்சை போடுங்க'ன்னு கேட்பேன். அதனாலேதான்!''

—எம். பூங்கோதை.



''ஏறும் குருவே! என் குதிரை தாங்கும்!'' என்றான் வர்மன்.

ஆசான் ஒரு எம்பில் குதிரை முதுகில் அமர்ந்து கொண்டார். ஒரு நாழிகையில் அவர்கள் பைரவிக் காட்டை அடைந்தார்கள்.

காட்டுக்குள் ஆசான் வழிகாட்டிக் கொண்டு போக, குதிரை இளைப்பு வாங்கியது.

அப்போது தான் குதிரைக்குத் தண்ணீர் காட்டவில்லை என்பதை உணர்ந்த வர்மன்,

''இங்கே அருகில் தண்ணீர் கிடைக்குமா?'' என்றான்.

''கிடைக்கும். இடதுபக்கம் நேராகப் போ! பாறை தென்படும். சுற்றிப்போனால் சுனை தெரியும்! நீயே போ! இல்லாவிடில் குதிரைக்குக் கஷ்டம்! நான் இங்கே நிற்கிறேன்'' என்று இறங்கினார் ஆசான்.

வர்மன் குதிரையைச் செலுத்திச் சென்றான். மர நெருக்கம் அதிகமாக இருக்க, கீழே குறுக்கும் நெடுக்குமாகப் போன வேர்க் கிளைகளைப் பார்த்துக் காலை பத்திரமாக வைத்துச் செல்லக் குதிரை சிரமப்பட்டது.

நெடிய பாறை வந்ததும் அதை வலமாகச் சுற்றிப் போக, திடீரென்று அங்கே தோன்றிய காட்சி அவனை மலைக்க வைத்தது.

ஸ்படிக நீர் கண்ணாடியாகத் தெரிய அந்தச் சுனை ஒரு குளம் போல வியாபித்திருந்தது.

அதன் கரை எங்கும் பசுமையான மரங்கள்!

காலைவெயில் அலைகளில் பட்டு ஒரு பொன் நிறத்தை உதிர்த்து விட்டிருந்தது.

காற்று அங்கே குளிர்ச்சியாக உதிர்ந்திருந்தது.

அந்த இயற்கை நேர்த்தியை அவன் பார்த்துக் கொண்டேவர,

சற்று வலப்புற எட்டத்தில் அவன்பார்வை போன போது ஸ்தம்பித்து நின்றது.

அங்கே ஒரு மரத்தில் குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

அதன் அருகே, அப்போது தான் குளித்து விட்டுப் புதிது உடுத்திக் கொண்ட அந்த அழகி நின்று கொண்டிருந்தாள்.

சேமந்தலத்தில் அவன் பார்த்த பெண் தான்! சிந்து!

கண்கள் இரண்டும் காந்தக் கற்களாக அவன் மீது விழ,

பார்வை ஒரு ஆகாய தாரகை போல் அசைவில்லாமல் அப்படியே நின்றது.

அந்த வினாடி அவன் மனம் அவனைவிட்டுக் கீழே விழுந்து ஒரு மீனைப்போல் தத்தளித்தது.

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண் திடீரென்று 'வீல்' என்று அலற,

அவனும் திடுக்கிட,

ஒரு வேகமான அம்பு அவன் காதோரமாக வீச் என்று சப்தித்து ஓடியது.

மயிரிழையில் அவனைத் தவிர்த்த அந்த அம்பு பக்கத்து மஞ்சாடி மரத்தில் கம்பீரமாகப் புதைந்து நின்றது. (தொடரும்)

எங்குப் பூமலர்

பூர்வகதை

கிருத்திகாவின் தாய் அவளை மேல் படிப்புக்குப் புதுடில்லி அனுப்ப, ரயிலிலேயே ராணுவ அதிகாரிஅர்ஜுனைச் சந்தித்துக் காதல் கொள்கிறாள். இவர்கள் காதல் கனியத் துணை நிற்கிறார் அர்ஜுனின் தகப்பனார் பாஸ்கரப்பா.

புதுடில்லியில் விஷ்ணுப் பிரசாத் என்பவனைச் சந்திக்குமாறு அம்மாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் போன கிருத்திகாவிடம் விஷ்ணு பிரசாத், அவள் தாய் தன்னுடன் பல கோணங்களில் பல சந்தர்ப்பங்களில் நெருங்கியிருப்பது போன்ற புகைப்படங்களைக் காட்டுவதுடன் கிருத்திகாவையும் தகாத முறையில் நெருங்குகிறான். அதிர்ச்சியுற்றுத் தப்பி ஓடிவரும் கிருத்திகாவை சதா விஷ்ணு பிரசாத்தின் ஆட்கள் பின்தொடர்ந்து கண்காணிக்கிறார்கள். இதனால் அச்சமுற்ற அவள் அர்ஜுனிடம் நடந்ததையெல்லாம் கூற, அவன் அவள் தாயாருக்காகப் பரிந்து பேசி ஆறுதல் அளிக்கிறான். அதே சமயம் விஷ்ணு பிரசாத் வடிகட்டின அயோக்கியன் என்றும் மிகப் பெரிய இடங்களில் செல்வாக்கு உடையவன் என்றும் எச்சரித்து, இங்கே தனியே இருந்தால் ஆபத்து என்றும் அவளுடன் சென்னைக்கு வந்து அவள் தாயிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்ப எண்ணுவதாகவும் கூறுகிறான். 'நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன கவலை?' என்று கிருத்திகா கேட்க, தான் சீக்கிரமே வன்முறையாளரான பிரிவினைச் சக்தியை ஒடுக்கப் பஞ்சாப் செல்லவேண்டியிருக்கும் என்பதை வெளியிடுகிறான், ராணுவ உயர் அதிகாரியான அர்ஜுன். ''அப்படியானால் நாளைக்கே நமது திருமணத்தை முடித்துவிடலாம், எளிய முறையில்' என்கிறாள் கிருத்திகா. ''அப்பாவுக்கு நான் ஒரே மகன்; என் கல்யாணத்துக்கு நாலுபேரை அழைக்க வேண்டும் என்று ஆசைப்படுவார். நான் நாளைக்கு வேறு ஒரு யோசனை சொல்கிறேன்'' என்கிறான் அர்ஜுன்.

14

மறுநாள் காலையில் சற்றுச் சீக்கிரமாகவே எழுந்து விட்டான் அர்ஜுன். எழுந்ததும் திடமான ஒரு முடிவுக்கு வந்தவனாகச் செயல்பட்டான். குளித்து உடை மாற்றிக் கிருத்திகாவின் அறைக்கு வந்தான். அவள் உடம்பைக் குறுக்கி ஒருக்களித்துச் சின்னக் குழந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். நேற்றைய அலைச்சலும், மனச் சங்கடமும், பயமும் அவளை நிரம்பப்பாதித்திருப்பதைப் புரிந்து கொண்டான். இந்தச் சந்தர்ப்பத்தில் துணையாக பக்கத்தில் இருந்து அவளைத் திடப்படுத்த இயலாமல் தான் எங்கோ பஞ்சாப் எல்லைக்குப் போய் விடப் போவது வருத்தத்தை அளித்தது. ஆனாலும் வேறு வழி இல்லை. இந்தப் பிரிவு தவிர்க்க முடியாதது. இதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இது யுத்தமில்லை. உள்நாட்டுக் கலகம்தான். கலகக்காரர்களை அடக்குகிற வேலைதான். ஆனாலும் திரும்பிவர எத்தனை நாளாகும் என்று சொல்ல முடியாது. திரும்பி இவளை எப்போது பார்க்க இயலும் என்பது தெரியாது. நெஞ்சில், நினைவில், ஆத்மாவில் இவள் இரண்டறக் கலந்து போனாலும், பார்க்க வேண்டும் என்று தோன்றுகிற போது எடுத்துப் பார்க்க ஒரு புகைப்படம் வேண்டும். இன்று இவளுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவளைப் பிரியாமல் இன்று முழுவதும் கூடவே இருந்து சந்தோஷப்படுத்த வேண்டும். அப்புறம் இவள் நேற்றிரவு கேட்டதை நடத்திக் கொடுக்க வேண்டும். அது தெரிந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள் இவள்....

அயர்ந்து தூங்குகிற அவளை எழுப்ப மனமில்லாமலே மெதுவாய்த் தோளைத் தொட்டான். அந்த மென்மையான ஸ்பரிசத்திற்கே அலறி எழுந்து உட்கார்ந்தாள். அதைப் பார்த்த அர்ஜுன் மிகவும் மனச் சங்கடப்பட்டான். அவள் பக்கத்திலேயே கட்டிலில் உட்கார்ந்து இதமாய்அணைத்துத்தலையை வருடியபடி கேட்டான்.

''என்ன கிருத்திகா, இப்படி அலறிக் கொண்டு எழுந்திருக்கிறாய்? என்ன பயம் அப்படி...?''

''ம்ஹூம்.... ஒன்றுமில்லை....'' என்று தலையசைத்துப் புன்னகை செய்ய முயன்றாள்.

''என் கிருத்திகாவா இப்படிப் பயப்படுவது...? எதுவானாலும் மனத்தைத் தளரவிடக் கூடாது. திடமாய், தைரியமாய் எதிர்த்து நிற்க வேண்டும். நீ அப்படி நிற்பதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். இந்த மாதிரி கோழையாகத் தூக்கத்தில் அலறி எழுந்து உட்காருவதை அல்ல....''

தலைகுனிந்து தன் பயத்திற்குச் சற்றே வெட்கப்பட்டவளாக ''சரி...'' என்றுமெலிதாய் முணுமுணுக்க, அவளின் முகத்தை நிமிர்த்தினான் அர்ஜுன்.

''எழுந்து சீக்கிரம் குளித்து உடை மாற்றிக் கொண்டு வா கீர்த்தி. நான் உன்னை வெளியில் அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்....''

''எங்கே....?'' — அவள் குரலிலும், கண்களிலும் தெரிந்த ஆர்வத்தில் இன்னமும் குழைந்து போன அர்ஜுன்,

''ஐயோ என் சின்னக் குழந்தையே...'' என்று தன் தலையால் அவள் தலையில்

இந்துமதி

லேசாய் முட்டி வகிட்டில் மென்மையாய் முத்தமிட்டான்.

''எங்கே என்று நான் இப்போது சொல்லப் போவதில்லை கீர்த்தி. நிஜமாகச் சொல்வதானால் உன்னை எங்கேயெல்லாம் அழைத்துக் கொண்டு போகப் போகிறேன் என்பது எனக்கே தெரியாது. முதலில் எழுந்து பல் தேய்த்து டீ குடித்து, குளித்து விட்டு வா கீர்த்தி. அழகாய் டிரஸ் பண்ணிக்கொள். இந்த சல்வார் கம்மீஸ் எல்லாம் வேண்டாம். கல்யாணப் பெண் மாதிரி பட்டுப் புடவை கட்டிக் கொள். என்ன...?''

அவள் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள்.


''என்ன இன்றைக்குத் திடீரென்று பட்டெல்லாம் கட்டிக் கொள்ளச் சொல்கிறீர்கள்....?''

''உன்னை அப்படிப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. கேட்டேன். தப்பா கீர்த்தி....?''

''சீசீ'' என்று செல்லமாய் அவன் கன்னத்தைத் தட்டியவள்,

''என் டிரஸ், ஸூட்கேஸ் எல்லாம் ஹாஸ்டலிலேயே இருக்கிறது அர்ஜுன். நேற்றைய அவசரத்தில் எதையும் நான் கொண்டு வரவில்லை....''

''பரவாயில்லை. உன் கைப்படக் கடிதம் ஒன்று எழுதிக் கொடு. ராம்லிங்கையோ, ஜெனியையோ அனுப்பி எல்லாவற்றையும் கொண்டு வந்து விடச் சொல்கிறேன். இன்று மாலை மதறாஸ் போக விமானத்தில் இரண்டு டிக்கெட்டுகள் புக் பண்ணச் சொல்லிவிட்டேன். உன்னோடு வந்து உன்னை வீட்டில் விட்ட பின்பு நாளைக் காலை முதல் விமானத்தில் நான் திரும்ப வேண்டும்....''



''என்ன அர்ஜுன், இவ்வளவு அவசரமாகச் செயல்படுகிறீர்கள்...?''

''இதுவே நிதானம் கீர்த்தி. இதற்கே நேரமிருக்குமா என்பது தெரியவில்லை. நீ சீக்கிரம் குளித்து விட்டுக் கிளம்ப வேண்டும். உன் சூட்கேஸ் வந்து அதற்கப்புறம் புடவை கட்டிக் கொண்டு போவதானால் நேரமாகி விடும். அம்மாவின் புடவைகள் அப்படியே இருக்கின்றன. அப்பாவிடம் கேட்டு அதில் நல்லதாய் ஒரு புடவையும், நகைகளையும் வாங்கிக் கொண்டு வருகிறேன். சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு கிளம்பு....''

''அம்மாவின் புடவை சரி, நகைகள் எல்லாம் எதற்கு அர்ஜுன், வேண்டாமே.?''

''ஷ்.... பேசி நேரத்தை வீணாக்காமல் கிளம்பு கீர்த்தி.''

அடுத்த அரை மணி நேரத்தில் நல்ல பச்சையில் பெரிதாய் சரிகைக்கரைபோட்ட பட்டுப் புடவையும் நகைகளுமாக வெளியில் வந்த கிருத்திகாவைப் பார்த்து அசந்து போனான் அர்ஜுன்.

''மை குட்நெஸ், யு லுக் லைக் ஆன் ஏஞ்சல்... இப்படி உன்னைப் பார்க்கிற போது எனக்கு 'ஹௌ ப்யூர், ஹௌ டியர்...' என்ற வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன...'' என்றான்; அதைக் கேட்டு அவள் வெட்கப்படுவதை ரசித்துக் கொண்டே.

''வா, அப்பாவை நமஸ்கரித்துக்கொண்டு போகலாம்...''

இடையென்று ஆகி அற்புதமாய் அலங்கரித்துக் கொண்டு தேவதையாய் வந்து தன்னை நமஸ்கரித்த கிருத்திகாவையும், அர்ஜுனையும் பார்த்து, ஒரு விநாடி பேச்சிழந்து போன பாஸ்கரப்பா, அவர்களின் மன ஒற்றுமையையும், உருவ ஒற்றுமையையும் எண்ணிச் சந்தோஷப்பட்டு, ''கடவுளே, இந்தக் குழந்தைகளை எப்போதும் இதே நிம்மதியோடும் சந்தோஷமாகவும் வை' என்று உள்ளுக்குள் வேண்டிக் கொண்டு உணர்ச்சி மிகுதியினால் கண்ணோரம் பொட்டாய்த் துளிர்த்த கண்ணீரை மறைத்தபடி கேட்டார். ''ஏம்ப்பா அர்ஜுன், இன்னிக்கு என்ன விசேஷம்ப்பா...?''

''ஒண்ணுமில்லேப்பா. திடீர்னு என்னவோ தோணித்து கிருத்திகாவை இந்த டிரஸ்ஸில்பார்க்க வேணும் போல் இருந்தது. ஏம்ப்பா, அம்மாவின் புடவையிலும், நகையிலும் இவள் அப்படியே அம்மா மாதிரி இல்லே...?''

அந்த ஞாபகத்தில் ஒரு விநாடி மேலும் உணர்ச்சி வசப்பட மௌனமாய் இருந்த பாஸ்கரப்பா,

''அந்த மாதிரி இல்லாமல் இவள் தீர்க்காயுசாக இருக்கட்டும். உங்க இரண்டு பேரையும் இப்படிப் பார்க்க ரொம்ப சந்தோஷமாக இருக்கு. நீ பஞ்சாபிலிருந்து வந்த உடனே உங்கள் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணிடப் போறேன். என்னவோ இந்தக் கல்யாணத்தைச் சீக்கிரம் பண்ணிடணும்னு தோணுறது.''

அவர்கள் இரண்டு பேரும் அதை மறுக்காமல் மௌனமாக நிற்க அவர் அந்த நிலைமையின் இறுக்கத்தைக் குறைக்க, வழக்கமான தன் கணீரென்ற சிரிப்போடு பேசினார்.

''ஓ... கே.... ஓ.கே... உங்க மௌனம் சம்மதத்திற்கு அறிகுறின்னு தெரியுது. கிருத்திகா, இவன் உன்னை இன்னிக்கு மெட்ராஸ் கொண்டு போய் விடப் போவதாகச் சொன்னான். ஏம்மா, அவன் இல்லேன்னால் என்ன? ஹாஸ்டல் பிடிக்கலேன்னால் இங்கே வந்து தங்கக் கூடாதா...? நான் இல்லையா...?''

அவரின் அந்தக் கேள்வியிலிருந்து அவரிடம் அர்ஜுன் விவரமாக எதையும் சொல்லவில்லை என்பதைப் புரிந்துகொண்ட கிருத்திகா என்ன பதில் சொல்வது என்பது புரியாமல் அர்ஜுனைப் பார்க்க,

அவனே பேசினான்.

''இல்லேப்பா. அவங்க அம்மாவும் வரச் சொல்லி இருக்காங்க. இவளும் ஹாஸ்டல் பிடிக்கவில்லை என்கிறாள். நானும் இங்கே இருக்கப் போவதில்லை. அதனால் இந்தச் சந்தர்ப்பத்தில் மெட்ராஸ் போய் இருக்கட்டுமே என்று நினைத்தேன்...''

''ஆனால் அதற்காகப் படிப்பைக்கெடுத்துக் கொண்டு போகணுமா அர்ஜுன்? லீவு விட்டதும் போகக் கூடாதா...?''

''போகலாம்தான். ஆனால் இந்தக் குழந்தைக்குப் படிப்பை விட அம்மாவைப்பார்க்க வேண்டுமென்ற ஆசை அதிகம் இருக்கிறதே அதற்கு என்ன செய்ய...?'' என்று அவர் நம்புகிற விதமாகச் சிரித்ததும், அவரும் சிரித்தார். பின் கிருத்திகாவைப் பார்த்தார்.

''சரிம்மா, அவ்வளவு ஆசையாக இருந்தால் போய் விட்டு வா. எத்தனை நாட்கள் தங்குவதாக உத்தேசம்? சீக்கிரம் வந்து விடுவாய் இல்லையா...?''

''வந்து விடுவேன்...'' என்று தலையாட்டினாள் கிருத்திகா. அந்தத் தலையாட்டலில் மிகவும் திருப்தியடைந்த அவர்,

''நீயும் கூடப் போய் விட்டுவிட்டு உடனே வந்து விடுகிறாய் இல்லையா அர்ஜுன்?'' என்று கேட்டார்.

தாகூர் எல்லா நாடுகளுக்கும் கவிஞராகப் போய் வந்திருக்கிறார். ஆனால் பாரிஸ் நகரத்துக்கு மட்டும் கவிஞராகச் செல்லவில்லை! 1932—ல் பாரிஸில் ஓவியக் கண்காட்சி நடந்த போது ஓவியராகச் சென்று வந்தார்!

—டி.எஸ். பானு.



இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப் போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடியில் பரவி விடுகிறது.
உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!



இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.



Godrej

பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

''ஆமாம்ப்பா. நாளைக் காலை முதல் விமானத்திலேயே கிளம்பி வந்து விடுகிறேன்...''

''சரி. கிளம்புங்கள். எங்கோ போகத் தயாராக இருந்தவர்களின் அவசரம் புரியாமல் நான் பேசிக் கொண்டே இருக்கிறேன் பாருங்கள். வயசானால் இப்படித்தான்...'' என்று சிரித்தார். பின்னர் அவர்களுடன் கார் வரை வந்து கையசைத்து வழியனுப்பினார். சீக்கிரம் வந்து விடுங்கள்...'' என்றும் சொன்னார்.

கார் காம்பவுண்டை விட்டு வெளியில் வந்ததும் மெதுவாகத் திரும்பிப் பின்னால் அந்த அம்பாஸிடர் தொடருகிறதா என்பதைக் கவனித்தாள் கிருத்திகா. அதைப் பார்த்த அர்ஜுன் சிரித்துக் கொண்டே சொன்னான். ''அப்பா... எவ்வளவு பயம். கவலைப்படாதே... கார் எதுவும் நம்மைப் பின் தொடரவில்லை. அப்படியே தொடர்ந்தாலும் பக்கத்தில் நான் இருக்கிறேன்.. கவலைப்படாதே... அதுவும் சாதாரணமாக இல்லை. கையில் பிஸ்டல் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் அந்தக் கவலையை விட்டுவிட்டு. இருக்கிற கொஞ்ச நேரத்தில் சந்தோஷமாகச் சிரித்துப் பேசு கிருத்திகா... நான் இருக்கிற வரை இந்த முகம் வாடக் கூடாது. பேச்சில் தொய்வு வரக் கூடாது. சிரிப்பும். சந்தோஷமுமாகத்தான் இருக்க வேண்டும். என்ன...?''

''சரி...''

''சரி என்று தலையாட்டி விட்டால் மட்டும் போதுமா... முகம் இன்னும் அப்படியே இருக்கிறதே... பழைய மலர்ச்சியைக் காணவில்லையே... முதன் முதலாக நான் ரயிலில் சந்தித்த அந்தக் கிருத்திகாவைப் பார்க்க வேண்டும். எங்கே அந்த மாதிரி சிரி...''

கிருத்திகா தன் பயம். சோகம். அவனை விட்டுப் பிரியப் போகிற ஆற்றாமை எல்லாவற்றையும் தள்ளி வைத்துவிட்டு அழகாய்ப் புன்னகை செய்தாள். தன் பொருட்டு இவ்வளவு சங்கடமும். கஷ்டமும் படுகிற இவன் மனத்தை வருத்தப்படுத்தக் கூடாது என்கிற முடிவிற்கு வந்தாள். இன்று மாலை சென்னை போய் விட்டால் அதன் பின் இவனைப் பார்க்க முடியாது. அதனால் இன்றைய பொழுதை இவனுடன் சந்தோஷமாகக் கழிக்க வேண்டும்.

பசித்தவனுக்குச் சமாதானம் கூற முடியாது. ஏனெனில் பசிக்குக் காதுகளே கிடையாது!

கிரேக்கப் பழமொழி
தகவல்: ஜா. ரவி



அந்த முடிவுடன் அவனை ஒரு புது கிருத்திகாவாக ஏறிட்டுப் பார்த்து இன்னும் அதிகமான புன்னகை செய்தபடி கேட்டாள்:

''ஆமாம். நாம் இப்போது எங்கே போகிறோம்...?''

''நீதான் கொஞ்சம் யோசனை பண்ணிச் சொல்லேன்...?'' — அவளின் சிரிப்பு மனத்தில் சந்தோஷப் பூக்களை மலர்விக்க அவனும் அதே புன்னகையோடு திருப்பிக் கேட்டான்.

''ம்...'' என்று யோசித்த கிருத்திகா. ''நோ ஐடியா... நீங்களே சொல்லி விடுங்கள்...'' என்றாள் கொஞ்சலாக.

''சரி, ஒரு சின்ன க்ளூ கொடுக்கிறேன். அப்புறமாவது சொல்ல முடிகிறதா பார்...''

''அது என்ன சின்ன க்ளூ...?''

''பட்டுப் புடவை கட்டிக்கொண்டு எங்கே போவார்கள்...?''

''கல்யாணத்திற்கு...''

''கல்யாணத்தைத் தவிர வேறு எங்கு போவார்கள்...?''

''ம்... கோவிலுக்கு...''

''வெரிகுட். நாம் இப்போது கோவிலுக்குத்தான் போகிறோம்...''

''எந்த கோவிலுக்கு.''

''மலைய மந்திருக்கு. இதுவரை நீ அங்கே போனதில்லையே கிர்த்தி...?''

''நானாக எங்கே போயிருக்கிறேன். நீங்கள் அழைத்துக் கொண்டு போயிருக்கிற இடங்களைத் தவிர...?''

''ஐயம் ஸாரி. மலையமந்திரில் முருகன் ரொம்ப அழகு. இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே நிற்கலாம் போலிருக்கும்...''

''உங்களை மாதிரி போல இருக்கு...''

''வாவ்... தட்ஸ் குட். இப்போதான் நீ என் கிருத்திகா. ஆமாம் நீ வள்ளியா. தெய்வயானையா...?''

''ம்...?'' என்று பொய்யாய் முறைத்தாள் கிருத்திகா. ''பெயர் அர்ஜுனாக இருப்பதால் மற்ற விவகாரங்களிலும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து விடாதீர்கள். வள்ளி. தெய்வயானை என்றெல்லாம் கற்பனை பண்ணி விடாதீர்கள். அந்த விஷயத்தில் நீங்கள் முருகன். கிருஷ்ணன். அர்ஜுனன் யாருமில்லை. நேற்று ராத்திரி சொன்ன மாதிரி ராமன். இந்த சீதையின் ஏகபத்தினி விரதன். என்ன...? புரிந்ததா...? அதனால் இந்த வள்ளி. தெய்வயானை கதையெல்லாம் கட்டி மூலையில் போடுங்கள்...''

''போட்டுவிட்டேன் தாயே...'' என்று தலையைத் தழைத்துப் பணிவாய்ச் சொல்லி அவன் ஆத்மார்த்தமாகச் சிரித்தான்.

''ஆமாம். இப்போது எதற்காக மலைய மந்திர் போகிறோம் என்று நீ கேட்கவில்லையே...?''

''வேறு எதற்காகப் போவார்கள் சாமி தரிசனம் பண்ண...''

''இப்போது நாம் அதற்கு மட்டும் போகவில்லை. வேறு ஒன்றிற்காகவும் போகிறோம்...''

''என்ன...?''

''கல்யாணம் பண்ணிக் கொள்ள...''

''என்ன... என்ன...?'' (தொடரும்)



மின்னி மிளிரும் மேனி... என்னாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.

சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவை யான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.

ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX 84 2012 TM

தொங்கிய நிலையில் அவசர கதியில் தரையில் பரவியிருந்தான் அகல்யா.

சுவாசம் துப்புரவாக அடங்கிப் போயிருந்தது.

ராம் அடுத்த அடியை எடுத்து வைக்க,

''நில்லுங்க. வேணும்... போலீஸ் வந்துரும். இன்னும் கொஞ்ச நேரத்துல. அதுக்கு முன்னால எதையும் 'டச்' பண்ண வேணாம்.''

''எதுக்குப் போலீஸ்?'' பதற்றத்தோடு ஒலித்தது ராமின் குரல்.

அது பதிலில்லாத கேள்வியாகக் காற்றில் மிதந்து அலைந்தது.

உத்தரத்திலிருந்து சரியாகக் கட்டப் படாத நிலையில், அல்லது சரியாகக் கட்டப்பட்டு அரை குறையாக அவிழ்க்கப் பட்ட விதத்தில் கயிறு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

அகல்யாவிடமிருந்து அரையடித் தொலைவில் சின்ன ஸ்டூல் ஒன்று கிடந்தது.

'இது தற்கொலைதான்...' கூட்டத்தில் சன்னமாக ஒரு விமரிசனம் பறந்துவர,

'சான்ஸ் இல்லே... தூக்குல தொங்கலே...'

'போலீஸ் வந்தாச்சு....' பரபரப்போடு அவசர கதியில் குரல்கள் அடங்கிப்போக,

உள்ளே நுழைந்தார் டி. எஸ். பி. கணேஷ்.

ஒரு மயான அமைதி அங்கே சூழ்ந்து கொள்ள, துளைக்கும் கண்களால் அந்த இடத்தை ஆராயத் தொடங்கினார் கணேஷ்.

'முதல்ல யார் பார்த்தது?'

''நான்தான் சார்'' — ராம் முன்னால் வந்தான்.

''நீங்க அந்தம்மாவுக்கு என்ன வேணும்?''

''புருஷன்....''

தலையோடு கால் அவனை அவசரப் பார்வையில் ஆராய்ந்துவிட்டு ''ம்... சொல்லுங்க'' என்றார்.

''காலைல சீக்கிரம் எழுந்துருவா... ஆனா நேத்திக்கு ராத்திரியிலேருந்து அவ சரியா இல்லே....''

''சரியான்னா?''

''அனீஸியா இருந்தா... முகமெல்லாம் ஒரே வேர்வையாஇருந்தது...கண்ணெல்லாம் வெந்துபோய்....''

''நீங்க ஒண்ணும் கேக்கலியா?''

''டாக்டர் கிட்டப் போகலாமான்னு கேட்டேன்.... வேண்டாம்னு சொல்லிட்டா. ராத்திரி சாப்பிடக்கூட இல்லே. நடுவுல முழிப்பு வந்து நான் பார்த்தப்ப, படுக்கைல எழுந்து உட்கார்ந்துக்கிட்டிருந்தா.... அப்பவும் எதுவும் சொல்லலே... விடிஞ்சப்ப நான் மறுபடியும் டாக்டர் கிட்டப் போகலாமான்னு கேட்டேன்....

''வேண்டாம்...நீங்க ஆபீசுக்குப் போங்க. எனக்கு எதுவும் இல்லேன்னு சொல்லிட்டா.''

'பதினொரு மணி அளவில ஆபீசுல இருப்புக் கொள்ளாம வீட்டுக்கு வந்தேன்... இதோ இந்த நிலையில பாக்கறேன்...''

''நீங்க வரும்போது வீட்டுக் கதவு திறந்திருந்ததா?''

''ஆமாம்...''

''புருஷன் ஆபீசுக்குப் போனா, தனியா இருக்கிற ஒரு பெண் கதவைச் சாத்திக்க மாட்டாளோ?''

சந்தேகமாக அவனைப் பார்த்த கணேஷ், ''உங்களுக்குக் கல்யாணமாகி....'' என்று இழுத்தார்.

''இன்னிக்கு இருபத்தெட்டாவது நாள்.''

''மை காட்... ஸச் எ ஷார்ட் ட்யூரேஷன்''

அதற்குள் புகைப்படக்காரர்களும், மற்ற நிபுணர்களும் வந்து இறங்கினர்.

ஆத்திரமாகப்போலீஸைஏறிட்டான் ராம்.

''டி எஸ். பி. ஒரு குடும்பத்துல போலீஸ் நுழையுற அளவுக்கு என்ன நடந்து போச்சு? இது ஒரு சாதாரண மரணம்...''

''அதை நாங்க தீர்மானிக்கணும் மிஸ்டர் ராம். உத்தரத்துல கயிறு... தொடற தூரத்துல ஸ்டூல். தரைல உங்க மனைவி... உயிரில்லாம....

''ஒரு தற்கொலைக்கான சகல சாத்தியங்களும் கண்ணுல தட்டுப்படுது...''

''இன்ஸ்பெக்டர், ஆனா ஒண்ணைக் கவனிக்கணும் நீங்க.... தற்கொலை பண்ணிட்ட எந்த நபருக்கும் முகம் சாதாரணமா இருந்த தில்லே. நாக்குத் துருத்தி, கண்கள் பிதுங்கி இது மாதிரி எந்த அகோரமும் இங்க இல்லையே?'' படபடத்த ராம் திடீரென்று



அடங்கிப் போனான். அதைத் தான் சொல்லியிருக்க வேண்டாமோ என்ற மிரட்சி முகத்தில் வந்து அப்பிக் கொண்டது.

''வெல் மிஸ்டர் ராம்.. தேங்க்யூ ஃபார் யுவர் சஜஷன். நாங்க தற்கொலைன்னு இன்னும் தீர்மானிக்கலை. ஏன்... கொலையாகக் கூட இருக்கலாம்....''

''டி. எஸ். பி.....?''

''ரிலாக்ஸ் மிஸ்டர் ராம்... தற்கொலை மாதிரி ஒரு செட்டப் பண்ணிட்டு, கொலை செதிருக்கலாம் இல்லையா... நீங்க சொன்ன அகோரங்கள் எதும் இல்லாமக் கூடக் கொலை செய்ய முடியும். எனி ஹௌ, பி. எம்.முக்கு பாடியை அனுப்பிருவோம்.... நாளைக்குத் தெரிஞ்சிரும் எல்லாமே....''

அதற்குள் பல கோணங்களில் காமிரா வெளிச்சங்கள் அகல்யாவைக் குளிப்பாட்ட, சுற்றிலும் பவுடர் தூவி மற்ற சடங்குகள் துரித கதியில் நிகழ, கதவை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள் கைரேகை நிபுணர்கள்.

அந்த அறையை மற்ற இரண்டு பேர் அலசிக் கொண்டிருந்தார்கள்.

''ஸார் இதோ ஒரு லெட்டர்...!'' கான்ஸ்டபிள் ஒருவர் காகிதம் ஒன்றைக் கணேஷிடம் கொடுத்தான்.

அன்புள்ள அப்பாவுக்கு,

மறுபடியும் பிரச்சினை ஆரம்பமாகி விட்டது... என்னால் தாள முடியவில்லை... அவசரமாக மூவா....

அதற்கு மேல் எதுவும் இல்லை. 'மூவா' என்பதோடு கடிதம் நின்று போயிருந்தது.

''இது உங்க மனைவி கையெழுத்தா மிஸ்டர் ராம்?''

''ஆமாம் சார்....''

''அவுங்க அப்பா எங்கே இப்ப?''

''பக்கத்துல... ஆவடிலதான்.''


''சொல்லியனுப்பிட்டீங்களா?''

''அனுப்பிச்சாச்சு!''

''எவ்ரிதிங் ஈஸ் ஓகே ஸார்'' ஒருவர் வந்து சல்யூட் அடித்தார்.

''ஓ.கே. பாடியை ரிமூவ் பண்ணிடுங்க... நேரே பி. எம்.முக்கு அனுப்பிடுங்க. ஃபோட்டோஸ் இன்னிக்கு ஈவ்னிங் எனக்குக் கிடைக்கணும். நீங்களன் கூட வாங்க ராம்.''

போட்டிக்கதை 10



சமைத்து 4 மணி நேரங்கழித்துக்கூட மணம் கமழும் சூடான உணவை பரிமாற இக்ளூ ஹாட் பேக் இப்பொழுது உங்களுக்கு உதவுகிறது



மறுபடியும் சூடவைக்கும் வேலையே இல்லை

சாதமானாலும் சரி, குழம்பு, கறி வகைகளானாலும் சரி, சமையலை சீக்கிரமே முடித்து இக்ளூ ஹாட்பேக்கில் வைத்து மூடிவிடுங்கள். 4 மணி நேரம் கழித்து பரிமாறினாலும் உணவு சமைத்த சூட்டோடு, ருசியாகவும், சத்து மிக்கதாகவும் இருக்கும்.

நேரமும் எரிபொருளும் மிச்சம்...

ஏனெனில் உணவை மீண்டும் சூடாக்குவதை தவிர்க்கிறது. மேலும் உணவுச்சத்து இழப்பையும் இது தடுக்கிறது.

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் கடைகளில் இக்ளூ ஹாட்பேக் பல சைஸ்களில் கிடைக்கும். இன்றே ஒரு இக்ளூ ஹாட்பேக் வாங்குங்கள். அதனால் பல விதத்திலும் லாபம். மேலும் அதிக ஓய்வு நேரம் கிடைக்கிறது.

இக்ளூ ஹாட்பேக்கின் திறமைக்கு ஒரு சான்று

தொடர்ந்து இரண்டு மாதம் இந்த ஹாட் பேக்கை சோதித்து பார்த்து சென்னை கேடரிங் இன்ஸ்டிட்யூட் கீழ்க்கண்ட சான்றுரையை வழங்கியுள்ளது.

''இது உஷ்ணத்தை நன்கு பாதுகாக்கிறது. அதே சமயம் உணவில் ருசிக் குறைவு ஒன்றுமில்லை. 6 மணி நேரத்திற்கு பிறகு கூட உணவின் மணத்தில் ஒரு குறைவும் ஏற்படவில்லை... இப்பெட்டிகள் திறன் மிக்கவை !''

IGLOO hotpack

பியர்ட்ஸெல் இன்சுலேஷன் லிமிட்டெட்டின்

தரமான தயாரிப்பு

OBM 4897 TM R

''என்னே மறந்துரு அர்ச்சனு...''

''ஏன்... எதுக்கு?''

''காரணம் கேக்காதே. நமக்கு ஒண்ணு சேர இந்த ஜன்மத்தில வழியில்லே... தட்ஸ் ஆல்!''

''நோ... காரணம் சொல்லாம நீங்க இந்த எடத்தை விட்டு ஒரு அடிகூட நகர முடியாது.... உங்களே நம்பி எல்லாத்தையும் நான் ஒப்படைச்சிருக்கேன்... நான் ஒரு ஏழைப் பெண். என்னுல இதைச் சகிக்கக்கச் சக்தி இல்லே. சொல்லுங்க.''

''எனக்கு.... எ...ன...க்...கு...க் கல்யாணம் நிச்சயம் பண்ணப் போறுங்க!''

அப்பட்டமாக அதிர்ந்தாள் அர்ச்சனு.

''நீங்க சம்மதம் சொல்லிட்டீங்களா?''

''வேறே வழியில்லே... எங்கம்மாவோட பிடிவாதத்துக்கு முன்னுலே தோத்துப் போறதைத் தவிர எனக்கு எந்த மார்க்கமும் இல்லே....''

''நம்ம காதலே நீங்க ஏன் சொல்லலே... உங்களேயே நம்பி ஒருத்தி இருக்கிறதை உங்கம்மாவுக்கு ஏன் புரியவைக்கலே?''

'வரதட்சிணையாப் பத்தாயிரம் ரூபாய் கைநீட்டி எங்கம்மா ஏற்கெனவே வாங்கியாச்சு... அந்தப் பணத்தை உன்னுல தர முடிஞ்சா நீ எங்கம்மாவைச் சந்திக்லாம்.''

''அடப்பாவி. சீர்திருத்தம் பேசி, சிரிக்கச் சிரிக்கக் காதலிச்ச நீ இப்படிச் சீரழிஞ்சு போயிட்டியே...''

''இன்விடேஷன் அனுப்பறேன். இஷ்டமிருந்தா நீயும் கல்யாணத்துக்கு வரலாம்.'' பதிலே எதிர்பாராமல் அவன் விறு விறுவென்று நடந்தான்.

நொறுங்கிப்போன அர்ச்சனு, மடிந்து போய் அப்படியே மணலில் உட்கார்ந்தாள். கவ்விக்கொள்ளும் இருட்டும், தட் தட்டென்று கன்னத்திலும் தோளிலும் ரெண்டொரு பெரிய மழைத் துளிகள் விழுவதும் கூடத் தெரியாமல் உட்கார்ந்திருந்தாள்.

''அர்ச்சனு, என்னம்மா இந்த நேரத்துல இங்கே?''

நிமிர்ந்து பார்த்தாள்.

''அங்கிள்.... நீங்க எப்படி இங்க?''

''நீங்கதான் அகல்யாவோட அப்பாவா?''

''ஆமாம்... என்னுச்சு என் குழந்தைக்கு?''

''ரிலாக்ஸ் ஸார்... எல்லாமே முடிஞ்சு போச்சு... தற்கொலையா, கொலையான்னு நாங்க தீர்மானிக்கலே. அதுக்கு முன்னுலே, இதப் பாருங்க.'' — கடிதத்தைக் காட்டினுர்.

இந்தி மொழியில் உங்களுக்கு ஏதும் சந்தேகம் ஏற்பட்டால் ''177'' என்ற எண்ணுக்கு டெலிபோன் செய்தால் போதும். உங்களுக்கு விளக்கம் இடைக்கும். கேரள டெலிபோன் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

—எஸ்.எஸ்.மணி



''முடிக்காமவிட்டுட்டாங்க.... மூவாயிரம் ரூபாய் உங்க இட்டக் கேட்டு எழுதியிருக்கலாம். அடிக்கடி இதுமாதிரி எழுதுவாங்களா?''

''கல்யாணமாகி இருபத்தெட்டு நாள்ள ஏழு லெட்டர் எழுதியிருக்கா...''

''அத்தனையும் பணம் கேட்டுத்தானு?''

''ஆமாம்.''

''அப்படி என்ன செலவு அவுங்களுக்கு?''

''அவ குழந்தை ஸார். கொடுத்ததை வாங்கிக்குவா... அவளுக்கா எதையும் கேட்கத் தெரியாது....''

அந்தக் கடைசி வாக்கியத்தை மனத்துள் குறித்துக் கொண்டார் டி. எஸ். பி.

'பிரச்னே ஆரம்பமாகி விட்டது... தாள முடியவில்லே'

ராமைத் தீர்க்கமாகப் பார்த்தார். டி.எஸ்.பி.

''நோ... அப்படிப் பார்க்காதீங்க... இது எதுவுமே எனக்குத் தெரியாது....''

''நீங்க அவ புருஷன் ராம்...''

''அதுனுல... நான் ஒரு பைசாக் கூட என் மனைவி இட்ட எதிர்பார்க்கலே... இந்த லெட்டர் போக்கு வரத்து, பணம் எல்லாம் எனக்குத் தெரியாம நடக்கிற சங்கதிகள்...''

''வரதட்சிணே எவ்ளோ வாங்கினீங்க?''

தலையைக் குனிந்து கொண்டான்.

''கம் அவுட்.''

''பதினைஞ்சாயிரம்.''

''நகைகள்?''

''நாப்பது சவரன் போட்டேன் டி.எஸ்.பி. அதோட வைரத் தோடும்....'' — அப்பா முந்திக் கொண்டார்.

பிணத்தின் காதில் இருந்தது சாதாரண தங்க நகைதான் என்பதை நிலேவில் சேகரித்துக் கொண்டார் டி.எஸ். பி.

''டௌரி கஸ் எ க்ரைம்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் ராம்.''

''சார்.... எங்கம்மா....''

''ஷட்... அம்மா சொல்லித்தான் இந்தக் கொலையைச் செஞ்சிருக்கீங்களா? நீங்களாவே....''

''நோ.... சத்தியமா நான் செய்யலே... அகல்யாவை ஒரு நாள் கூட நான் கஷ்டப் படுத்தலே. இது அபாண்டம்.''

இன்னும் அவமானத்தில் நொறுங்கி... பலமாகக் காயப்பட்டு... ஏறத்தாழச் செத்துக் கொண்டிருக்கிறன் ராம்.

''அங்கிள் இது நிஜமா?''

''ஆமாம் அர்ச்சனு... தேதி குறிச்சாச்சு. நினேக்க நினேக்க நெஞ்சு கலங்கிப் போறதம்மா.... என்னுல முடியலே....'' குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினுர்.

''ப்ளீஸ் அங்கிள்...''

அவரைத் தேற்றத் தெரியாமல்... முடியாமல் தவித்தாள் அர்ச்சனு.

ஓ.... அகல்யா... நீ யாருக்கும் எந்தத் துரோகமும் செய்யலியே... உனக்கு ஏன் இந்த வியாதி வரணும்?

''மருத்துவம் வெற்றி அடையக்கூடும் அங்கிள்...''

''இல்லேம்மா... அது நிராசை. இந்த 'லிம்போசார்கோமா' வந்து பிழைச்சதாச்

கண் ஒளி பெற வழி காட்டிடுவீர்!



நேத்ரகல்யாண்

சூப்பர் பம்பர்

சந்த் பரமானந்த் பிளைண்ட் ரிலீஃப் மிஷின்
உதவி நிதிக்காக!

WIN Rs 7.40 CRORES

60 முதல் பரிசு ரூ 5 லட்சம் வீதம்
(குலுக்கல் கடைசி 5 எண்களில்)

120 இரண்டாவது பரிசு ரூ 1 லட்சம் வீதம்
(குலுக்கல் கடைசி 5 எண்களில்)

600 மூன்றாவது பரிசு ரூ. 10,000 வீதம்
(குலுக்கல் கடைசி 4 எண்களில்)

6,000 4வது பரிசுகள்
ரூ. 500/- வீதம்
(குலுக்கல் கடைசி 3 எண்களில்)

60,000 5வது பரிசுகள்
ரூ. 50/- வீதம்
(குலுக்கல் கடைசி 2 எண்களில்)

6 லட்சம் 6வது பரிசுகள்
ரூ. 20/- வீதம்
(குலுக்கல் கடைசி எண்ணில்)

மொத்த விற்பனையாளர்கள் :
ஜாஸ்மின் & கோ.
புது தில்லி-110 001.

ஆர்கனைஸிங் ஏஜெண்ட் :
ஸ்வஸ்திக் லாட்டரி ஏஜென்ஸிஸ்
15, ஹோட்டல் காண்டினென்டல் அனெக்ஸ்
கன்னாட் பிளேஸ், புது தில்லி-110 001.
தொலைபேசி : 310374, 311208

6 வரிசைகள் டிக்கட் ரூ. 20/- மட்டுமே

60% பரிசாக வழங்கப்படுகிறது

குலுக்கல் நாள் **22-11-84**

சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்: பிரியா லாட்டரி ஏஜென்ஸிஸ், 160, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005. பாண்டிச்சேரி ஸ்டாக்கிஸ்ட்: **M/s D. R. ராஜசேகர்,**
பெங்களூர் ஸ்டாக்கிஸ்ட்கள்: **M/s மஹாலட்சுமி ஹால், M/s விஷ்ணு ஏஜென்ஸிஸ, M/s வாசுதேவ் ராஜ்னி, M/s பாலாஜி ஏஜென்ஸிஸ், M/s சுகால் லாட்டரி ஏஜென்ஸிஸ்.**

SUSAK MK : 1005

சரித்திரமே இல்லே. சொன்ன கெடுவுக்கு முன்னாலேயே எமன்வந்து அள்ளிண்டுபோயிடு வாம்மா... இன்னும் நாப்பதே நாள்...''

''அகல்யாவுக்குத் தெரியுமா அங்கிள்?''

''தெரியும்மா..., மறைச்சு லாபமில்லே... போகட்டும்... இந்த இருட்டுல நீ ஏன் இங்கே?''

''நான் உங்க கூட வர்றேன் அங்கிள்... அகல்யாவை எனக்குப் பாக்கணும்.''

''ஏண்டி அழுறே... அதுதான் நடக்க ணும்னு மாத்த முடியுமா?''

''உனக்குப் பதிலா நான் போயிருக்கணும் அகல்யா...''

''ச்சீ, வாயை அலம்பு... அபத்தமாப் பேசிட்டு....''

''இல்லம்மா... அந்தப் பாவி ராம்...'' கேவலுடன் ஆரம்பித்தான். அழுகையும் ஆத்திரமுமாக முடித்தபோது இமைக்க மறந்து நின்றாள் அகல்யா.

''அவனை நம்பி என்னையே தந்தேண்டி... கடைசில பணத்துக்கு ஆசைப்பட்டு... சண் டாளன்....''

''உனக்கு அவன்தான் வேணுமா?''

''ஏன் அகல்யா இப்படிக் கேக்கறே?''

''சொல்லு... நான் விலை பேசிடறேன்... எனக்காக எங்கப்பா சேர்த்து வைச்ச சொத் துக்களை நாப்பது நாள்ள நான் அனுபவிச் சாகணும்... அது சாத்தியமில்லே.. உனக் காவது அது பயன்படட்டும்.. அவன் கேட்ட விலைக்குப் பத்துப் பங்கு அதிகம் தர்றேன்... உன்னை ஏத்துக்குவானா?''

கண்களில் ஒரு சீற்றத்தோடு நிமிர்ந்தாள் அர்ச்சனா.

''ஏம்மா?''

''அது சாகவதமில்லேடீ... இன்னும் கொஞ்சம் அதிகம் தர இன்னொருத்தி வந்தா என் தாலி தரைல வீசப்படும்... அவன் புருஷன் இல்லேடீ... வியாபாரி... கல்யாணச் சந்தைல வரதட்சிணை வியாபாரம் நடத்தற ஆண் விபசாரி... அகப்பட்டுக்கற நிலைல இருந்தா அம்மாவோட முந்தானைல மறைஞ்சுக்குவான்... இதுக்கெல்லாம் பாடம் கத்துக் குடுக்க வழியே இல்லே....''

''இருக்கு அர்ச்சனா....''

''என்ன சொல்றே நீ?''

''நான் அவனைக் கல்யாணம் செஞ்சுக் கறேன்....

''புரியலே....''

''அப்பா கொஞ்சம் வாங்க....''

''என்னம்மா?''

''நான் சுமங்கலியாப் போறதுல உங் களுக்கு ஆட்சேபனை உண்டாப்பா?''

ஓசைப்படாமல் அழத் தொடங்கினார் அப்பா.

''ப்ளீஸ் டாடி... விஷயம் ரொம்ப அவ சரம்... அர்ச்சனா தர்ற அட்ரஸுக்குப் போங்க... அங்க நிச்சயமாகியிருக்கிற கல்யாணம் நிக்கணும்....''

''தப்பில்லையாம்மா?''

''விலை கொஞ்சம் அதிகமாகும். வியா பாரம் கண்டிப்பாப் படியும்... கல்யாணம் அவனுக்கு என்னோடதான். இது தீர்மானம்.''



ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் அவனது மரணம் தள்ளிப் போடப்படு கிறது. —இத்தாலியப் பழமொழி.

வீணாகப் போன நாள் எது? நாம் ஒரு தடவைக் கூடச் சிரிக்காமல் கழித்து விட்ட நாளே!

—செபாஸ்டியன்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.

''உன்னோட கெடு தெரிஞ்சா?''

''தெரிய சான்ஸ் இல்லே டாடி... நீங்க காட்டற சலவை நோட்டுகள் அவனோட ஐம்புலன்களையும் அடைச்சடும்... பாஸ் டர்ட் விசாரிக்கவே முயற்சி செய்ய மாட் டான். பாவம் மாட்டிக்கப் போற அந்த முகம் தெரியாத பெண்ணும் பிழைக் கட்டும். சீக்கிரம் டாடி...''

''இப்பத் திருப்தியாச்சா அர்ச்சனா? கொம்பில்லாத மாடா பெண்கள் இருக்கிற வரைக்கும்தான் குனிஞ்சும், வளைஞ்சும் பயப்படணும். முட்டித் தள்ளிடலாம். பயப் படாதே....''

முட்டித்தான் தள்ளினாள்.

கடிதங்களை அப்பாவுக்கு எழுதியதன் மூலம் அவனது அசுர ஆசைக்கு ஆதாரம் திரட் டினாள்.

முதல் நாள் முகம் வேர்த்து, உதடு காய்ந்து, மார்புக் கூடு படபடத்தபோது முடிவு வெகு சமீபத்தில் இருப்பதை மரண பயம் சொல்லியது.

கயிற்றைத் தொங்கவிட்டு.ஸ்டூலை நகர்த்தி, கடிதத்தைப் பாதியில் நிறுத்தி...

ஊரார் முன் அவன் ஒரு புழுவாகப் பார்க் கப்பட...

போலீஸாரின் தீவிர விழிகளில் குதறப் பட்டுக் கிழிய....

அதன் அவமானத்தில் அணு அணுவாகத் துடிக்க....

போய்ச் சேர்ந்துவிட்டாள் அகல்யா.

பி. எம். ரிப்போர்ட் வந்து விட்டது.

தற்கொலைக்கான சாத்தியக்கூறுகள் அதில் இருக்காது.

கொலையோ இது என்று குழப்பம் வரும். அவனுக்கு 'லிம் போசார்கோமா' இருந்தது தெரியும். அதில் அந்திம நாட்களின் அவசரம் புரியும்.

மரணத்தின் வாசலில் இருக்கும் பெண்ணை ஏன் மணந்தான் என்று ராமை நோக்கி ஒரு புதிய கேள்வி கிளம்பும்.

பணத்தாசை....

சொத்து வெறி....

அவனை இனிமேல் போலீசும் பொது மக்களும் பார்த்துக்கொள்ளட்டும்.


உள்ள மதிப்புக்கு மேல் ஒற்றை ரூபாய் கூட
தந்துவிட மாட்டாள் லலிதா...

அதனால் தான் அவள் ஸர்ஃப் வாங்குகிறாள்.

''ஆமா. ஸர்ஃப் தான் எனக்கு. அதுக்குக் கொடுக்கற பணம் முழுக்க முழுக்க மதிப்பு. அதுக்குக் குறைஞ்சு போவானேன் நான்—அதுவும் இந்த நாளிலே போய்.''

இருந்தாலும், மலிவு வாஷிங் பவுடர் வாங்கினீங்கன்னா பணமிச்சம் இருக்கத்தானே இருக்கும்?

''கேலிக்கூத்து! மலிஞ்ச சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் உண்டே.''

ஒத்துக்கறோம். மலிவுப் பவுடர்களைவிட அதிகமா அப்படி என்ன மதிப்பு இருக்கு ஸர்ஃப்லே?

''அப்படிக் கேளுங்க. மலிவுப் பவுடரோட 1 முழுக் கிலோ பைக்குள்ளே இருக்கற அதே அளவுப் பவுடர் ஸர்ஃப் ½ கிலோ பேக்கிலே இருக்கு.''

ரெண்டு மடங்கா? அதென்னமா?

''அதுதானுங்க ஸர்ஃப்! ஸர்ஃப் ½ கிலோ பேக்குலே உள்ள பவுடரை எடுத்து, மலிவுப் பவுடரோட காலியான 1 கிலோ பைக்குள் அப்படியே கொட்டினா கணக்கா பை ரொம்பிடும்.''

அப்படியேதான் இருந்தாலும்...

''இருங்க. எடை பார்க்கப்போனா, ஸர்ஃப் மதிப்பு ரொம்ப ரொம்ப அதிகம்தான். ஸர்ஃப் மாதிரி வெளுப்பை எந்த மலிவுப் பவுடரும் தந்துட முடியாது, கலர்த் துணிகளோட பளபளப்பை ஸர்ஃப் மாதிரி எதுவுமே காப்பாத்தாது. என்னமா வெளுக்குது ஸர்ஃப், எங்க வீட்டுத் துணிகள் ஒண்ணொண்ணையும் புதிசுபோல சோபிக்க வைக்குது சலவைக்கு சலவை.''

நியாயம் இருக்கு நீங்க சொல்றதுலே...

''சொல்ல இன்னும் எவ்வளவோ இருக்கு. கடூரமான மலிவு பவுடருங்க சருமத்துக்கே கேடு. ஸர்ஃப் அப்படி இல்லை, அலசற என் கைகளைத் துணிக்கூட பாதிக்காத சுகமான பவுடர். அனுபவத்துலே சொல்றேன்.''

புரியுது, நல்ல மதிப்புன்னு நீங்க எதைக் கண்டு வாங்கறீங்கன்னு தெரியுது...

''ஆமா! சொல்ப ரூபாய்களை மிச்சம் புடிக்கறதுக்காக மாசாமாசம் இவ்வளவு அனுகூலங்களையும் கோட்டைவிட நான் தயாராயில்லை. கஞ்சத்தனமா சில்லறை சேர்க்கறதுக்கும் செழிப்பா குடித்தனம் நடத்தறதுக்கும் வித்தியாசம் என்ன, கொஞ்சநஞ்சமா!''

எடைபோட்டு மதிப்பிட்டால் புரியும்: ஸர்ஃப் வாங்குவதே புத்திசாலித்தனம்.



LINTAS SU 320 20 25 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

வாசகர் பங்கு



நுழைவுபசார விழா!

வேலையில் சேர்ந்த அன்றே ஸ்வீட் காரம். காபி என்று ஒரே உபசாரம் செய்தனர். சக ஊழியர்கள். எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. எனக்கு ஒரே மகிழ்ச்சி... பியூன் வந்து அத்தனைக்கும்சேர்த்துப் பெரிய பில்லாக என் கையில் திணிக்கும் வரை. அடுத்த நாள் மற்றொருவர் புதிதாக வேலையில் சேர்ந்த போது குஷி திரும்பி விட்டது. ஆபீஸ் வழக்கப்படி மறுபடியும் ஸ்வீட். காரம். காபி — அவர் செலவில்!

வி. பாலகிருஷ்ணன், மோகனூர்

புதுமைப் பள்ளிக்கூடம்

ஆசிரியராகப் பணியேற்கப் போய்ச்சேர்ந்த போது பள்ளிக்கூடக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த 'சீல்' தான் என்னை வரவேற்றது. வாடகை தகராறு என்று விசாரித்து அறிந்து கொண்டேன். அன்று மாணவர்களும் ஆசிரியர்களும் கடை வீதியில் கூடியிருந்தனர். வீதியிலும் விட்டுத் திண்ணைகளிலும் அமர்ந்திருந்த மாணவர்களுக்கு ஓடி ஓடி விளைத்

கொடுத்தேனே?'' என்று ஒரேயடியாய் அடித்துப் பொய் சொல்லி கலாட்டாச் செய்து. (துணைக்கு நரிக்குறவக் கும்பல் சேர்ந்து விட்டது) என்னிடம் பணத்தைக் கறந்து விட்டாள்.

எம். அங்குசாமி, ஐம் நகர், குஜராத்

அதே! அதே!

25 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தேன். காலம் தாழ்த்தி வருபவர்கள் ரிஜிஸ்தரில் காரணத்தை எழுத வேண்டும் என்பது விதி. வழக்கமாக முதலில் லேட்டாக வருபவர் 'ரயில் லேட்' என்று எழுத, பிறகு வருபவர்கள் அதற்குக் கீழே 'Ditto—..' குறி போட்டு விடுவார்கள். எனது நண்பன் 'மனைவியின் பிரசவம்' என்று உண்மைக்காரணத்தை எழுதினான். அன்று தாமதமாக வந்த பலர் கண்ணை மூடிக் கொண்டுஅதற்குக் கீழே 'Ditto' போட்டுவிட்டார்கள்

என். வரதன், சென்னை-40

அடாது மழை பெய்தாலும்...

வேலையில்சேர வேண்டிய நாளில் திருச்சி





இந்தியிலும் ஆங்கிலத்திலும் மாறி மாறிப் பேசுவார். நான் போய்ச் சேர்ந்த அன்று ''ஜல்தி ஹார்லிக்ஸ் லாவோ'' என்றார். நான் காண்டீனுக்குப் பறந்து ஹார்லிக்ஸ் இல்லாததால் போர்ன்விடாவை வாங்கிக் கொண்டு போய் நீட்டினேன். விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார். பிறகு தான் புரிந்தது அவர் ஹார்லிக்ஸ் என்று குறிப்பிட்டது அந்த நிறுவனம் சம்பந்தமான ஃபைலைத்தான் என்று.

அபர்ணா, சென்னை-17

ராகிங்!

அய்யம்பேட்டையில் ஒரு வங்கியில் முதன் முதலில் வேலைக்கு அமர்ந்த போது, மானேஜர் உட்பட அனைவரும் 'அய்யம்பேட்டை சுத்தி பார்க்கலீங்களா?' என்று விசாரித்தனர். ''இங்கு என்ன இருக்கிறது சுத்திப் பார்க்க?'' என்று நான் அலட்சியமாகச் சொன்னதும் ''அவசியம் நீங்க சுத்தி பார்க்கணும்'' என்று சொல்லி ஒரு சுத்தியலைக் கொண்டு வந்து நீட்டினார்கள்!

எல். ஆர். லதா, அய்யம்பேட்டை

வேலைக்குப் போனபோது


தான் விவியோகித்ததும், பட்டாணிக்கடையில் அமர்ந்திருந்த தலைமை ஆசிரியரிடம் அப்பாயின்ட்மென்ட் பெற்றுக் கொண்டதும் மறக்க முடியாத அனுபவங்கள்.
ஆர். சேது, நெய்வேலி

மழலை மொழியால் மனம் தெளிந்தது

நர்சரி பள்ளியில் வேலைக்குச் சேர்ந்த அன்று தந்தையை இழந்ததால் குடும்பப் பொருளாதார நிலையைச் சீர் தூக்க வேலைக்குப் போக வேண்டியுள்ளதை எண்ணிக் கொண்டேன். கண்ணில் நீர் தளும்பி விட்டது. ஒரு சிறுமி ''என்ன டீச்சர் உங்க வீட்டில் கூட 'ஸ்கூலுக்குப் போன்னு' அடிச்சாங்களா?'' என்று கேட்கவும் சுயபச்சாதாபம் விடுபட்டுப் போயிற்று.
து. காஞ்சனா, பெங்களூர்-10

குறத்தியின் தந்திரம்

போஸ்ட் ஆபீஸில் வேலைக்குச் சேர்ந்த அன்று நரிக்குறவப் பெண் ஒருத்தி இரண்டு கார்டு கேட்க, கொடுத்துவிட்டு அவளிடம் காசு கேட்டேன். உடனே அவள், ''மீதி சில்லறை எங்கே? நான்தான் பத்து ரூபாய்





யில் காவிரி உடைப்பெடுத்து ஓடியது. சாலையில் நடக்கும் போதே மரங்கள் சடசடவென்று முறிந்தன. தலைக்குமேல் சூட்கேஸைப் பிடித்துக் கொண்டு மார்பளவு நீரில் நடந்து, ஆடையெல்லாம் சேறான கோலத்தில் ஆபீஸுக்குள் நுழைந்தேன். 'இந்தப் புயலிலும் வந்து விட்டீர்களே' என்று மேலதிகாரி பாராட்டிய போது பட்ட கஷ்டங்களெல்லாம் அடிபட்டுப் போயின.
எஸ். சோமசுந்தரம், திருச்சி-5

முதலும் கடைசியும்

தன் அம்மாவின் சாயலை என்னிடம் கண்டதாலோ என்னவோ புதிதாகப் பள்ளியில் சேர்ந்த அந்த நர்ஸரி வகுப்புக் குழந்தை என்னைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பிக்க, எனக்கு வீட்டில் விட்டுவிட்டு வந்த என் குழந்தையின் ஞாபகம் வந்து விட்டது. அன்றே நான் வேலைக்குப் போன முதலும் கடைசியுமான நாள்
திருமதி லீலா, கல்கத்தா-26

ஹார்லிக்ஸும் போர்ன்விடாவும்

எங்கள் மானேஜர் ஒரு சர்தார்ஜி.

ஊருக்கு உபதேசம்

தற்காலிக குமாஸ்தாவாக வேலையில் சேர்ந்த அன்று தலைமை குமாஸ்தா ஏகமாக உபதேசித்தார். மறுநாள் காலை எனக்கு உபதேசம் செய்தவரே ஆபீஸ் பணத்தைக் கையாடிய குற்றத்துக்காக போலீஸ்வானில் ஏற்றப்பட்டபோது எனக்கு ஒரே அதிர்ச்சி!
எஸ். ஸ்ரீனிவாஸன், வேடசந்தூர்

புதிர் போட வந்தாளே

மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சென்ஸஸ் எடுக்க ஒரு கிராமத்துக்குப் போனேன். ஒரு வீட்டுப் பெண்ணிடம் அவள் கணவன் பெயரைக் கேட்ட போது ''அதுதான் 'உஸ் உஸ்'னு அடிக்குங்களே...'' என்றாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அடுத்த வீட்டுப் பெண்தான் விஷயத்தை விளக்கினாள்: ''அவள் புருஷன் பேர்காத்து. அவள் பேரைச் சொல்ல மாட்டாள்.''
சி. சம்பத்குமார், திருச்சி-4

தப(ா)ல்காரர்

தபால் ஆபீஸ் ஏஜெண்டாக உத்தி



யோகம் ஏற்ற அன்று சைக்கிளில் புறப்பட்டு ஒரு வீட்டு வாசல் கதவைத் தட்டி 'சார் போஸ்ட்' என்பதற்குப் பதில் 'சார் பேஸ்ட்' என்று ஸ்டைலாகக் கூவினேன். வெளியே வந்தவர், 'கால்கேட்டா? விக்னல்டுவா? எந்த பேஸ்ட்?' என்று கேட்டபடியே தபாலை வாங்கிக் கொண்டார்.
ஜி. தங்கமுத்து, கோவை

எளிமைக்குக் காலமில்லை

எம். பி. பி. எஸ். முடித்து விட்டு நரம்பியல் பிரிவில் சேர்ந்த போது என்னுடன் சேர்ந்த மற்றொரு நண்பர் படாடோபமாக உடை அணிந்து வந்தார். எங்கள் ஸீனியரான டாக்டர் ராமமூர்த்தியோ எளிமையே உருவமாகக் காணப்பட்டார். சிகிச்சைக்கு வந்த நோயாளி ஒருவர் 'நான் பெரிய டாக்டரைப் பார்க்கிறேன்' என்று திரு. ராமமூர்த்தியை விட்டு விட்டு என் சகாவிடம் போய் விட்டார். 'வித்தைக்கு வினயம் அவசியம்' என்பது எவ்வளவு உண்மை!
எஸ். ராமநாதன், திருநெல்வேலி

மறவேனே எந்நாளிலுமே!

எம். எஸ். ஸி. பரீட்சை முடித்த மறு நாளே கணக்கு ஆசிரியராகச் சேர்ந்தேன். முதல் வகுப்பு அல்ஜீப்ரா. உற்சாகமாகச் சொல்லிக் கொடுத்தேன். நேரம் போனதே தெரியவில்லை. வகுப்பு முடிந்ததும் ஒரு மாணவன் ஓடி வந்து என் கையைப் பற்றி முத்தமிட்டான். ''கணக்கு வகுப்பு, அதுவும் அல்ஜீப்ரா. இவ்வளவு சுவாரஸ்யமாக இருக்க முடியும் என்று நினைக்கவே இல்லை சார்'' என்றான். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. இன்றும் என்னை ஊக்குவித்து வருவது இச்சம்பவத்தின் இனிய நினைவுகள் தான்.
எம். ஆர். நடராஜன், செகந்திராபாத்

ஒருநாள் வாழ்வு

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது காந்தி குல்லா அணிந்து வந்த மாணவனை 'குல்லா அணியக் கூடாது' என்றேன். அவன் 'தந்தையின் கட்டளை' என்றான். ''தந்தையின் கட்டளை வீட்டு வரையில் தான். நாளை குல்லா அணிந்து வந்தால் சீட்டுக் கிழிந்து விடும்'' என்று சொல்லிவிட்டேன். மறுநாள் அம்மாணவனின் தந்தை தலைமை ஆசிரியரிடம் புகார் செய்ய என் சீட்டுக் கிழிந்து விட்டது!
ஜி. ஜி. ஏப்ரகாம், கோவை

மணமறிந்த மேலதிகாரி

வேலையில் சேர்ந்த அன்றே பெண் பார்க்க வருவதால் பெர்மிஷன் கேட்கச் சொன்ன அம்மாவிடம் எரிச்சல். மேலதிகாரியிடம் பொய்க் காரணம் சொல்லி அனுமதி கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே ''பெண் பார்க்க வருகிறார்களா?'' என்று கேட்டார். அன்று வந்தவரும், என் கரம் பிடித்தவரும் அதே மேலதிகாரிதான்!
நிர்மலா ஜெயராமன், பெங்களூர்-3

கோவிந்தா கோ...விந்தா

பம்பாயில் பாங்க் ஆபீஸர் வேலையில் அமர்வதற்கு முன் மருத்துவரிடம் சான்றிதழ் பெறச் சென்றேன். அவர் என் முகத்திலும் தோளிலும் இருந்த பருக்களைப் பார்த்துவிட்டுத் தலையில் உள்ள பொடுகே அதற்குக் காரணம் என்றும் தலையை மொட்டை அடித்துக் கொண்டால்தான் சான்றிதழ் தருவேன் என்றும் சொல்லிவிட்டார். ஸ்பெஷலிஸ்டின் சான்றிதழ் கூட செல்லுபடியாகவில்லை. வேறு வழியின்றித் திருப்பதிக்குப் போய் மொட்டை அடித்துக் கொண்டேன்.
ஆர். வி. ரமணி, சென்னை-28

கம்ப்யூட்டர் வரவேற்பு

இடைவேளையின் போது, புதுமுகமான என்னை கம்ப்யூட்டர் அறைக்கு அழைத்துப் போனார்கள். அதில் அவர்கள் சொன்னதை டைப் செய்யவும் '' You are unfit for Accounts Assistant Post'' (நீங்கள் அக்கவுண்ட்ஸ் அஸிஸ்டண்ட் பதவிக்கு லாயக்கற்றவர்) என்று பதில் வந்து விட்டது. எல்லோரும் சிரிக்க, நான் அசடு வழிய... பிறகு தான் தெரிந்தது அவர்கள் அவ்வாறு கம்ப்யூட்டரை Programme செய்து வைத்திருந்தனர் என்று.
டி. மோகன், சென்னை-17

பழகாத தோஷம்

ஸ்டேட் பாங்கில் சேர்ந்ததும் சேவிங்ஸ் பாங்க் பகுதியில் அமர்த்தப்பட்டேன். கணக்கு ஆரம்பிக்க வந்த ஒருவர் 'இது சேவிங்ஸ் பேங்கா?' என்று கேட்டபோது நான் ''இல்லை, இது ஸ்டேட் பாங்க்'' என்று அவசரமாகப் பதில் சொன்னேன். எல்லோரும் சிரித்த போது தான் என் தவறு எனக்குப் புரிந்தது.
விஜயலக்ஷ்மி பாலகிருஷ்ணன், பம்பாய்-89

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடைவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

ஆர். வி. ரமணி
20, 5-வது குறுக்குத் தெரு,
மந்தவெளிப்பாக்கம், சென்னை-28

நிலவே நீயும் பேசாதே

சுபா



1

இத்தனைக்கும் அனுசூயா ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் பதித்திருந்தாள். மிக மெலிதாய்ப் பெய்து கொண்டிருந்த தூறல் நின்று போயிருந்தது. காற்று சிலிர்த்துச் சிலிர்த்துத் தோட்டத்துச் செடி கொடிகளைச் சிலுப்பிக் கொண்டிருந்தது. தோட்டம் என்றால் கையகலத் தோட்டம். அதுவே சென்னை வீட்டில் ஓர் ஆச்சரியம். உள்ளேயிருந்து வந்த வார்த்தைகள் காதில் அறைந்தன. அனுசூயா லட்சியம் செய்யவில்லை.

''அனுசூயா... ஏய்... அனுசூயா...''

வீரராகவன் மிக இரைந்து கூப்பிட்டுப் பார்த்தார். குரலில் கோபம் கொந்தளித்தது.

அனுசூயா திரும்பாமலே உட்கார்ந்திருந்தாள்.

சட்டென்று வீரராகவன் முன்னேறினார். அவள் தோளைப் பற்றிச் சற்று முரட்டுத்தனமாகத் தம் பக்கம் திருப்பினார்.

''இப்ப நீ வரப் போறியா இல்லையா?''

தடிமனான ஃப்ரேம் போட்ட கண்ணாடி. அவரது உக்கிரப் பார்வை கண்ணாடியைத் துளைத்து அவள் முகத்தைத் தாக்கிற்று. கோபத்தில் மூக்கு விடைத்திருந்தது. கீழ் உதடு தனியாகத் துடித்தது. பரந்த மார்பு திறந்திருக்க, அதன் சுருள் முடிகளின் நரையில் வியர்வை பெருகி இறங்கிக்கொண்டிருந்தது. அனுசூயா அவர் உலுக்கியதை ஆட்சேபிக்கிற மாதிரி பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

''கேட்டேனே... காதில விழல...?''

''நான் வரல்ல'' என்றாள் அனுசூயா. குரலில் அமானுஷ்ய நிதானம். அந்த அறைக்குள் பார்வையைச் சுற்றிலும் ஓட்டினாள்.

சின்னவள் கஸ்தூரி தாவணி முனையைக் கையில் உருட்டியபடி பயந்திருந்தாள். கௌரி சாம்பிராணிக்கு வைத்திருந்த நெருப்பை ஊதிக் கொண்டிருந்தாள்.

''ஒம் பொண்ணு என்ன சொல்லுதுன்னு கேட்டியா?''

ஊதிக் கொண்டிருந்த கௌரி தலையை நிமிர்த்தினாள். கூடவே வகிடு முனை நரையும் நிமிர்ந்தது. அம்மாவுக்கு அந்த நரை ஒரு தனி அழகு. முதல் மூன்று நான்கு முடி மட்டும் நரை படிந்து முகத்துக்கு எல்லையிட்டுக் கொண்டே இறங்கும். காதருகில் வளையும். அந்த நரை இல்லாது போனால் அம்மாவை யாரும் ஐம்பது வயதுக்காரியாக மதிக்க மாட்டார்கள். நாற்பதைத்தாண்ட அச்சப்படுவார்கள்.

''அனுசூயா... ஏம்மா அடம் பிடிக்கறே.. அப்பா ஒன் நல்லதுக்குத்தானே சொல்றாரு?'' என்று மென்மையான குரலில் அவளை நெருங்கிக் கேட்டாள். லேசான சாம்பிராணி வாசனை நாசியைத் தடவிக்கொடுத்தது. அனுசூயா நிமிர்ந்து பார்த்தாள். அம்மா முகம் முழுக்க மஞ்சள் பூசியிருந்தாள். நெற்றி மத்தியில் இருந்த பெரிய

குங்கும வட்டத்தையும், கழுத்தில்ஜொலித்த நகைக்கொத்தையும் கவனித்தாள்.


''கேட்டதுக்குப் பதில் சொல்லாமே, புதுசா இன்னிக்குத்தான் என்னைப் பார்க்கற மாதிரி பாரு...''

''எனக்கு இதில எல்லாம் பிடிப்பே இல்லாமப் போயிடிச்சிம்மா... யார்யாரோ வந்து பூஜை ரூம்லே உக்காந்து பூஜை அது இதுன்னு ரெண்டு மணி நேரம் செலவழிச்சிட்டு எலுமிச்சம் பழத்தைக் கையில கொடுக்கறாங்க. இன்னும் நாற்பது நாள்ல கல்யாணம்னு சொல்றாங்க... ஏதாவது நடக்குதா... சும்மா சும்மா எத்தனை தடவை ஏமாந்து போறது? அப்படி சும்மா சொல்லிட்டுப் போறவங்க கால்ல எல்லாம் ஏன் விழணும்?''

''ஒனக்காகத்தான அனுசுயா இத்தனை கஷ்டப்படறோம்?''

''வேண்டாம்னுதான் சொல்றேன்... இதெல்லாம் வேணும் வுட்டுடு...''

சட்டென்று அறைக்குள் வேசாகசென்ட்



மணம் பரவியது. கூடவே பாட்டொலி கேட்டது.

'காற்றுக்கென்ன வேலி டொட டொட
டொய்ங்...
கடலுக்கென்ன மூடி... டொய்... டொய்ங்
கங்கைவெள்ளம் சங்குக்குள்ளே அடங்கி
விடாது
மங்கை உள்ளம் பொங்கும் போது
விலங்குகள் ஏது...? டொட்டொடய்ங்

சூழ்நிலை மறந்து கஸ்தூரி கலகலவென்று சிரித்தாள். கைப்பையைச் சுழற்றிக் கொண்டே உள்ளே வந்த கதம்பா சூழ்நிலையை உணர்ந்து சட்டென்று பாட்டை நிறுத்தினாள்.

''என்னம்மா விஷயம்?'' என்றாள் மெல்லிய குரலில்.

கௌரியின் கையிலிருந்த சாம்பிராணி நெருப்பு அவளுக்கு ஏறக்குறைய எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிவிட்டது.

''மறுபடியும் அனுசூயா ஸ்ட்ரைக் பண்ணுதா?'' என்றவள் பூஜையறைவரை சென்று எட்டிப் பார்த்தாள்.

''அனுசூயா நான் சொன்னாத்தான் கேக்கும். நீ நவுரும்மா...'' என்று அம்மாவை விலக்கிவிட்டு கதம்பா அனுசூயாவின் எதிரில் நின்றாள். அனுசூயா தங்கையைப் பார்த்தாள். இரண்டு வருடங்கள் பின்னால் பிறந்துங்கூட இரண்டு பிடி தன்னைவிட உயரமாய் இருப்பதில் லேசான பொறாமை வந்தது. அவளுக்கு அனுசூயா மாதிரி இல்லாமல் கத்தி வைத்துக் களிமண்ணை வழித்து அமைத்த மாதிரி மூக்கு. பார்வையாலேயே கயிறுவீசிக் கட்டி இழுப்பாள். அந்தச் சின்ன உதடும் அரிசிப்பல்லும் தான் அனுசூயாவுக்குத் தங்கை என்று கோடி காட்ட,

---

'ஆதி சங்கராச்சார்யா' என்றசமஸ்கிருதப் படம் மத்திய அரசால் 'மிகச் சிறந்த படம்' என்று தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கத் தாமரை பரிசு பெற்றது. அந்தப் படம் கேரளாவில் நூறு நாள் ஓடியது. சண்டிகார் நகரில் ஆறு வாரத்துக்கு மேல் ஓடியது. ஆனால்... அந்தப் படம் தயாரிக்கப்பட்ட கர்நாடக மாநிலத்தில் இதுவரை அதை வாங்க யாரும் முன்வரவில்லை!

('டெக்கான் ஹெரால்ட்' இதழிலிருந்து)
அனிதா ராமச்சந்திரன்.



''ஆபீஸ்ல வேலை இல்ல. யாரையும் மேய்க்கவும் முடியாது. அதான் இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டேன். இங்க என்னடான்னு நீ சின்னக் கொழந்தை மாதிரி நடந்துக்கறே. எனக்கு மேய்க்கறதுக்கு ஒரு ஆள்னு மனசு சந்தோஷப்பட்டுக்குது...'' என்றவள் சட்டென்று பரிவான குரலுக்குத் தாவினாள்.

''ச்சே, என்ன அனுசூயா இது? முன்னெல்லாம் நீ எவ்வளவு சாந்தமா இருப்ப. பூனைக்குட்டி மாதிரி இருக்கற எடந்தெரியாம. இப்படி எப்படி நீ மாறிப் போனே? அப்பாவை எதுத்து அம்மாவை எதுத்து எப்படி ஒன்னால பேச முடியுது?'' அனுசூயாவைச் சின்ன ஊசியம்பு தாக்கிய மாதிரி இருந்தது.

''அப்பல்லாம் இந்த மாதிரி இவங்க ஜோசியம், பூஜைன்னு அலைஞ்சிக்கிட்டா இருந்தாங்க. எனக்குப் புடிக்கலே, புடிக்கலைன்னு சொல்லிட்டிருக்கறப்ப இந்த மாதிரில்லாம் செய்ஞ்சா கோவம் வராது கதம்பா?''

கதம்பா கைப்பையைக் கஸ்தூரியிடம் கொடுத்தாள்.

''இல்ல அனுசூயா இது கோவம் இல்ல... துக்கம்... ஒனக்கு இருபத்தாறு வயசு ஆவுது. இன்னும் கல்யாணம் ஆகலையேங்கற ஆத்திரம். கூடப் படிச்சவங்கள்ளாம் புருஷனும், ரெண்டு கொழந்தையுமா அப்பப்ப வழியில பார்த்துச் சிரிச்சிட்டுப் போவுதுங்க. அதைப் பாத்துட்டு நமக்கு இன்னும் கல்யாணம் ஆகலையேன்னு நெனைச்சிக்கிற...''

''என்ன கதம்பா.... நீயே இப்படிப் பேசறே?''

''பின்ன என்ன? அப்பாவும் அம்மாவும் ஏன் ஜாதகக் கட்டைத் தூக்கின்னு ஜோசியர் பின்னாடியும் கோவில் பின்னாடியும் அலையறாங்க? ஒனக்குக் கல்யாணம் ஆவணும்னு தானே? சிலபேர் ஊடுங்க மாதிரி இங்க பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணித் தரதுக்குக்கூட முடியாதவங்களாவா இருக்காங்க? ஒன் ஜாதகத்தில் செவ்வா தோஷமும் பூராட நட்சத்திரமுமா அமைஞ்சு போனதுக்கு அவங்க என்ன செய்வாங்க, பாவம்?''

''அதுக்காகப் பரிகாரம், பரிகாரம்னு சாகற வரைக்குமா பண்ணுவாங்க? எனக்குத்தான் கல்யாணமே வேணாங்கறேனே, வுட்டுட வேண்டியதுதானே?''


''சரி போவட்டும். அப்பா அம்மாவுக் கோசரம் வந்து அவர் கால்ல வுழுந்து கும்பிட்டுக்க.''

கௌரியின் பார்வையில் இறைஞ்சுதல் இருந்தது. அனுசூயா சற்றுத் தயங்கினாள்.

''ப்ளீஸ் அனுசூயா'' என்றாள் கதம்பா. ''பூஜை ரூம்லே ஒருத்தர் காத்திட்டிருக்காரு. நீ இப்ப வரமாட்டேன்னு அடம் புடிச்சா அப்பா அவர் எதிரிலே போய்த் தலையைக் குனிஞ்சுக்கணும்.''

''சரி'' என்று அனுசூயா அசைந்து கொடுத்தாள். ''ஆனா இதான் கடைசித் தரம். இனிமே நம்ப வீட்ல எனக்காகன்னு இந்த மாதிரி பூஜைல்லாம் பண்ணக் கூடாது.''

''தரத்தோடு விலையையும்
எம் மாதிரி நோட்டம்
பார்த்து வாங்குங்க,
கெட்டிக்காரி நீங்கதான்''



''நியூட்ரமுல் தான் என் கைராசி.''

''கண்ணை மூடிக்கிட்டு முடிவு பண்றவ நான் இல்லே. கண்முழிப்பா கவனிக்கறவருக்குக் கிடைக்குது சகாய விலையிலே தரமான பண்டம்-- இதோ எனக்கு நியூட்ரமுல். ISI தரம் இருந்தாகணும், இருக்கா பார்ப்பேன். நியூட்ரமுல் ஒண்ணுக்குத் தானே அது இருக்கு, வேறெந்த கோக்கோ மால்ட் பானத்துக்கும் கிடையாதே. அதுவும், குடும்ப மனசுப்போல வாங்கக் குடுத்து வெச்சவ நான், எங்க வீட்டுலே கண்டிப்பா நியூட்ரமுல் தான் வேணும்''.

''விளம்பரக் கதைகள் எல்லாம் என் கண்ணுலே மண்ணைத் தூவும்படி விடமாட்டேன். எதையுமே நான் நேரிலே பார்த்துத்தான் வாங்குவேன்''.



நியூட்ரமுல்	ரூ. 14.70
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

[illegible]

வீர ராகவன் மறுத்துப் பேச நினைத்து மனத்தை மாற்றிக் கொண்டார்.

''சரி வா...'' என்றார்.

அனுசூயா தளர்ந்த நடையுடன் அவரைப் பின்தொடர்ந்தாள். முதுகு குனிந்து முழங்காலிட்டு நமஸ்கரித்து, ''ஒன் கல்யாணம் அமோகமா நடக்கும்'' என்ற ஆசீர்வாதத்தைச் சாமியாரிடம் பெற்றுக்கொண்டு திரும்பினாள்.

'ஒன் கல்யாணம் அமோகமா நடக்கும்'

இந்த ஒரு வார்த்தை தரப் போகிற சந்தோஷத்துக்காகத்தானே மறுபடியும் அப்பாவும் அம்மாவும் ஏகப்பட்ட செலவு செய்து பூஜைகளும் பரிகாரங்களுமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்? ஜாதகத்தை எடுத்துக் கொண்டு குங்கும -சாமியார், விபூதி சாமியார் என்று கேள்விப்படுகின்ற ஆட்களிடமெல்லாம் ஓடுகிறார்கள்.

அனுசூயா மறுபடியும் ஜன்னல் மேடையில் உட்கார்ந்து வானத்தை வெறித்தாள். அந்த வீட்டில் அவள் மட்டும் ஒருதனித் தீவாகிவிட்ட மாதிரி பட்டது அவளுக்கு.

இருபத்தாறு வயதில் கல்யாணம் நடக்காதது அவள் தப்பா என்ன? இல்லை அது தான் அவ்வளவு அதிகப்படியான வயதா? அம்மாவைக் கேட்டால் 'ஆமாம்' என்பாள்.

'பதினெட்டு வயசுல நான் ராஜியைப் பெத்துட்டேன். யாருக்குக் குடுப்பினை இல்லையோ தெரியலே. அது போய்ச் சேர்ந்திடுச்சு. அப்புறம் ரெண்டு தரம் உண்டாகியிருந்து எல்லாமே கலைஞ்சிடுச்சு. நாகர் கோயிலுக்குப் போயிட்டு நாகராஜனை வேண்டிக்கிட்டப்புறம் நீ பொறந்தே. நம்ப ஜாதியில இருபதுக்கு மேலே கன்னி கழியாம இருக்கிறது தப்பு. உனக்குப் பின்னாடி கதம்பா நிக்குது. என்னதான் ஆபீஸ் போற பொண்ணா இருந்தாலும் உறவில நாலு பேர் நாலு விதமாப் பேச மாட்டாங்க? இவளுக்கு என்ன பொறுப்பே இல்லேன்னு சொல்ல மாட்டாங்க? இன்னும் நாலே வருஷத்தில கஸ்தூரியும் காலேஜுப் படிப்பை முடிச்சுடும். எல்லாம் நாம பண்ண தப்பு. ஒன்னை இன்னும் ரெண்டு மணி நேரம் தள்ளிப் பெத்திருந்தா ஒனக்கு ஜாதகத்திலே இந்த எடைஞ்சல் இருந்திருக்காது.'

சிந்தனைகளின் அழுத்தம் இதயத்தைத் துவைத்துக் கொண்டிருந்தது. புழுக்கமான அறையில் வைத்துக் கதவைச் சாத்திவிட்ட மாதிரி இருந்தது. புதுக் காற்றைச் சுவாசிக்கத் துடிக்கிற உடம்பைப் போல மனதிலும் குமுறல் இருந்தது. காலாற நடந்துவிட்டு வரவேண்டும் போல இருந்தது.

எழுந்து நின்று வெளியில் வந்தாள். பர்ஸை எடுத்துக் கைப் பைக்குள் வைத்தாள்.

''அப்புறம்?'' என்று கஸ்தூரி எதையோ ஆவலாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வீரராகவன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கதம்பாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். கதம்பா முகத்தில் சிரிப்பு மாறாமல், ''சீட்லேர்ந்து நான் எழுந்து முன்னாடி வந்து நின்னுக்கிட்டேன். இவனும் மெது மெதுவா நவுந்து வந்து என் கிட்டக்க வந்துட்டான். எங்கேயோ பாத்துக்கிட்டே முழங்கையை மெதுவா இடுப்புல வெச்சுத் தடவிப் பார்த்தான். வாடா ராஸ்கல்னு நெனைச்சுக்கிட்டுக் கையில இருந்த பின்னால அந்த முழங்கைல ஒரு குத்துக் குத்தினேன் பாருங்க...தஸ்ஸா புஸ்ஸானு மொணங்கிக்கிட்டே அடுத்த ஸ்டாப்ல இறங்கி ஓடிட்டான்'' என்று சொல்லிவிட்டு ஆர்ப்பாட்டமாகச் சிரித்தாள் கதம்பா.

''பாத்தும்மா,எவனாவது ரெளடிப்பையன் கையக் கிய்ய நீட்டி அறைஞ்சிடப் போறான்'' என்றார் வீரராகவன் லேசான பதற்றத்துடன்.

''எல்லாம் சோப்ளாங்கிப் பசங்கப்பா... ஒரு மொறை மொறைச்சாப் போதும். எரும மாடு எருமை மாடா இருக்கறவன் கூடக் கையக் கால உதற ஆரம்பிச்சுடுவான். என்னை எவனாவது 'லவ்' பண்றேன்னு சொல்லட்டும். செருப்பால அடிக்கிறேனா இல்லியான்னு பாத்துக்குங்க... எங்க அனுசூயா கௌம்பிட்ட?''

சட்டென்று அத்தனை பேரும் திரும்பி அனுசூயாவைப் பார்த்தார்கள்.

கேட்டவுடன்தான் அவளுக்கு எங்கே போவது என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டது.

பாலாவைப் போய்ப் பார்த்தால் என்ன என்று தோன்றியது.

அவனைப் போய்ப் பார்த்தால் போதும். பார்த்துப் பேசிக் கொண்டிருந்தால் போதும். மனம் மெலிதாகிப் போகும்.

''ப்ரேமா வீட்டு வரைக்கும் போய்ட்டு வரேன் கதம்பா... வரியா?''

''நீ போம்மா. எனக்கு ஒரே டயர்டா இருக்கு. பிரேமா பசுமாடு மாதிரி. ரொம்ப சாது. நாம்ப நாலு வார்த்தை பேசினா அது ஒரு வார்த்தை சொல்லும். அது எப்படி என் க்ளாஸ்மேட் ஒனக்கு அவ்வளவு க்ளோஸாப் போயிட்டா?''

'பாலா தான் காரணம்' என்று சொல்லலாமா என நினைத்தாள்.

''ஆவக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''ஆவலாம். போய்ட்டு வா.''

அனுசூயா வாசலை விட்டு இறங்கினாள்.

(தொடரும்)

முசோலினி தம் அறைக்குவெளியே ஓர் அறிக்கையைத் தொங்கப் போட்டிருந்தார். அதிலிருந்த வாசகங்கள்:

''உள்ளே வருகிறவர்கள் என்னைக் கௌரவிக்கிறார்கள். வராமல் இருக்கிறவர்கள் மகிழ்ச்சியைத் தருகிறார்கள்.''

—டி.எஸ். பானு.





GANESHJI MANDIR

IRWIN ROAD,
NEW DELHI-1

An appeal to YOU

Construction of a Vimanam

Ganeshji Mandir, the first South Indian Temple founded in Delhi is without a Vimanam. It has now been proposed to construct the same at an estimated cost of Rs. 3/- lakhs. It could be possible only with the financial support of devotees like you. While conveying Their blessings both the Jagadgurus of Sri Kanchi Kamakoti Mutt and Sringeri Sri Sarada Peetam have desired that a large number of devotees should take part in making this project a success. I appeal to every one to contribute liberally for the early construction of the Vimanam and other structures. Your co-operation is very necessary and you may be pleased to forward your cheque drawn in favour of **'Ganeshji Mandir'** to Sri **S.R. IYER,** Secretary.

'இதோ யுத்த பரிஸ்ராந்தம் சமரே சிந்தியாஸ்திதம்...' என்று ஆதித்ய ஹ்ருதயம் ஸ்லோகத்தை ஆரம்பித்து அந்தப் பங்களாவே எதிரொலிக்கச் சொல்லி முடித்தார் சீனிவாசன். கம்பீரமான தோற்றம். நீண்ட கூர்மையான மூக்கில் அறிவுக்களை... பஞ்சகச்சம். மடிப்பு கலையாத அங்க வஸ்திரம்... சேவித்துவிட்டு எழுந்த அவரின் முன் வந்து நின்றாள் ஆண்டாள். தர்மபத்தினி. கையில் வெள்ளி டம்ளரில் ஆவி பறக்கும் காப்பி.

''என்னடி ஆண்டாள்...? இன்னிக்குச் சனிக்கிழமை... மறந்து போச்சா?''

சனிக்கிழமையானால் அவர் கோவிலுக்குப் போய்ப் பெருமாளைச் சேவிக்காமல் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டார். அப்போதுதான் ஆண்டாளுக்கு ஞாபகம் வந்தது.

''இல்லே... ராத்திரி பூரா தலைவலின்னு சொன்னேளே... அதனாலதான்... டயர்டா இருக்குமேன்னு கொண்டு வந்தேன்...''

தனக்குக் கிழமை மறந்து போனதைக் காட்டிக் கொள்ளாமல் சமாளித்தாள் அவள்.

அர்த்தமுள்ள ஒரு சிரிப்பைச் சிரித்துவிட்டு, கூடத்திற்குப் போய் விட்டார் சீனிவாசன். எந்த வியாதியும் தம் கொள்கையையும், பழக்கத்தையும் மாற்ற முடியாது என்பதைப் போல இருந்தது அந்தச் சிரிப்பு.

ஐம்பது வயதிலும் அவரின் கம்பீரமான நடை ஆண்டாளுக்கு ஒரு மாதிரியான மயக்கத்தைத் தந்தது. பிடிவாதமான மனுஷன். வக்கீலுக்குப் படித்து, கோர்ட்டுக்குப் போய்

புனிதமான உறவுகள்

கோவை அனுராதா



பொய் சொல்ல வேண்டியிருக்கிறதே என்று அந்த உத்தியோகமே வேண்டாம் என்று உதறிவிட்டார். அப்பா பார்த்த விவசாயத்தைக் கவனிக்கக் கிராமத்திற்கே வந்து விட்ட அலாதி மனிதர்.

அவரைப் பொறுத்தவரை அந்தக் கிராமத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் கிடையாது. சீனிவாசன் ஒரு பஞ்சாயத்தில் தீர்ப்பு சொல்லுகிறார் என்றால் அந்த கேஸ் சுப்ரீம் கோர்ட் போனாலும் ஜெயிக்காது. அவரின் வாக்கு அந்த ஜனங்களுக்கு வேதவாக்கு.

''அண்ணா... அண்ணா... கொஞ்சம் நில்லுங்கோ...''

வாசலில் தயாராக நின்ற வில்வண்டியில் ஏறப் போன சீனிவாசனை வழக்கமான அந்தக் குரல் தடுத்து நிறுத்தியது.

''ஒரு முக்கியமான நியூஸ்...'' என்று தலைதெறிக்க ஓடிவந்தான் வரதன்.

ஒரு வேலைக்கும் உதவாமல் வீட்டில் தண்டச்சோறு தின்று கொண்டிருக்கும் கிராமத்து நியூஸ் பேப்பர். அவருக்குத் தூரத்து உறவு.

''அண்ணா... நம்ம தெருவைப் புடிச்சிண்டிருந்த பீடை ஒழிஞ்சுது.''

''என்னடா உளர்றே?''

''உளறலேண்ணா. உண்மையைத்தான் சொல்றேன். தெருவையே அசிங்கம் பண்ணிண்டு வந்த ருக்குமணி இன்னிக்குக் காலம்பற இந்து மணிக்குச் செத்துப் போயிட்டா. மார்டைப்பாம்... இன்னும் எடுக்கல்லே... உங்களைத்தான் எதிர்பார்த்துண்டிருக்கா...''

''என்னது... ருக்குமணி போயிட்டாளா...?'' வழக்கத்துக்கு மாறான அதிர்ச்சியுடன் கேட்டார் சீனிவாசன். வண்டியில் காலை வைக்கப் போனவர், தெருவிலேயே சிலை போல நின்று விட்டார். வரதன் இது போல எத்தனையோ சாவுச் செய்திகளை அவரிடம் சொல்லியிருக்கிறான். ஆனால் இவ்வளவு மாற்றத்தை அவரிடம் பார்த்ததில்லை.

ருக்குமணி போய் விட்டாள். சீனிவாசனால் நம்ப முடியவில்லை. எவ்வளவு கட்டுமஸ்தான உடம்பு. ரேஸ் குதிரையைப் போல அவள் தெருவில் நடந்து வந்தாலே இளவட்டம் முதல் கிழம் வரை திரும்பிப் பார்க்காமல் போக முடியாது. அவ்வளவு கவர்ச்சியான உருவம்.

கண்ணில் லேசாகப் பனித்த நீரை வரதன் பார்க்காதவாறு மேல் துண்டால் துடைத்துக் கொண்டார் சீனிவாசன்.

''எல்லோரும் இப்படிக் கதவைச் சாத்திண்டு வீட்டுக்குள்ளேயே இருந்தா எப்படி...? கோவில்லப் பூஜை ஆகணும். குஞ்சு கொழந்தை யெல்லாம் சாப்பிடணும். ருக்குமணியோட காரியம் முடிஞ்சாத்தான் இதுகளெல்லாம் நடக்கும். இது ஜீவாத்ம கைங்கர்யம். இதுக்கு வர்க்கபேதம் கிடையாது... எல்லாம் வெளியே வாங்கோ...'' என்று நடுத்தெருவில் மேல் துண்டை எடுத்துத் தலையில் முண்டாக கட்டிக் கொண்டு தம் வெண்கலக் குரலில் சத்தினார் சீனிவாசன்.

பள்ளிக்கூட வாத்தியார் நல்லதம்பி மட்டும் மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தார். வேறு யாரும் கதவைத் திறப்பதாக இல்லை.

''ஊரே ஒத்து வரமாட்டேங்கறது. நமக்கு எதுக்குண்ணா வம்பு? பேசாமப் பஞ்சாயத்து தோட்டிக்கிட்டச் சொன்னா இழுத்துப் போட்டுட்டுப் போறான்...'' சீனிவாசனை எப்படியாவது வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் விட வேண்டும் என்று பேசினான் வரதன்.

''பூனை கண்ணை மூடினா பூலோகம் இருண்டு போயிடாதுடா... சீக்கிரமாப் போயி நாலு பச்சை மூங்கில், கொஞ்சம் கயிறு, இரண்டு சட்டி, வைக்கப்பில்லை எல்லாம் வாங்கிண்டு வா... ருக்குமணியை நான் அனுப்பி வைக்கிறேன்.''

எரிந்து சாம்பலாகப் போகும் ருக்குமணியின் உடம்பும் அழகாகத்தான் இருந்தது வரதனுக்கு. வறுமையால் அவன் பிரம்மச்சாரியாக ஆக்கப்பட்டவன். வில்வண்டி வந்தால் மட்டும் கதவைத் திறந்து கொண்டிருந்த ருக்குமணியை இன்று அவன் தோளில் சுமந்து கொண்டிருந்தான்.

'பாவி... ஒருநாள் கூட பிரயோஜனப் படாமல் போய் விட்டாளே' என்று அங்கலாய்த்துக் கொண்டது வரதனின் மனம்.

காவிக் கலரில் நுங்கும் நுரையுமாகக் கரை புரண்டு ஓடியது காவிரி ஆற்று வெள்ளம். வழக்கமாகக் குளிக்கும் இடத்தில் உள்ள பாறையின் மேல் உட்கார்ந்து தண்ணீரையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார் சீனிவாசன்.

''வரதா... இந்த ஆத்துல எத்தனையோ இடத்துல சுழி இருக்கு... அது தெரியாம காலை விட்டா வைகுண்ட பதவிதான். அதே மாதிரி வாழ்க்கையிலும் எத்தனையோ நெளிவு சுளிவுகள்... அதை நமக்குக் கத்துக் கொடுக்கறவா தெய்வத்துக்குச் சமம் இல்லையாடா?''

''அண்ணா... ருக்குமணி போனதிலே இருந்து உங்களுக்குப் புத்தியே பேதலிச்சுப் போயிடுத்து. எனக்கும் பயமா இருக்கு.''

''போடா... அவதான் சாம்பலா போயிட்டாளே... இன்னும் நீ அவளை மறக்கலையா?''

''அண்ணா... எனக்கொரு சந்தேகம். பூணலை எடம் போட்டுண்டு காரியம் பண்ணினேளே நீங்கோ ருக்குமணிக்கு உறவா?''

''ஆமாண்டா... உறவுதான்... வச்சுக்கயேன்...''

''இத்தனை நாள் ராஜா மாதிரி இருந்துட்டு, இன்னிக்கு ருக்குமணிக்கு உறவுன்னு சொல்லிச் சேத்தைப் பூசிக்கிறேன். உங்களுக்குள் இருக்கறது ஒரு மாதிரியான உறவுதான்னு பேசப் போறா.''

''ஒரு மாதிரியான்னு ஏண்டாப் பூசி மொழுகறே...? இங்க நாம ரெண்டுபேரும் ஆம்பிளைதான். வெளிப்படையாகவே பேசு... நான் அவ வீட்டுக்குப் போயிருக்கேன்னு சொல்லப் போறா... அவ்வளவுதானே...?''

''அவ்வளவுதான்... ஆறு... அதுல எனக்கு அனுபவம் இல்லேன்னு...''

வரதனின் பேச்சு சீனிவாசனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

''வரதா... என் ஆம்படையா ஆண்டாள் கல்யாணமான புதுசுல பட்டுப் புடவை வாங்கித் தரலேன்னு ஒரு வாரம் எங்கூடப் பேசலே... அவோ எனக்குப்பொண்டாட்டி உறவு. வருஷா வருஷம் வெள்ளாமைல சாப்பாட்டு அரிசி ஒரு மூட்டை அனுப்பு வேனே... என் ஸ்ரீவில்லிப்புத்தூர் தமக் கைக்கு... போன வருஷம் அரிசி அனுப்பல லேன்னு... ஊருக்குப் போயிருந்தப்போ எனக்கு ஒரு காபி கூடக் கொடுக்கல்லே. அது எனக்குக் கூடப் பொறந்த தங்கை உறவு. ஒரு ஏக்கரா நெலத்துக்காக என்னை 3 வருஷம் ஹைகோர்ட்டுக்கு அலேக்கழிச் சானே மகானுபவன் வெங்கடேசன். அவன் எனக்குக் கூடப் பொறந்த தம்பி உறவு...''

''இந்த உலகத்துலேயே பெரியஉறவுன்னு சொல்லிக்கிற இதுகளோட லட்சணத்தைப் பார்த்தாயா...? இதையெல்லாம் மீறின ஒரு புனிதமான உறவுடா ருக்குமணி யோடது.''

''அண்ணு உங்களே நான் ரொம்ப ஒசத் தியா நெனச்சிண்டிருந்தேன்...''

ஆற்றுத் தண்ணீரை இரு கைகளாலும் வாரி அவன் மேல் இறைத்தார் சீனிவாசன்.

''வரதா... இந்தக் காவேரி ஜலத்தைப் போலவே என்னைக்கும் புனிதமானவன் இந்த சீனு. அதுக்கு இந்த ருக்குமணி தாண்டா காரணம்...''

தண்ணீரையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்த சீனிவாசனுக்கு அது பின்னுேக்கி ஓடுவது போல இருந்தது.

முப்பது வருடங்களுக்கு முன்னுல் அந்தக் கிராமத்திலேயே அழகான வாலிபன் சீனிவாசன்தான். நல்ல வாலிப முறுக்கு. கட்டுக் குடுமி... வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் வெகுளித்தனம். திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து பி.யு.சி. வரை கூடப் பழகிய காரணத்தினுல் மைனர் தேசிகன் அவரைத் தன்னை விட இரண்டு வயது பெரியவளான ருக்குமணி யிடம் கொண்டு வந்து சேர்த்தான்.

வெளியே தெரிந்தால் மானம் போய் விடுமே என்ற பயம். கண்ட புத்தகங்களை யும், கதைகளையும் காட்டித் தேசிகனுல் மூட்டி விடப்பட்ட காமத்தீ... இரண்டிற்கும் இடையே நடக்கும் போராட்டத்துடன் தான் இரவு ஒரு மணிக்கு மேல் ருக்குமணி யின் வீட்டிற்குள் நுழைந்தான் சீனிவாசன்.

எல்லோரிடமும் பணத்தை வாங்கிக் கொண்டு சேலையை அவிழ்ப்பதுதான் ருக்கு மணியின் வழக்கம். ஆனால் சீனிவாசன் விஷயத்தில் அவனின் அறிவை மறைக்கும் மாயத்திரையை அவிழ்த்து விட்டாள்.

அன்று அவன் பேசிய பேச்சுக்கள் என்றும் பசுமையானவை,

பட்டுப் புடவை பரிசுத்திட்டம்

குறும்பு செய்யும் குழந்தை

போட்டி 27




குறும்பு செய்யும் குழந்தையை நீங்கள் எப்படிச் சமாளித்தீர்கள்? அல்லது உங்கள் கோபத்தைக் குறும்பு செய்த குழந்தை எப்படிச் சமாளித் தது? கீழே எழுதி இந்த அரைப்பக் கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானுல் பரிசு. குலுக்கல் முறை யில் ஒருவருக்குப் பட்டுப் புடைவை. உறையின் மீது ''குறும்பு செய்யும் குழந்தை''. என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 19.11.84.

இன்னும் 26 பட்டுப் புடவைகளே பாக்கி. அதில் ஒன்றேனும் நீங்கள் பெற வேண்டாமா? வாரம் தவறுமல் போட்டி களில் பங்குபெறுங்கள்.

என் பெயர் : ....

விலாசம் : ....



UMA FEATURES

''அந்த மைனர் தேசிகன் பேச்சைக் கேட்டு இங்கே வந்த உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு சீனு. நான் காசுக்காக உடம்பை விக்கற பரம்பரை இல்லே. கல்யாணம் செஞ்சுக்க வசதியில்லாம, ஒருத்தன் கிட்ட ஏமாந்து இந்த நரகத்துலத் தள்ளப்பட்டவ. இந்த அசிங்கமான உடம்பால உன்னைத் தொடறதுக்கே எனக்குக் கூச்சமா இருக்கு. சுத்தமான காவேரி ஆத்துல சாக்கடையைக் கலக்க எனக்கு இஷ்டமில்லே. இங்கிருந்து போயிடு... போயிடு... எப்படி உனக்கு வரப்போற பொண்டாட்டி சுத்தமா இருக்கணும்னு நினைப்பியோ அப்படியே நீயும் அவளுக்கு மனச்சாட்சிக்குப் பொதுவா சுத்தமா இருந்து காண்பிக்க வேண்டாமா...? இன்னிக்கு நீ செய்யற ஒரு நிமிஷத்துத் தப்பு வாழ்க்கை பூரா உறுத்திண்டே இருக்கும்.''

சீனிவாசனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. இந்தத் தொழிலுக்கு வந்துவிட்ட பிறகு இவள் இப்படிப் பேசுகிறாளே என்பது போல் பார்த்தார்.

அவள் அதைப் புரிந்து கொண்டு மேலும் தொடர்ந்தாள். ''எல்லோரையும் அப்படி சொல்ல மாட்டேன் சீனு... என்னவோ உன்னைப் பார்த்தவுடனே அப்படிச் சொல்லணும்னு தோணித்து. நான் பொறந்தவுடனே எங்கப்பாவை முழுங்கிட்ட பாவி. எனக்குப் பால் வாங்கிக் குடுக்க வசதி இல்லாத எங்கம்மாவுக்கு உங்கம்மாதான் அன்னபூரணிமாதிரி கைகொடுத்தாங்களாம். உங்க வீட்டுல இருந்து தினமும் ஒரு டம்ளர் பால் தருவாங்களாம். உங்க வீட்டுப் பாலைக் குடிச்சி வளர்ந்த இந்த உடம்பால, உங்க குடும்பத்துக்கே துரோகம் செய்யலாமா? தயவு செய்து சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கப்பா. இந்தத் தேசிகனோட சினேகிதம் வச்சுக்காதே...''

சீனு நன்றியோடு பார்த்தான். ருக்குமணிக்குக் கொடுத்தபணத்தைத் திரும்ப வாங்கிக் கொள்ளவில்லை உறவு முறையில் அதை வைத்துக் கொள்வதாகக் கூறினான் தெரியாத்தனமா மனசால உன் மேல நான்ஆசைப்பட்டுட்டேன். அதனால சகோதரி உறவைக் கூட நான் சொல்ல இஷ்டப் படலே. ஆனா இன்னிக்கு என் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி விட்ட உன்னை இந்தச் சமுதாயத்தில இல்லாத ஒரு புது உறவா மதிக்கிறேன். என் ஆயுசு பூரா என் ஆம்படையானைத் தவிர யாரையும் மனசால கூட நினைக்க மாட்டேன்... சத்தியம்..'' என்று சொல்லிவிட்டு எழுந்தான் சீனு.

அன்று சீனுவிற்கு இருந்த வெறியில் அவன் சொத்து முழுவதையும் ருக்குமணி நினைத்திருந்தால் எழுதி வாங்கியிருக்கலாம்.. ஆனால்... அப்படிச் செய்யாமல் சீனுவின் மனத்தில் அவள் இடம் பிடித்தாள். அன்றிலிருந்து இன்று வரை ருக்குமணிக்கு சீனிவாசனிடம் தனி மதிப்பு. கிராமத்தில் எங்கு பார்த்தாலும் எழுந்து நின்று மரியாதை கொடுத்து வந்த ருக்குமணி இன்று சீனிவாசன் எதிரிலேயே கட்டையில் நிம்மதியாகப் படுத்துவிட்டாள்.

''என்னண்ணா... ஜலத்தையே பார்த்துண்டு எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பேள்?'' என்று மௌனத்தைக் கலைத்தான்.

''வரதா... அந்தக் காகிதப் பொட்டலத்தைப் பிரிச்சு. அரிசி, எள்ளு கலந்து வச்சிருக்கேன் பாரு... எடு அதை... ருக்குமணிக்காக மூணு கை எறைச்சுடறேன்... என்னடா முழிக்கிறே...? என் உறவுடா அவோ... உன்னாலேயோ இந்த சமூகத்தாலேயோ புரிஞ்சிக்க முடியாத உறவு... என் ஆம்படையா ஆண்டாள்கிட்ட நான் தைரியமா சுத்தமானவன்னு சொல்லிக்கக் காரணமாயிருந்த புனிதமான உறவுடா... அதை இந்தக் காவேரித் தாயாலதாண்டா புரிஞ்சிக்க முடியும்.''

ருக்குமணி அனாதையில்லை என்று எள்ளையும் அரிசியையும் இரண்டு கைகளாலும் காவேரியில் வாரி இறைத்துவிட்டு, நிம்மதியுடன் எழுந்தார் சீனிவாசன்.

''உங்கள் ரத்தம் நாட்டுக்குத் தேவை'' ''ரத்த தானம் உயிர் காக்கும்'' என்று ரேடியோ, டீ. வி. எதிலும் மும்முர பிரசாரம்.

எங்களூர் பால்கார வேலு ஒரு ''மாதிரி''; ஆனால் கொஞ்சம் இளகிய மனசு. இடிஇடித்தால் பெண்டாட்டியிடம் ஓடுவான் — அவனுக்குத் தைரியம் சொல்லத்தான். ரத்த தான சங்கதி அவன் காதில் விழுந்தது. பலத்த யோசனைக்குப்பின் ',இன்று நாமும் கொடுத்து விட வேண்டியதுதான்'' என்று முடிவெடுத்தான். வாடிக்கை வீடுகளில் விசாரித்து பெரியாஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான் — குளித்து முடித்து, பாண்ட் ஷர்ட்டுடன் படூடாப்பாக.

ரத்த பாங்கியில் கியூ பெரிதில்லை. இவனும் ஒட்டிக் கொண்டான். பக்கத்தில் இருந்த அம்மாவுக்கு ரத்த தானத்தினால் ஒரு வித அபாயமுமில்லை' என்று தெம்பூட்டினான். அந்த அம்மா 'யெஸ், யெஸ் 'என்று கையிலிருந்த டைஜஸ்டிலே கண்ணாயிருந்தாள். 8 தடவை ரத்தம் கொடுத்தவளாம். சும்மாவா!

இவன் முறை வந்தது. பெயர், விலாசம் பதிவுசெய்துவிட்டு நர்ஸம்மாவைத்தொடர்ந்தான். நர்ஸ் ஊசியை விரல் நுனியில் குத்தி 2 சொட்டு ரத்தத்தைக் கண்ணாடிச் சில்லுக்குள் தேய்த்துக்கொண்டாள்.

''பூ. இம்புட்டுத்தானே'' என்று சந்தோஷமாய், இனி இதேபோல் எப்போது ரத்தம் தேவையானாலும் தன்னைக் கூப்பிடச் சொன்னான்

நர்ஸ் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''யோவ், இது டெஸ்டுக்கய்யா, இனிமேல்தான் ரத்தம் எடுப்போம், ஜாஸ்தியில்லை, 1 பாட்டில்தான்'' என்று அபயம் தந்தாள்.

உதறலெடுத்தது வேலுவுக்கு. ஓடிவிட முடியுமா என்று பார்த்தான் — வழியில்லை. பிறகென்ன, முறையாய்ப் படுக்கவைத்து, வலியின்றி, 1 பாட்டில் ரத்தம் எடுத்தார்கள். ''டெஸ்ட் பண்ணிட்டீங்களா, சுத்த ரத்தந்தானே — வீர ரத்தமாக்கும் இது'' என்ற கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

வேலு கவலையெல்லாம் ''யாராச்சும் பொம்பிளைப் புள்ளைக்குக் குடுத்திடுவாங்களோ, வீர ரத்தமாச்சே'' என்றுதான்.

வீட்டுக்கு வந்தும் இருப்புக் கொள்ளவில்லை. மாலையில் ''ஒரு நடை போய்ப் பார்த்துப்பிடலாம்'' என்று சைக்கிளில் ஏறி வேகமாய் மிதித்தான். மனசெல்லாம் எங்கேயோ. போதாத காலம் இவன் முக்கு திரும்பவும், டாப்கியரில் வந்த எருமையொன்று மடேரென்று சைடில் முட்டவும்— பக்கத்துப் பள்ளத்தில் இசகு பிசகாய் நினைவின்றிக் கிடந்தான் — உடலெல்லாம் ரத்தக்களரி.

சமயத்தில் யாரோ புண்ணியவான் பெரியாஸ்பத்திரியில் சேர்த்தார்கள். 3-ம் நாள் நினைவு தெளிந்து, சிறு கட்டுகளுடன் வீடு திரும்பும்போது அவனுக்குத் தெரியுமா, அவன் 'வீரரத்தம்' யாருடைய உயிர் காத்தது என்று!

ரத்தம் கொடுக்க வாரீகளா?

கே. ஸ்ரீனிவாஸன்



> காவல்துறை கண்காணிப்பாளர் பதவியிலிருந்து காவல் துறைத் தலைவர் பதவிவரை வகித்து ஓய்வு பெற்றவர் போன் பரமகுரு. எந்த வித அப்பழுக்கின்றிப் பணியாற்றியும் ஓய்வு பெறும் நாளன்று அணி வகுப்பு மரியாதையைக் கூடக் கொடுக்காமல் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர் பரமகுரு ஒருவர் தான். இது மட்டும்தானா.... ஓய்வு பெறும்முன், இவரை சஸ்பெண்ட் பண்ணவும் முயற்சி நடந்ததாம்.... இங்கே மனம் திறந்து பேசுகிறார் பரமகுரு.



○ போலீஸ் உடையில் பரமகுரு

பாதிப்புகளுக்குள்ளான போன் பரமகுரு

காவல் துறையில் துணை கண்காணிப்பாளர் வேலை கிடைத்து நான் பதவி ஏற்கும் முன் என் தகப்பனார் திரு. பொன்னையா சுவாமிகள் எனக்குச் சொன்ன நான்கு அறிவுரைகள்:

1. மனச்சாட்சிப்படி நட. இப்படி நடக்கும்போது பல தொந்தரவுகள் வரலாம். அதற்காக எந்த விஷயத்திலும் உன் மனச்சாட்சி சொல்வதைக் கேட்காமல் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பது உன்னைச் சிக்கலில் மாட்டி வைக்கும்.

2. போலீஸ் பதவி என்பது நெருப்புக்குச் சமானம். நெருப்பு அளவோடு பயன்படுத்தினால் ஆக்க வேலைகளுக்குப் பயன்படும். அதுவே அதிகமானால் அழிவுக்கு வழிவகுக்கும்.

3. போலீஸ் துறையில் உனக்கு வருமானம் குறைவாகத் தான் வரும். அதற்கேற்றபடி உன் வாழ்க்கையை அமைத்துக் கொள். உன் பதவியைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் அதிக வருமானம் வரலாம். ஆனால் அந்த வருமானம் நல்ல செலவுகளுக்குப் பயன்படாது.

4. உன் வருமானத்தில் மற்றவர்களுக்குப் பண உதவி செய்ய முடியாது. ஆனால் நீ இந்த உலகில் பிறந்ததற்குப் பலனாகப் பத்து பேர்களுக்காவது உதவி செய்து உன் புகழ் குறைந்தது கழுதை கத்தும் தூரமாவது கேட்கும்படி செய்ய வேண்டும். அதற்காக உன் பதவியைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. வாக்கு – சகாயம் சரீரப் பிரயாசை மூலம் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். அதற்காக நன்றி கூட எதிர்பார்க்கக் கூடாது.

○ பௌர்ணமி அலைகள் திரைப்படத்தில் நீதிபதியாக போன் பரமகுரு



35 வருடங்கள் காவல் துறையில் பணிபுரிந்து வந்தபோது மேற்சொன்ன நான்கு அறிவுரைகளையும் கடைப்பிடித்து வந்தேன் என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்கிறேன். துணை கண்காணிப்பாளர் பதவியிலிருந்து காவல் துறைத் தலைவர் (டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்) பதவி வரை வகித்த போது எத்தனையோ கட்டங்களில் என் மேல் எந்தத் தவறும் இல்லாமல் பல்வேறு வகைகளில் நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன். ஆனாலும் எந்தவித அப்பழுக்கின்றியும், ஒரு சதவீதம் லஞ்சமில்லாமல் இரண்டு முறை பதக்கங்கள் பெற்றிருக்கிறேன்.

"35 வருட சர்வீஸில் நீங்கள் மறக்க முடியாத கேஸ் எது?"

"தேரழுந்தூர் இரட்டைக் கொலை வழக்கு. கம்பர் பிறந்த கிராமமான தேரழுந்

ஊரில் வயதான தம்பதிகளைக் கொலை செய்ததான வழக்கில் குற்றவாளிகளான ஆறு பேரை இரவு, பகல் என்று பாராமல் ஒரு வாரம் அந்தக் கிராமத்திலேயே தங்கியிருந்து கண்டுபிடித்தேன். அந்த கேஸை நான் கோர்ட்டில் தாக்கல் செய்த விதத்தை நாகப்பட்டினம் செஷன்ஸ் ஜட்ஜ் மிகவும் பாராட்டினார்.

''உங்கள் பதவி காலத்தில் பல்வேறு முதல்வர்களின் கீழ் பணியாற்றியிருக்கிறீர்கள். அந்த அனுபவங்களைக் கூற முடியுமா?''

''ராஜாஜி, காமராசர், பக்தவத்சலம், அண்ணா, கருணாநிதி; நான் காவல் துறையில் இருந்தபோது முதல்வர்களாக இருந்தவர்கள் — அப்புறம் எம். ஜி. ஆர். ராஜாஜியைப் பொறுத்தமட்டில், கட்சி வேறு ஆட்சி வேறு என்று புரிந்து வைத்துக் கொண்டு ஆட்சி செய்தார். கட்சிக்காரர்களின் தலையீடு என்பது சிறிதும் கிடையாது. அதிகாரிகளை சுயமாகச் செயல்பட அனுமதித்தார். அதேபோல் காமராஜர். தென் ஆற்காடு மாவட்ட கண்காணிப்பாளராக இருந்த போது எம். எல். ஏக்கள் காமராஜரிடம் 'இந்த எஸ். பி. கட்சிக்கு விரோதமாக இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எஸ். எஸ். ஆர்., சிவாஜி போன்றவர்கள் அவர் வீட்டிற்குச் சென்று தங்குகிறார்கள்' என்று பல குற்றச்சாட்டுக்களை அள்ளிவீசி, மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் காமராஜர் 'அவரை எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்' என்று கூறிவிட்டார். பிறகு தனியாக என்னிடம், அந்த எம்.எல். ஏக்கள் கோரிக்கைகளில் நியாயம் இருந்தால் கவனியுங்கள் என்று சொல்லி விட்டுப்போய் விட்டார். பிறகு பக்தவத்சலம் காலத்தில் ஒரே வருடத்தில் எனக்கு நான்கு மாற்றல்கள்! காரணம் நான் காமராஜ் அவர்களின் நம்பிக்கைக்குள்ளானவன் என்பது தான். இது என் ஊகம்தான் என்றாலும் பின் ஏன் ஒரே வருடத்தில் நான்கு மாற்றல்கள்? 1967–ல் அண்ணா இங்கு முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது நான் பாண்டிச்சேரியில் ஐ. ஜி. யாக இருந்தேன். அப்போது அங்கு வந்த அண்ணா அவர்கள் 'அங்கே (தமிழ்நாட்டில்) நாங்கள் பதவிக்கு வந்து விட்டோம். இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று கூறிவிட்டு, என்னை உடனடியாகச் சென்னைக்கு ரகசியப் பிரிவு கண்காணிப்பாளராக மாற்றிவிட்டார். அதன் பின் அண்ணா இறக்கும் வரை அவர் கூடவே இருந்திருக்கிறேன். குறிப்பாகச் சொன்னால், அவர் அடையாறு புற்றுநோய் ஆஸ்பத்திரியில் இருந்த போது அருகில் இருந்தது நான்தான். அவர் இறந்து விடுவார் என்பது தெரிந்ததும், அடுத்த அறையிலேயே 'யார் பதவிக்கு வர வேண்டும்' என்ற போட்டியைக் கண்ணால் கண்டு கொண்டு இருந்தவனும் நான்தான். அந்தச் சூழ்நிலையில் எம். ஜி. ஆர். அவர்களிடம் முதல்வர் பதவிக்கு 'கருணாநிதியை விடத் தகுதியானவர் இல்லை' என்று நான் சொன்னதும் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. பிறகு 1972–ல் தி. மு. க. உடைந்த பிறகு அ. தி. மு. க. மிகுந்த செல்வாக்கோடு இருந்த நேரம் அது. திண்டுக்கல்லில் தி. மு. க. தோற்று விட்டிருந்தது. நான் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்தேன். வேலூருக்கருகில் கண்ணமங்கலம் என்ற ஊரில் ஒரு தி. மு. க. பொதுக் கூட்டத்தில், தி. மு. க. தலைவர்கள் எம். ஜி. ஆரைப் பற்றிக் கேவலமாகப் பேசி விட்டு, போலீஸ் ஸ்டேஷனில் வந்து உட்கார்ந்து விட்டனர். மக்கள் அவர்களைத் தாக்க வரவே தற்காப்புக்காக போலீஸ் துப்பாக்கி சூடு நடந்தது. அப்போது இது பெரிய பிரச்னையாக இருந்தது. என் அதிகாரத்துக்கு உட்பட்ட இடமாகையால் நான் அங்கு சென்று விசாரித்தேன். கூட்டம் முடிந்ததும் தலைவர்களை காரில் ஏற்றி வேறுபக்கத்துக்கு அனுப்பி வைக்காமல், போலீஸ் ஸ்டேஷனுக்கு அந்த இன்ஸ்பெக்டர்தான் அழைத்து வந்ததாகத் தெரிந்தது. இதனால் தான் கலவரம் போலீஸ் ஸ்டேஷன் எதிரில் நடந்து துப்பாக்கி சூடும் நடந்தது. அந்த இன்ஸ்பெக்டரை 'ஏன் நீங்கள் தலைவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக்கொண்டு வந்தீர்கள். அதனால் தான் இவ்வளவு தொல்லைகள்' என்று கத்தினேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு ஆங்கில தினப் பத்திரிகையின் நிருபர் ''எல்லாம் தலைவர்களால்தான்'' என்ற தலைப்புடன் செய்தியை அனுப்பி விட்டார். இதைப் படித்த கலைஞர் என்னைக் கூப்பிட்டு விசாரித்தார். நான் பத்திரிகை நிருபருடன் பேசவில்லை என்றும், போலீஸ் ஸ்டேஷனுக்குத் தலைவர்களைக் கூப்பிட்டு வந்ததால் தான் துப்பாக்கி சூடு நடத்த வேண்டியிருந்தது என்றும் நிலைமையை விளக்கினேன். ஆனால் அந்த விளக்கம் அவருக்குத் திருப்தி இல்லாமல் இருந்திருக்க வேண்டும். என்னை சிறைச்சாலை ஐ.ஜி. ஆகமாற்றிவிட்டார்கள்.

''உங்க சர்வீஸிலேயே இன்னிக்குத் தான் நீங்க ஒரு தப்புக் கூட இல்லாம டைப் பண்ணியிருக்கீங்க. ஒரு பிரமோஷனுக்கு ரெகமெண்ட் பண்ணலாம்னு நாளைக்கு ரிடையராகிடுறீங்களாமே!''

—எம். பூங்கோதை.



பிறகு எமர்ஜென்ஸி வந்தது. பல சிறைகளில் அதிகார துஷ்பிரயோகம் நடந்தது என்று கூறினார்கள். சென்னை சிறையில் நடந்த துஷ்பிரயோகங்களை விசாரிக்க நீதிபதியைக் கொண்டு கமிஷன் போட்டார்கள். அந்த நீதிபதி தமது அறிக்கையில், சிறைச்சாலை ஐ. ஜி. அடிக்கடி சிறைச்சாலைக்கு விஜயம் செய்து கண்காணிக்கத் தவறிவிட்டார் என்றும், சென்னை சிறையில் தலைமைக் கண்காணிப்பாளராக இருந்து துஷ்பிரயோகம் செய்தவரை நான் பாதுகாத்தேன் என்றும் ஒரு துறையின் தலைமைப் பதவியை ஏற்கத் தகுதியற்றவன் என்றும் கூறினார். ஆனால் உண்மை என்னவென்றால், சிறைச்சாலை ஐ. ஜி. என்பவர் தமிழ்நாட்டிலுள்ள 12 பெரிய சிறைச்சாலைகளின் நிர்வாகத்தைக் கவனிக்கும் வேலையில் தான் இருந்தாரே தவிர, சிறையில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிக்கு அவர் எந்த விதத்திலும் பொறுப்பாக மாட்டார் என்பதுதான். சிறைச்சாலை ஐ. ஜி. ஒரு வருடத்தில், விதிகளின்படி, சிறைச்சாலையை இரண்டு முறைதான் சுற்றிப் பார்க்கலாம். ஒன்று முறையான இன்ஸ்பெக்ஷன், மற்றொன்று திடீர் இன்ஸ்பெக்ஷன். ஆனால் நீதிபதி அறிக்கையில் குறிப்பிட்டிருந்த கால கட்டத்தில் 10 முறை நான் சென்னை ஜெயிலுக்கு விஸிட் செய்திருக்கிறேன். சிறை கண்காணிப்பாளரை மாற்றவும் நான்தான் சிபாரிசு செய்தேன். இதுதான் உண்மை. இத்தனைக்கும் அந்த நீதிபதி என் கல்லூரி நண்பர்தான். என் விளக்கத்துக்குப் பிறகு அந்த அறிக்கையின் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1977-ல் எம். ஜி. ஆர். ஆட்சிக்கு வந்தார். அப்போது சென்னை கமிஷனர் பதவி காலியாக இருந்தது. எம். ஜி. ஆர். சாங்கோபாங்கமாக என்னைப்பற்றி விசாரித்திருக்கிறார். அதைப் புரிந்து கொண்ட அதிகாரிகள் என்னை சென்னை கமிஷனராகப் போட்டார்கள். அவர் பதவியேற்றவுடன் சென்னைக்கு வந்த மாபெரும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, அன்று சாலையில் அவர் பதவியேற்ற போது அருகில் நான் இருந்தேன். 1980-ம் வருடம் பாராளுமன்றத் தேர்தலில் எம். ஜி. ஆர். தோற்றார். ஆட்சி கவிழ்க்கப்பட்டது. என் பதவியும் பிடுங்கப்பட்டது. நான் சுற்றுலா வாரியத்தின் தலைவனாக நியமிக்கப்பட்டேன். பாராளுமன்ற தேர்தலுக்கும் சட்டமன்ற தேர்தலுக்கும் இடையே நடந்த கவர்னர் ஆட்சியில், ஆலோசகராக இருந்த திரு நாயுடு எனக்கு மிகவும் தெரிந்தவர். ஒருநாள் அவரைச் சந்தித்த போது அவர் சொன்னார். 'என்ன பரமகுரு; நீங்கள் என்ன தவறு செய்துவிட்டீர்கள்? உங்களை மாற்றும்படி உத்தரவு வந்தது. நீங்கள் ஆக்கபூர்வமான வேலைகளில் இறங்குவீர்கள் என்று தெரிந்து நான்தான் சுற்றுலா வாரியத்துக்கு உங்களைச் சிபாரிசு செய்தேன்' என்றார். என்னுடைய மாற்றத்துக்குக் காரணம் கலைஞர் அவர்களுக்கு என் பேரில் இருந்த கோபம்தான்.



வைட்டமின்கள்

தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை



இந்தக் கோபத்துக்குக் காரணம், இந்திரா காந்தி அவர்கள் சென்னை வந்திருந்த போது மறியல் செய்ததற்காக அவரை 45 நாட்கள் சிறையில் அடைத்து வைத்தது தான். அதன் காரணமாக என்னை மாற்ற வேண்டும் என்று மத்திய அரசிடம் கூறப்பட்டதாக அறிந்தேன்.

மறுபடியும் எம். ஜி. ஆர். பதவிக்கு வந்த போது எனக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம் — ஒழுங்கு) பதவி கிடைத்தது. 20 லட்சம் மக்கள் கூடிய உலகத்தமிழ் மாநாட்டை எந்தவித சின்ன கலாட்டாவும் இல்லாமல் நடத்தி முடித்த விதத்தை எம். ஜி. ஆரே பாராட்டி இருக்கிறார். பிறகு வட ஆர்க்காட்டில் நக்ஸலைட் அட்டகாசங்களை இரண்டே மாதங்களில் அடக்கினேன். இதற்கிடையில் தான் மீனாட்சிபுரம், மத மாற்றங்களும் ராமநாதபுரம் கலவரங்களும் நடந்தன. தி. மு. க.வைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர் ஒருவர், முக்குலத்தோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் காவல் துறைத் தலைவராக இருப்பதால் தான், ஹரிஜனங்களுக்கு நியாயம் கிடைக்காமல் போகிறது என்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார். அதன் பின் தாழ்த்தப்பட்டோர் நலன் பற்றி விசாரிக்கப் பாராளுமன்றக் குழு தமிழகத்துக்கு வந்துவிட்டுப் போனது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மத்திய அரசு மாநில அரசிடம் ''அந்தக் காவல் துறை தலைவரை மாற்றி விடுங்கள்' என்று ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது. முதல்வருக்குச் சங்கடமான சூழ்நிலை. என்னை லீவில் போகச் சொன்னார்கள். அதற்கு முன் முதல்வர் என்னுடன் தொலைபேசியில் பேசினார். 'என்னைமீறி இந்தக் காரியம் நடக்கிறது. கண்டிப்பாக இதைச் சரிப்படுத்தி விடுகிறேன்' என்று சொன்னார். இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்—ஒழுங்கு) பதவியில் இருந்த போது அடிக்கடி முதல்வரை சந்திக்க வேண்டியிருந்தது. எனக்கும் அவருக்கும் இடைவெளி உண்டாக்க வேண்டும் என்றே செயல் பட்டார் ஓர் அதிகாரி. அந்த அதிகாரி (இன்றும் எம். ஜி. ஆரின் நல்லபெயரைக் கெடுத்துக் கொண்டிருப்பவர் அவர்தான்) என்னைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லியிருக்கிறார்.

நான் ஓய்வு பெற்ற பின்பும் என்னைப் பற்றித் தவறான தகவல்களை முதல்வரிடம் சொல்லிக் கொண்டிருப்பவரும் அவர்தான். உதாரணமாக 'எஸ். டி. எஸ். அவர்கள்கட்சி ஆரம்பிக்க நான் தான் திட்டம்போட்டுக் கொடுத்தேன்' என்ற தகவல். இதை முதல்வரும் நம்பி அவர்கள் கட்சிப் பொதுக்குழுவிலும் கவர்னரிடமும் கூறியதாக அறிந்தேன். உண்மை என்னவென்றால் எஸ். டி. எஸ். அவர்களை நான் சந்தித்ததே இல்லை என்பது தான். இதே போலத்தான் சர்வீஸில் இருந்த போது என்னைப் பற்றிப் பல பொய்த் தகவல்களை முதல்வருக்குக் கொடுத்தார் அந்த அதிகாரி. எனது துரதிர்ஷ்டம் முதல்வர் என்னைக் கூப்பிட்டு எதுவும் கேட்

காமல் அந்த மோசமான அதிகாரியை நம்பியது தான். எனக்கு மீண்டும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (திட்டம் - ஒருங்கிணைப்பு) பதவி கிடைத்தவுடன் முதல்வரைப் பார்க்க முயற்சி செய்தேன். சந்திக்க முடியவில்லை. பிறகு காவல்துறை தலைவர் பதவிக்கு யாரைப் போடுவது என்ற பிரச்சினை வந்தபோது, தலைமைச் செயலாளரிடம் நான் சொன்னேன். ''எனக்கு சீனியரான நரசிம்மனைப் போடுங்கள். இல்லையெனில் அடுத்தது நான் தான்.'' ஆனால் இப்போதிருப்பவருக்கு அந்தப் பதவியைக் கொடுத்துவிட்டு, மற்ற சீனியர்களுக்கெல்லாம் (நான் உட்பட) பேப்பரில் டி. ஜி. பி. பிரமோஷன் கொடுத்துவிட்டு, எங்களைப் பல்வேறு வாரியங்களுக்கு மாற்றி விட்டார். என்னை பிற்பட்டோர் பொருளாதார வளர்ச்சி வாரியத்தின் தலைவராகப் போட்டார்கள். மீண்டும் பதவியேற்றவுடன் எம். ஜி. ஆரைச் சந்திக்க முயற்சி செய்தேன். ஆனால் முடியவில்லை. எனது சர்வீஸ் காலத்தில் கடைசி இரண்டு வருடங்கள் நான் அந்தப் பதவியில் இருந்தேன். அலுவலகமே இல்லாமல் இருந்த அந்த கழகத்துக்கு அலுவலகத்தை வாடகைக்கு எடுத்து அரசிடம் போராடி 35 லட்சம் ரூபாய் வாரியத்துக்காக வாங்கினேன்.

இந்த முப்பத்தைந்து வருஷ சர்வீஸில் ஒரே ஒரு முறைதான் கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்டில் என்னைப்பற்றி அவதூறாக எழுதப்பட்டது. அதை எழுதியவர் திரு. ஸ்ட்ரேசி. இவர் பதவி காலத்தின் போது தான், தமிழன், தமிழரல்லாதான் என்ற பாகுபாடு போலீஸ் துறையில் ஏற்பட்டது. என்னைப்பற்றி அவதூறாக எழுதப்பட்டதைக் கூட என் விளக்கத்துக்கு அப்புறம் ரிப்போர்ட்டிலிருந்து அரசு எடுத்துவிட்டது.

இந்த வருடம் ஏப்ரல் 30 நான் ஓய்வு பெறும் நாள். ஓய்வு பெறுவதற்கு முன் தோட்டத்துக்கு முதல்வரைச் சந்திக்கச்சென்றேன். 'இரண்டு நாள் கழித்து' வரவும் என்று சொல்லிவிட்டார். எந்தவிதமான அணிவகுப்பு மரியாதையும் இல்லாமல் ஏப்ரல் முப்பது அன்று ஓய்வு பெற்றேன்.

''இப்போது நீங்கள் தேவர் பேரவை போன்ற சமூக சங்கங்களில் இருக்கிறீர்களே! இது ஒரு குறுகிய மனப்பான்மை தானே?''

''என் தந்தையார் என்னை எந்தவித ஜாதி, மத வித்தியாசம் பார்க்காமல் வளர்த்து விட்டார். இன்றும் நான் ஜாதி, மதம் பார்ப்பதில்லை. ஆனால் எந்தவித குற்றமும் செய்யாத, அப்பழுக்கும் இல்லாத என்னை சர்வீஸின் கடைசி சில வருடங்கள் அவமானத்துக்குள்ளாக்கியது எனக்கு எந்தவித பின்பலமும் இல்லை என்ற தைரியத்தில் தானே. ஒன்றுக்கும் உதவாத அதிகாரிகள் கூட பதவி நீடிப்பு பெற்றிருக்கிறார்கள். ஆனால் என் வகுப்பில், பெரிய பதவியை அடைந்தவன் நான். எனக்குப் பதவி நீடிப்பு தராதது மட்டுமல்ல; கடைசி நாளன்று சஸ்பெண்ட் செய்யவும் திட்டம் போட்டார்கள். இதைச் சரியான சமயத்தில் தெரிந்து கொண்டு தலைமை செயலாளரிடம் சொன்னதால் தான் தவிர்க்கப்பட்டது. இதையெல்லாம் மக்களிடம் (குறிப்பாக முக்குலத்தோரிடம்) சொல்லவே நான் இந்த சங்கத்தில் இணைந்திருக்கிறேன். நியாயமான அதிகாரிகள் எப்படி பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் சொல்லப் போகிறேன். இது மட்டும் என் நோக்கமல்ல. இந்த அமைப்பின் மூலம் சமூக சேவை செய்வதும்தான்.''

''ஒரு காலத்தில் புகழ்பெற்ற தமிழக போலீஸ் இப்போது மதிப்பிழந்திருக்கிறதே!''

''நான் சட்டம் – ஒழுங்கு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த போது எம். ஜி. ஆர். அவர்களிடம் சொல்லி இரண்டு முறை போலீஸ் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட பத்து கோடி அதிகம் பெற்றுக் கொடுத்து இருக்கிறேன். 13000 காவலர்கள் பதவி புதிதாக ஏற்படுத்த எண்ணி, எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டேன். ஆனால் கட்சிக்காரர்கள் யாரோ இல்லாததையும், பொல்லாததையும் எம். ஜி. ஆரிடம் சொல்லி இந்தக் காவலர்கள் தேர்ந்தெடுப்பதைத் தடுத்து விட்டார்கள். இப்போதும் 1000 எஸ். ஐ. பதவியும், 5000 காவலர்கள் பதவியும் காலியாகத்தான் இருக்கிறது. இதை முதலில் Fill up – செய்ய வேண்டும். நான் சொல்ல விரும்பும் இன்னொரு விஷயம் காவல் துறையினர் பொதுநல ஊழியர் என்ற நிலை வர வேண்டும். அரசியல்வாதிகளின் சுயநல ஊழியர்களாகச் செயல்படக் கூடாது. மேல் அதிகாரிக்கு மதிப்பு தராத ஊழியர்களைக் காக்க அரசியல்வாதிகள் முன்வரக் கூடாது. ஒரே இடத்தில் மூன்று வருடத்துக்கு மேல் ஒரு அதிகாரியைப் போடக் கூடாது. இப்போது என்னவென்றால், 9 வருடங்களாக ஒரே அதிகாரி, ரகசிய போலீஸில் இருந்து கொண்டு, முதல்வரின் பெயரைக் கெடுத்துக் கொண்டு வருகிறார்.''


ஓய்வு பெற்றபின், தம் தலை முடியை முற்றிலும் வெட்டிவிட்டு, மீசையையும் எடுத்து விட்டார் பரமகுரு. 'பௌர்ணமி அலைகள்' என்ற படத்தில் நீதிபதி வேஷத்தில் நடிக்கிறார். இன்னும் நாடகங்கள் எழுதிக் குவிக்கிறார்.

''என்னைப் பார்த்தால் காவல் துறையைச் சேர்ந்தவன் போல் இருக்கக் கூடாது என்று தான் முடியையும், மீசையையும் எடுத்து விட்டேன்'' என்கிறார்.

''இப்போதுள்ள அரசியல்வாதிகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''இப்போதுள்ள அரசியல்வாதிகள்என்ன? நான்கு தலைமுறை அரசியல்வாதிகளைப் பற்றி சொல்கிறேன். சுதந்திரம் பெறுவதற்கு முன் இருந்தவர்கள் அரசியல் ஞானிகள். அதற்கு பின்னால் வந்தவர்கள் உண்மையான அரசியல்வாதிகள். அப்புறம் வந்தவர்கள் அரசியல் சந்தர்ப்ப வாதிகள். இப்போது இருப்பவர்கள் அரசியல் சுயநலவாதிகள்.''

பேட்டி: **ப்ரியன்**



திரைப்பட நடிகர் முத்துராமன் நினைவாக ஆழ்வார்பேட்டையில் 'முத்துராமன் நினைவு விவேகானந்தா யோகாசனப் பயிற்சி நிலையம்' என்று ஒன்று இயங்குகிறது. இதன் பயிற்சியாளர் யோகிராஜ் கஸ்யப் ராம்நாத். சிரசாசனம் பற்றிய விளக்கங்களைத் தருகிறார்.

தலைகீழ் நிலையில் மூளைக்கு நிறைய இரத்தம் பாய்வதால் நினைவாற்றல் அதிகமாகும். நரம்பு மண்டலம் முழுவதுமே ஆரோக்கியம் பெறும். பிட்யூட்டரி, தைராய்டு சுரப்பிகள் புத்துணர்ச்சி பெற்றுச் சீராக இயங்கும். கண்களுக்கு நல்ல ஒளி உண்டாகும். காது, செவிப்பறைப் பகுதியில் இரத்த ஓட்டம் சீராகி மந்தமான கேட்கும் திறன் இருந்தால் சரியாகும். பல்லுக்கு உறுதி உண்டாகும். சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படாது; கனவுகளில் வீரிய நஷ்டம் போன்ற பலவீனங்கள் ஏற்படாது என்று நிறையப் பலன்கள் உண்டு. சிரசாசனம் செய்ய முடியாதவர்கள் சர்வாங்காசனம் செய்தே பெரும் பலன்களை அடையலாம்.


பொதுவான எச்சரிக்கை:

கழுத்துப் பகுதியில் ஆபரேஷன் ஆனவர்கள், காதுகளில் சீழ் வடிகிறவர்கள், இருதய நோய், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் சிரசாசனம் செய்யக் கூடாது. தக்க யோகாசனப் பயிற்சியாளர் இல்லாமலும், மருத்துவ ஆலோசனை பெறாமலும் சிரசாசனம் செய்யக் கூடாது.

சிரசாசனம்

பயிற்சி முறை:

முழங்கால்களை மடக்கித் தரை விரிப்பில் அமர்ந்து கொள்ள வேண்டும் – 1. பிறகு கைகள், முழங்கால்கள், கால் கட்டை விரல்கள் விரிப்பில் படியும்படி குனிந்து கொள்ள வேண்டும். – 2. இரண்டு கைகளின் விரல்களையும் ஒன்றோடொன்று பின்னிக் கொள்ள வேண்டும். கைகள் தலையின் பின்புறத்தைத் தாங்கிக்கொள்ள, தலையைத் தரையில் வைக்க வேண்டும். முழங்கை தரையோடு படிந்திருக்க வேண்டும். – 3. முழங்கால்களைத் தரையிலிருந்து உயர்த்திக் கால்களை வளையாமல் நீட்ட வேண்டும். – 4. பாதங்களை முகத்தை நோக்கி அடியெடுத்து வைப்பது போல் சற்று நெருங்கிக் கொணர்ந்து தலை முதல் இடுப்பு வரை செங்குத்தாக உயர்த்த வேண்டும். இப்போது கால்களை மடக்கியிருக்க வேண்டும். – 5. இலேசாகத் தரையில் பாதங்களை உதறி மேலெழுப்ப வேண்டும். இப்போது தொடையும் கால்களும் 'ன்' வடிவில் இருக்கும் – 6. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாகக் கால்களை செங்குத்தாக மேலே உயர்த்த வேண்டும்—(7, 8, 9).



அதேபோல் திரும்புகிற நிலையில், கால்களை மடக்கி, மெல்ல இடுப்பைச் சரித்துக் கால் கட்டை விரல் பூமியில் படும்படி வைத்து, மண்டியிட்ட நிலையில் தலையைக் கரங்களிலிருந்து விடுவிக்காமல் சற்றுநேரம் நிறுத்தி வைத்து (இது முக்கியம்) பிறகு தான் தலையை மெல்ல விடுவிக்க வேண்டும். பிறகு வஜ்ராசன நிலைக்கு வந்து அமர்ந்து பயிற்சியை முடிக்க வேண்டும்.

முதல் முதலாக சிரசாசனம் செய்கிறவர்கள் பத்து வினாடிக்கு மேல் செய்ய வேண்டியதில்லை. சாதாரணமாக அரை நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை சிரசாசன நிலையிலிருக்கலாம்.

ஆரம்பத்தில் உடம்பை நேராக நிறுத்த முடியாதவர்கள் சுவர் கூடும் மூலையில் தரை விரிப்பைப் போட்டு இதைப் பழகலாம். எந்த நிலையிலும் அவசரப்படாமல் மெதுவாக நிதானமாகச் செய்ய வேண்டிய ஆசனம் இது. சுவாசம் சாதாரண முறையில் இயங்க வேண்டும். சவாசனம் செய்து ஓய்வு கொள்ள வேண்டும்.

கட்டுரை அமைப்பு: சுப்ரபாலன்
போட்டோ: நாமு
ஆசனம் செய்பவர்: ஏ. அசோக் குமார்

யோகாசன மகிமை

சைலே...ன்ஸ்

குண்டடிபட்டு...

டி. நு. டி. நகர் நான்காவது மெயின் ரோடில் 37—ம் நம்பர் வீடு. முன் வராந்தா வில் இருந்த டி. வி. யில் கிரிக்கெட் மேட்ச். எதிரே சோபாவில் குப்லி.

வயலட் கலரில் ஆர்ப் சாரியில் இருந் தார்.

இந்திப் படத்திற்காக பம்பாய் போய் வந்த அனுபவத்தை விசாரித்தேன். ''பே ஆப்ரு படத்தின் தயாரிப்பாளர்தான் இந்தப் படத்தையும் எடுக்கிறார். எனக்கு ஒரு ரிஸப்ஷனிஸ்ட் கேரக்டர். க்ளைமாக்ஸ் என் மீது தான் முடிகிறது. படத்தில் நான் குண்டடி பட்டுச் செத்து விடுவேன்'' என்றார்.

''த்ச்சோ! த்ச்சோ! அப்புறம்...?''

''ஷூட்டிங் முழுக்க ஒரு பங்களாவில் தான் நடத்தினார்கள். நம்ம ஊர் மாதிரி இப்போ பம்பாயிலும் ரொம்ப பேர் ஸ்டுடியோவிலே ஷூட் பண்றதில்லையாம். இப்போ பாலசந்தரின் கல்யாண அகதிகள் படத்தில் நடித்து வருகிறேன்'' என்றார்.

குப்லி அரசியலில் குதித்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. 'இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்திலே' 'இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்' என்றெல்லாம் நமது அரசியல் வாதிகள் பேசு வார்களே... அதே பாணியில் தான் பேசு கிறார்.

குஜராத்திக்காரரான இவர் இயற்பெயர் குல்நார்டி என்பது, ஏதோ ஒரு பத்திரிகை யின் எங்கோ ஒரு மூலையில் ஏற்கெனவே வெளிவந்துவிட்ட செய்தியாம்.



o மேஜர்



o குப்லி

இவர் குஜராத்தி குயில்

அமைப்பை ஏற்படுத்தி...

மேஜரிடம் பேசிக் கொண்டிருந்தால், நேரம் போவதே தெரியாது. அவரது சுவீர் குரலும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

o சூர்யா



மேஜர் சொன்னார்:

''நான் சினிமாவில் நுழைந்த காலத் தில், இந்த மீடியா ஒரு சிலரின் சட்டுப் பாட்டில் தான் இருந்தது. இந்தத் தொழி லுக்குள் ஒருவர் நுழைவது என்பது அவ் வளவு எளிதாக முடிகிற காரியமில்லை.

''ஆனால் இப்போ. யார் வேண்டுமானாலும் வரலாம் என்கிற நிலைமை. இது ஓரளவுக்கு வரவேற்கத் தக்க அம்சமாக இருந்தாலும், அப்போதிருந்த தொழிலின் மதிப்பும் மரியாதையும் சிதைந்து போய்விட்டதென் னவோ உண்மை.''

சினிமாவில் மெலோ டிராமா தன்மை குறைந்து, எதார்த்தமான படங்கள் வெளி வர ஆரம்பித்திருப்பது குறித்துத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

''ஆனாலும், சினிமா என்னவோ இங்கே டெக்னிக்கலாக வளர்ந்திருக்கிறது என் கிறார்கள். இதை நான் ஒத்துக் கொள்ள

மாட்டேன். என்னத்த வளர்ந்திருக்கிறது! எல்லா கலையும் காலத்திற்கு ஏற்ப மாறுவது இயல்பு. அந்த மாற்றம் தான் வேகமாக இருக்கிறதே தவிர, டெக்னிகல் வளர்ச்சி என்று விசேஷமாய் ஒன்றையும் காணோம்'' என்றார்.

''ஏன், நீங்கள் டைரக்ட் செய்யும் படத்தில் டெக்னிக்கலாக ஏதாவது செய்யலாமே?'' என்று கேட்க வாயெடுத்தேன். அது அவ்வளவு நன்றாக இருக்காது என்பதால், நாக்கை சுருட்டி நடுவாயில் வைத்துக் கொண்டேன்!

''எல்லோரும் படம் எடுக்க வந்து, தொழில் சீர்கெடுவதைத் தடுக்க ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். புதிய தயாரிப்பாளர்களை அது guide பண்ண வேண்டும்'' என்கிறார், மேஜர் சுந்தர்ராஜன்.

குழறுபடி செய்து...

'பொண்ணு புடிச்சிருக்கு' படத்தின் மூலம் திரைக்கு வந்தவர் சூர்யா.

அதற்கு முன்பே 500 முறை நாடக மேடை ஏறி இருக்கிறாராம்.

''தமிழ் தாய்மொழி என்றாலும், மலையாளமும் தெலுங்கும் பேசத் தெரியும்'' என்றார். மேற்படி இரண்டு மொழியும் எனக்குத் தெரியாததால், பரீட்சித்துப் பார்க்கவில்லை.

''தெலுங்கில் ஊமை வேடமும், மலையாளத்தில் குருடியாகவும், தமிழில் ஊமையாகவும் இப்போது 'மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி' படத்தில் அம்மன் வேடமும் ஏற்றுள்ளேன். மொத்தத்தில் எல்லாவித கேரக்டரும் செய்துவிட்டேன். அந்த வகையில் இருபதிதான் (அடேங்கப்பா!) காலஞ்சென்ற பாலசரஸ்வதியிடம் பரதம் கற்றுக் கொண்டேன்.

''இப்போ 'காக்கிச்சட்டை' படத்தில் ஒரு டான்ஸ் மட்டும் செய்திருக்கிறேன். காஜாவின் சிந்திக்க சில நிமிடங்களிலும் நல்ல ரோல் செய்திருக்கிறேன்'' என்றவர், ''இந்த இரண்டு படமும் வெளிவந்தால் எனக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும்'' என்ற மாமூல் வாக்குமூலத்தையும் கொடுக்கத் தவறவில்லை.

''மலையாளப் படஉலகில் தான் கால்ஷீட்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமிழிலும் தெலுங்கிலும் குழறுபடிதான்'' என்று குறைப்பட்டுக் கொண்டார்.

சென்னைக்கு ஓடிவந்து...

''நீங்க கூட எனக்கு வயசு 35—க்கு மேல இருக்கும்னு நெனச்சிக்கிட்டு இருப்பீங்க. அதுதான் கெடையாது. என் உடம்பு வாகும், வழுக்கைத் தலையும் தான் என்னை வயசானவனா காட்டுது. ஆனா எனக்கு வயசு இப்பத்தான் இருபத்தி ஆறு நடக்குது'' என்றார் செந்தில்.

கலைவாணரைப் போல் சிந்திக்க வைக்கிற காமெடி டயலாக் பேசி நடிக்க வேண்டும் என்பது தான் இவர் ஆசையாம்.

''எல்லாப் படத்திலும் அரைக் கால் சட்டை போட்டுக் கொண்டே நடிக்கிறீர்களே?...'' என்றேன்.

''சினிமா ஆசையிலே மெட்ராஸுக்குஓடி வரும்போது அரைக்கால் சட்டைதான் போட்டிருந்தேன். அதனால் தான் அதே யூனிபார்ம்லே தொடர்ந்து நடிக்கச் சொல்லிட்டாங்க போலிருக்கு!'' என்றார்.

சிங்கப்பூர் சென்று...

திரைப்படக் கல்லூரியில் தெலுங்குப் படப்பிடிப்பு.

தாசரி நாராயணராவ் டைரக்ஷனில் குள்ளமணி எகிறிக் குதித்துக் கொண்டிருந்தார்.

இதுதான் அவருக்கு முதல் தெலுங்குப் படமாம். ''குள்ளமணி சிங்கப்பூர்போறார்னு நியூஸ் போடுங்க சார். குள்ளமணி — பிந்து கோஷ் சிங்கப்பூர் பறந்தனர்; எப்பிடி... தலைப்பு நல்லா இருக்கா...? இப்பிடியே நியூஸ் குடுத்துடுங்களேன். சிங்கப்பூர்லே டிராமா போடுறேன் சார். என் சொந்த நாடகக் குழுதான். அது என்ன, கையிலே பத்திரிகை... கொண்டாங்க பார்ப்போம்... என்ன சார்... சொன்னது நினைவிருக்கா... நியூஸ் ஜோரா அடிச்சி உடுங்க...''

அவரிடம் நின்று கொண்டே பேசியதில் கழுத்தை வலித்தது. விடைபெற்றுக்கொண்டேன்.

-சம்பத்ஜி

படம்: **ஸ்பைடர்மேன்**

எழுத்தாளர் சுஜாதா வீட்டிற்கு ஒரு நாள் இரவு ஒரு வாலிபர் வந்தார். அவரது ரசிகன் எனக்கூறினார். திருமதி சுஜாதா அளித்த இரவு சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டுப் படுத்தார், காலையில் விடைபெற்றுச் சென்றார். புறப்படும் போது சொல்லிவிட்டுப் போன விவரம் எல்லோரையும்ஆச்சரிப்பட வைத்தது.

தானும் நண்பர் ஒருவரும் ஒரு நாள் சுஜாதா வீட்டில் சாப்பிட்டுவிட்டுத் தூங்கி மறுநாள் வர முடியுமா? என்று பந்தயம் வைத்ததாகவும் அதற்சாகத் தான் வந்ததாகவும் கூறினார்!

- கருங்கல் ஆர். ஜார்ஜ்





○ பீத்தோவன் பிறந்த வீடு

அழகிய அலுவலகங்கள் சுறு சுறுப்பான அதிகாரிகள்

3


நம் மாநிலத் தலைநகரங்களிலோ, டில்லியிலோ, சர்க்கார் அலுவலகங்களுக்குப் போனால் தென்படுமே ஒரு மாமூலான — மந்தமான சூழ்நிலை அதை நான் மேற்கு ஜெர்மன் தலைநகரில் பல முறை நினைக்க நேர்ந்தது. சிவப்பு நாடாத்தனம், ஆரோக்கியமற்ற சூழ்நிலை, வருகிறவர்களை இழுத்தடிப்பது இவையெல்லாம் இன்றிப் பசுமையான புல்வெளிகள், பூங்காக்களின் இடையே அழகாகவும், கச்சிதமாகவும் அமைந்திருந்தன சர்க்கார் அலுவலகங்கள். வராந்தாக்களில் கூழைக் கும்பிடுகளுடன் காரியங்களுக்காக ஏங்கி நிற்கும் மனிதர்கள் தென்படவே இல்லை. இன்னும்" சர்க்கார் அலுவலகங்களுக்கே உரிய அழுக்கு, அசிரத்தை, குப்பை சேருதல் முதலிய எந்த அடையாளமும் இல்லை. புத்தம் புதிய ஐந்து நட்சத்திர ஓட்டல்களைப் போல ஒவ்வோர் அலுவலக



○ நியூக்ளியர் எதிர்ப்பு ஊர்வலம்

மும் இருந்தது. சுற்றியிருந்த புல்வெளிகளிலும், பூங்காக்களிலும் நவீன கலைப் பாணியிலான சிலைகள், கட் அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் அலுவலகத்துக்கும் முகப்பில் ஒரு வரவேற்புப்பகுதியிருந்தது. எந்த அதிகாரியும் தமது அறை மேஜையருகே வருபவர்களை வரவேற்றுச் சந்திப்பதில்லை. ஒரு கான்ஃபரன்ஸ் ரூம் அல்லது ஸெமினர் அறை போன்ற சந்திக்குமிடம் (அநேகமாக இது ரெஸ்டாரெண்டுகளின் மேலேயோ அதை ஒட்டியோ அமைந்திருக்கிறது) கண்டிப்பாக ஒவ்வோர் அலுவலகத்திலும் இருந்தது. அதிகாரிகள் அங்குதான் வந்தவர்களை வரவேற்றுச் சந்தித்தனர். அங்குள்ள ரெஸ்டாரெண்டுகள் அல்லது கான்டீன்களின் சுத்தமும், ஒழுங்கும், அமைதியும் அற்புதமாயிருந்தன. கறைகளோ அழுக்கோ இல்லை.

போய்ச் சேர்ந்த மறுநாள் ஜுன் 4-ந் தேதிகாலை பத்து மணிக்கு நாங்கள் மேற்கு ஜெர்மன் உள்துறை அமைச்சரகத்துக்குப் (Federal Ministry of the interior) புறப்பட்ட போது அமிர்தசரஸ் பொற்கோவிலில் ராணுவம் நுழைந்தது பற்றிய செய்தியுடன் கூடிய ஹெரால்ட் டிரிப்யூனும் கையுமாக நண்பர் ராஜ்மோகன் எதிர்ப்பட்டார். அவசர அவசரமாக அந்தத் தினசரியை வாங்கிப் புரட்டி விட்டுப் புறப்பட்



ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்

டேன். மனம் இந்தியாவில் லயித்துத் திரும்பியது.

ஜெர்மன் அரசின் மின்சக்திக் கொள்கை (Energy Policy Supply and Saving) பற்றிய விவாதத்துக்காகவும் விளக்கங்களுக்காகவும் உள்துறை அமைச்சரக உயர் அதிகாரிகள் குறிப்பிட்ட நேரமாகிய காலை 10 மணிக்கு எங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சகல புள்ளி விவரங்கள் — பிரசுரங்களுடன் தயாராயிருந்தனர்.


மேற்கு ஜெர்மன் அரசு — அதிகாரவர்க்கம் — அரசியல்வாதிகள் பற்றி இங்கே கொஞ்சம் விளக்க வேண்டும். கொஞ்சம் முதிய அதிகாரிகள் — ஜெர்மன் மட்டும் பேசுகிறவர்களை மொழி பெயர்ப்பாளர்கள் மூலமும் — ஜெர்மன் — ஆங்கிலம் வாயிலாகவும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இளைஞர்கள் பெரும்பாலும் நேராக ஆங்கிலமே பேசுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திற்குத் தவறாமல் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கத் தயாராயிருக்கிறார்கள். தப்பித் தவறி ஒரு நிமிஷம் அரை நிமிஷம் தாமதமானால் விழுந்து விழுந்து மன்னிப்புக் கேட்கிறார்கள். பிரஸ் கான்பரன்ஸ்களுக்கும், கூட்டங்களுக்கும் மணிக் கணக்கில் தாமதமாக வரும் — தாமதமாக வருவதே தங்கள் உரிமைகளில் ஒன்று என்று கூட நினைக்கிற — நம்மூர் அதிகாரிகள் அரசியல்வாதிகளை நினைத்துக் கொண்டேன் நான்.

பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் ('Opec Countries') பயங்கரமாக விலை ஏற்றம் செய்தபின் வேறுவிதமான மின்சக்தி சாதனங்கள் (Other sources of Energy) பற்றி யோசிக்க ஆரம்பித்து மற்ற ஐரோப்பியப் பொருளாதாரச் சமூக நாடுகளுடன் (E. E. C.) ஒத்துழைத்து மேற்கு ஜெர்மனி நிறையச் சாதனைகள் புரிந்திருக்கிறது.

சூரியசக்தி (Solar Energy) காற்று சக்தி (Wind Energy) அணுசக்திகள் (Atomic Energy) என்று பலவகைகளில் ஆராய்ந்து முன்னேறியிருக்கிறார்கள். மேற்கு ஜெர்மன் நகரங்களில் மின்சாரத் தட்டுப்பாடென்றால் என்னவென்றே தெரியாது. கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக அங்கு வசிக்கிற என் இந்திய நண்பர் ஒருவர் அரைவிநாடி கூட அங்கு மின்சாரம் தடைப்பட்ட அனுபவம் தமக்கு ஏற்பட்டதில்லை என்கிறார். இரயில் நிலையங்களிலும், விமானக் கூடங்களிலும், பல மாடிகள் உள்ள டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களுள்ளும் இடத்துக்கு இடம் விரைவதற்குப் பயன்படும் எஸ்கலேடர்களைப் பற்றிய பிரமிப்புடன் 'இங்கு

நா. பார்த்தசாரதி

○ சோலார் எனர்ஜி



சில மணி நேரம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டால் சகலமும் ஸ்தம்பித்துப் போகுமே என நாம் மலைக்கிறோம். பலரை விசாரிக்கிறோம். அந்த மாதிரி மின்சாரத் தடை அனுபவம் தங்களுக்கு நினைவு தெரிந்து ஏற்பட்டதே இல்லை என்று பலரும் நமக்குப் பதில் சொல்கிறார்கள். நம்மூரின் புகழ்பெற்ற கோடைக்கால மின் தட்டுப்பாடுகளும், கட்டுப்பாடுகளும், (Power cut) நமக்கு நினைவு வருகின்றன. ஹாம்பர்க் போன்ற பெரிய நகரங்களில் தேவைக்கதிகமாகவே உபரி மின்சாரநிலையங்கள் (Stand by) இருக்கின்றன. உபயோகத்திலுள்ள 'மின் நிலையங்களைப் பழுது பார்க்கும் போதோ, பற்றாக் குறை வரும்போதோ இந்த உபரி மின் நிலையங்களின் உபயோகம் (Spare Capacity) கிடைக்கிறது. நகரங்களாயினும் கிராமங்களாயினும் ஒரு சீரான மின் சப்ளை கிடைக்கிறது. சென்னையில் ஒரு மாதிரி மின் வசதி, கும்பகோணத்தில் ஒரு மாதிரி மின் வசதி என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. எங்கும் ஒரு சீரான மின்சார சப்ளை.

தலைநகர் பானிலும், பிராங்க்ஃபர்ட்டிலும் கிடைக்கிற அதே மின்சார வசதிகள் நாலைந்து வீடுகளே உள்ள ஒரு மலையடிவாரத்து ஜெர்மானிய கிராமத்திலும் கிடைக்கிறது. வீடுகளைச் குளிர்கால மாதங்களில் உஷ்ணப்படுத்த (Central heating system) முன்பெல்லாம் எரிபொருளைப் பெட்ரோலியப் பண்டங்கள் மூலம் செய்து வந்ததைத் தவிர்த்து உருக்கு ஆலைகளில் வெளியேறும் 'Waste heat'–ஐ ஸ்டோர் செய்து அதன் மூலம் இப்போது சிக்கனமாகச் சாதித்துக் கொள்ளப் பழகியிருக்கிறார்கள் ஜெர்மன் மக்கள். உருக்கு ஆலைகளில் வீணாகும் உஷ்ணத்தைச் சேமித்து அதன் மூலம் சில பகுதிகளில் வீடுகளை உஷ்ணப்படுத்தும் 'District heating system' இப்போது மேற்கு ஜெர்மனியில் வெற்றிகரமாகச் செயல்படுகிறது.

''நம்ம படக் கதாநாயகி கிழிஞ்ச புடவையோட தெருத் தெருவாப் பிச்சை எடுக்கறா சார்!''

''அடப்பாவி! இதை எழுதத்தான் மூணு நாளா பைவ் ஸ்டார் ஓட்டலிலே உமக்கு ரூம் புக் பண்ணேனா?''

—எம். பூங்கோதை.




இதுபோன்ற பல பயனுள்ள விவரங்களையும், காடுகள் அழியாமல் பாதுகாக்க மரம் வளர்க்கும் திட்டமிட்டு மக்களுக்கு விதைகளை வழங்கும் ஏற்பாடுகளையும் விவரித்து முடித்தார்கள் உள்துறை அமைச்சரக அதிகாரிகள். நியூக்ளியர் எனர்ஜி ஏற்பாடுகள் மூலம் காடுகள் அழிந்து இயற்கை கெட்டு விடுமோ என்கிற பயம் பலருக்கு அங்கே இருப்பதையும் மறைக்காமல் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். பிரசுரங்களைக் கொடுத்தார்கள்.

இண்டீரியர் அமைச்சரகத்திலிருந்துமேற்கு ஜெர்மன் செய்தி – தகவல் துறையினர் பான் நகர் பிரஸ் கிளப்பில் ஏற்பாடு செய்திருந்த பகல் விருந்திற்குப் போனோம். ஸ்ரீலங்கா பற்றியும், பஞ்சாப் நிலவரங்கள் பற்றியுமே விருந்து முடிகிற வரை பலவிவாதங்கள். ஏராளமான சர்ச்சைகள்.

பிரஸ் கிளப்பிலிருந்து புறப்பட்டுப் பிற்பகலில் எதிர்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரைப் பார்க்கச் சென்றோம். காலையில் உள் துறை அமைச்சகம் எதை எதை எல்லாம் தன் சாதனைகள் என்று எங்களிடம் விவரித்துக் கூறியதோ அவைகளைச் சாடு சாடு என்று சாடியசில எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளையும் நாங்கள் மாலையில் சந்திப்பதற்கும், பேசுவதற்கும் அரசாங்கமே ஏற்பாடு செய்திருந்த ஜனநாயகப் பெருந்தன்மை என்னைப் பெரிதும் கவர்ந்தது. குறிப்பாக 'Greeners' என்னும் பசுமையாளர் கட்சியினர் அரசின் நியூக்ளியர் எனர்ஜி கொள்கையில் ஜெர்மனியின் அழகிய பசுமைக் காடுகள் பட்டுப் போய் எங்கும் அமில மழை பொழியப் போகிறது என்கிற அளவுக்குக் கடுமையாக விமர்சித்தார்கள். நியூக்ளியர் எனர்ஜி தொடர்பான நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் கட்டுவதைக் கூட இந்த 'கிரீனர்ஸ்' எதிர்த்து வருகிறார்கள். இக்கட்சியில் இளைஞர்கள் அதிகமாகத் தென்பட்டார்கள். ஜெர்மன் பாராளுமன்றத்தில் சுமார் 27 உறுப்பினர்களை இந்தக் கட்சி வென்றிருக்கிறது என்று அறிந்தோம். கிரீனர்ஸ் கட்சியினரைப் பார்த்துவிட்டு பிரிஸ்டல், ஹோட்டலுக்குத் திரும்பினால் அங்கு 'போத்தா' எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்தது. அப்போது போத்தா அங்கு ஏதோ விருந்தில் இருந்தாராம். பான் நகரக் கறுப்பர்களும், வெளுப்பர்களும் இணைந்து நடத்திய அந்த ஆர்ப்பாட்டத்தின் நடுவே நுழைந்த நானும் மற்றவர்களும் கூடத் தென்னாப்பிரிக்கப் பிரதமரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வந்தவர்களாகக் கருதப்பட்டு எதிர்பாராதவிதமாக மாட்டிக் கொண்டோம். போத்தாவை எதிர்ப்பதில் மகிழ்ச்சிதான். ஆனால் அறைக்குப் போக முடியாமல் போலீஸார் தடுத்து நிறுத்தியதைக் கண்டு சிலகணங்கள் மலைத்துப் போனோம். நிறவெறியர் போத்தாவின் மேலிருந்த கோபம்தான் மேலும் அதிகமாயிற்று.

(தொடரும்)



● அரசியல் தீபாவளி கண்டேன்...அடடா எத்தனை வெடி... ஆனால் கடைசியில் லொஜி சொன்ன வெடி இருக்கே... ஏ. ஒன்!

சென்னை–11. வண்ணை கணேசன்.

● இவ்வார கல்கி இதழில் மாண்டலின் சீனிவாஸ் வண்ணப் படத்தையும் அவனைப் பற்றிய சுவையான செய்தியையும் படித்தேன். மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது என்பது புரிந்தது.

லால்குடி. எம். இராஜேந்திரன்.

● 'இறப்பு விழா' சிறுகதையைப் படித்து விழுந்து விழுந்து சிரித்தேன். அதற்கு வரையப்பட்டுள்ள சித்திரம் அப்பப்பா... பிரமாதம்.. சிரிப்புடனே பக்கத்தைத் தள்ளினால் 'கடுகு' எழுதியுள்ள பி. எம். மின் டூர் புரோகிராம்! கல்கியில் நகைச்சுவைக்குக் குறைவில்லை.

பொறையாறு வனிதா சுரேஷ்குமார்.

'அம்மா' பணத்தை வாரி வழங்குவோரே...

● 14.10.84 இதழில் ''பணம் படுத்தும் பாடு'' படித்தேன். ''அம்மா பணம்'' என்று வாரி வழங்குபவர்கள் முப்பது வருடமாக ஐ. ஓ. பி.யின் வாடிக்கையாளராக இருந்து இரண்டு வருடம் முன்னால் காலமான என் அப்பாவின் இருப்புத் தொகை 3000 ரூபாயைத் தர மறுத்து ஒவ்வொரு தடவை செல்லும் போதும் புதுப்புது நிபந்தனைகளை விதிப்பதை என்னவென்று சொல்வேன்? எல்லாச் சான்றிதழ்களும் சமர்ப்பித்தும் பணம் தரும்போது, எல்லா வாரிசுகளும் அவர்களின் முன்னிலையில் கையெழுத்துப் போட வேண்டுமாம். பம்பாய், டில்லி, ஹைதராபாத் போன்ற தூர இடங்களில்—இருப்பவர்கள் ஒரே சமயத்தில் அவர்கள் பங்கான 450 ரூபாய்க்காக அதற்கு மேல் செலவு செய்து கொண்டு வங்கி அதிகாரி முன் கையெழுத்துப் போடுவதற்காகவே வருவதென்பது சாத்தியமா?

கோவை, எஸ். எஸ். ஹரிஹரன்.

● நீண்ட நாட்களுக்குப் பிறகு ஸ்ரீவேணு கோபாலனின் ''மோகினி இருக்கோலம்'' கதை ஆரம்பமே இவ்வளவு விறுவிறுப்பாக உள்ளதே!

சென்னை–44. டி. ஆர். சந்திரசேகரன்.

● இந்த வார கல்கியில் நான் விரும்பும் வேட்பாளர் என்ற தலைப்பில் இருபிரமுகர்களைப் பற்றிச் சிறந்த வேட்பாளர்களாக எழுதியிருக்கிறார்கள். வரவேற்கத் தக்கது.

சென்னை–8. ஷண்முக சுந்தரம்.

● 1.50–லேயே சட்ட நுணுக்கங்களை கல்கி வாசகர்களுக்கு அளித்த ''கல்கி'' என்கிற வக்கீலுக்கு ரொம்பவும் நன்றி.

அத்திமலைப்பட்டு, மது ஜெயபால்.

● பல நிலைகளிலும், பல வழிகளிலும் பெண்கள் பட்டு வரும் வேதனைகளைத் தந்த 'பெண்ணென்று பிறந்து விட்டால்' வாசகர் கருத்துக்கள் சமுதாயத்தில் உண்மை நிலைகள்தான்! பெண்களின் இதயத்தை மதிப்பவர்கள் எத்தனை பேர்?

கூடலூர். பி. இலகவதி.

● தமிழக அரசு அறிவித்துள்ள இலவச மின்சாரத் திட்டம் என் போன்ற நடுத்தர விவசாயிகளை மிகவும் பாதித்துள்ளது. அரசு அறிவித்துள்ள இரண்டு ஏக்கரைக் காட்டிலும் சிறிதளவே அதிகமுள்ள நிலத்தில் குறைந்த அளவே நீர் உள்ள குளங்களைக் கொண்ட விவசாயிகள் எங்கள் பகுதியில் அதிகமாக உள்ளனர். நாங்கள் ஆண்டில் 6 மாத காலமே நீர் கொண்ட கிணற்றில் நீர் இறைக்க மாதம் ரூ. 8, 9 மின் கட்டணம் செலுத்துகிறோம். ஆகையால் வருடம் அதிகபட்சமாக ரூ. 100 கூட வராது. ஆனால் அரசு 375 ரூபாய் கட்டணமாக வசூலிக்க முடிவு செய்துள்ளது. இதை என் போன்ற விவசாயிகளால் எப்படிக் கட்ட இயலும்? எனவே அரசு விவசாயி பணம் செலுத்தியுள்ளதைக் கொண்டு வருட சராசரி மதிப்பீட்டின் அடிப்படையில் வசூலித்தால் நியாயமாக இருக்கும்.

பள்ளக்காட்டுப்புதூர், எஸ். கந்தசாமி.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)

அப்பா பணத்தைத் தருவீரா?

பிரார்த்தனை செய்வதால் நோய்கள் தீருமா?

○ ரம்யா, கோவை—16.

? பிரார்த்தனை செய்வதால் நோய்கள் தீருமா?

! நோய்கள் தீர்வதற்கு மட்டுமின்றி எந்த விஷயத்துக்குமே பிரார்த்தனை மட்டும் போதாது. மனித முயற்சியும் தேவை. மனித முயற்சிக்குப் பிரார்த்தனை பக்க பலமாக நிற்கிறது. பிரார்த்தனையால் மன அமைதி உண்டாகிறது. மன அமைதியின் விளைவாகச் சிந்தனைத் தெளிவு பிறக்கிறது. சிந்தனைத் தெளிவு நாம் முன்னிலும் சிறப்பாகக் கடமையாற்ற வழி வகுக்கிறது. மனித யத்தனத்தால் முடிந்ததையெல்லாம் செய்த பிறகும் நமது நோக்கம் நிறைவேறவில்லையானால் அதனைத் தாங்கிக்கொள்ளக் கூடிய மனப் பக்குவத்தையும் பிரார்த்தனையே நமக்கு அளிக்கிறது. 'கடமையைச் செய், பலனை என் பொறுப்பில் விடு' என்ற கீதையின் தத்துவத்தை வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் புரிந்து கொண்டு செயல்படுவோருக்குத் துன்பமே இல்லை.

○ கோ. க. சுரேஷ், கோவை—9.

? கண்டல் வாங்கும் காகிதத்தைப் படித்துப் பார்ப்பதுண்டா?

! ஆகா! அது கொதிப்புப் பிரியர்களுக்குக் கிடைக்கும் போனஸ் அல்லவா! விடுவோமா!

○ வண்ணை கணேசன், சென்னை—11.

? எவ்வளவோ படம் பார்த்திருப்பீர்கள், சலித்துக் கொண்டு பார்த்த அனுபவம் உண்டா?

! நிறைய. நல்ல படத்தைப் பார்க்க வென்று வந்திருப்போம். அதற்கு முன்பாக டாக்குமெண்டரி ஒன்றைப்போட்டு அறுத்து விடுவார்கள். அண்மையில் நல்லவனுக்கு நல்லவன் பார்க்கப்போனேன். அதற்கு முன்பாகத் தமிழக அரசு தீண்டாமை ஒழிப்பு கருதிக் கலைநயமே சற்றும் இன்றி தயாரித்திருந்த அருவருப்பான பிரசாரப் படத்தைப் பார்த்துத் தொலைக்க வேண்டிய துர்ப்பாக்கியத்துக்கு உள்ளானேன்! அதுவும் போதாதென்று அடுத்து ஒரு ரீலில் ஆபாசமாய் ஆடிப்பாடிக் கும்மாளமிடும் இளநங்கையரிடையில் முதல்வர் எம். ஜி. ஆர். தாமும் பாடி ஆடி, வளைய வருவது போல் எந்த மகானுபாவனோ தயாரித்திருந்த பழைய படம் வேறு! அங்கே ஆஸ்பத்திரியில் முதல்வர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்க, இப்படி ஒரு படமா? இவர்கள் கற்பனையிலும், ரசனையிலும் இடி விழ! Bad Taste! Very Bad Taste!

○ எஸ். அன்புமணி, ஈரோடு.

? விஞ்ஞானிகளுக்கு வரி இல்லாச் சம்பளம் மற்றும் இதர வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்ற விஞ்ஞான ஆலோசனைக் கமிட்டியின் பரிந்துரை பற்றி..?

! இது விஞ்ஞான ரீதியான அணுகுமுறையும் அல்ல. விஞ்ஞானிகளுக்குப் பெருமை தருகிற பேச்சும் அல்ல. விஞ்ஞானிகள் அல்லாத மற்றவர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும், விஞ்ஞானிகள் வாழ்ந்தால் சரி என்பதா? அப்புறம் அவர்கள் யாருக்காக வாழ்வதாம்? வரிச்சுமை விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்ல. எல்லாத் தரப்பினருக்குமே குறைய வேண்டும். உளுத்துப் போன சோஷலிசக் கொள்கைகளைக் குப்பையில் போட்டு விட்டு நவீன விஞ்ஞான ரீதியான பொருளாதாரக் கொள்கைகளை அரசு ஏற்க வேண்டும். விஞ்ஞானிகள் மேல்நாடுகளுக்கு ஓடிப் போவது கேவலம் பணத்துக்காக அல்ல. அவர்களுக்கு அங்கு கிடைக்கும் ஆய்வு வசதிகளுக்காகவும் மதிப்பு, மரியாதைக்காகவும்தான். விஞ்ஞானிகளுக்கு வரிச் சலுகை அளிப்பதால் மட்டும் தேசம் முன்னேறி விடாது. விஞ்ஞான ரீதியான அணுகுமுறையும் செயல்பாடும் சிந்தனையும், நாட்டில் உள்ள ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும்.

○ க. தியாகராஜன், நெய்வேலி ★

? சுதந்திர இந்தியாவில் ஒரு முதலமைச்சருக்குக் கிடைக்கும் மருத்துவ உதவிகள் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைக்கும் நிலை பிறந்தால்?..

! அதற்கு ரொம்ப ரொம்ப நாளாகும். 'இந்தியாவில் ஒரு சராசரி குடிமகனுக்குக் கிடைக்கும் மருத்துவ வசதி எனக்குக் கிடைத்தால் போதும்' என்று சொல்லக் கூடிய துணிவுள்ள தலைவன் தோன்றட்

○ சுஜு

○ நாகமுரா





நீங்கள் கேட்டவை



தராசு

டும் முதலில்! அல்லது Be Indian Buy Indian என்ற வெற்றுப் பிரசாரத்துக்காவது முடிவு கட்டட்டும். நாளை ருஷ்ய அதிபருக்கு ஒரு நோய் என்றால் அமெரிக்க டாக்டர் அழைக்கப்படுவாரா? அல்லது ஜப்பானிய மன்னருக்கு ஒரு ஆபத்து என்றால் ருஷ்யாவுக்குப் பறந்து போவாரா? தன்மானமற்றவர்கள் நாம்தான். நம்முடைய டாக்டர்களின் பணியை மேல்நாட்டார் வந்து பாராட்டிய பிறகுதான் நாம் போனால் போகட்டும் என்பது போல் அங்கீகரிப்போம்!

○ பி. ஸ்தனிஸ்லாஸ், கருங்கண்ணி.

? சாமானியனுடைய எனது 50 காசு தபாலுக்கு மதிப்பளித்து நேரில் வந்து பார்வையிட்டு ஆலோசனை வழங்கிய நாகப்பட்டினம் தெற்கு டிவிஷனல் இஞ்ஜினியரை எப்படிப் பாராட்டுவது?

! ஏற்கெனவே சிறந்த முறையில் தகுதியான வகையில் பாராட்டி விட்டீர்களே இந்தக் கேள்வியைக் கல்கிக்கு அனுப்பியதன் மூலம்!

○ வண்ணை கணேசன், சென்னை–11.

? இன்றைய நிலையில் அரசியலில் சேரலாமா? சினிமாவில் சேரலாமா?

! மக்களை மொட்டையடித்து மூளைச் சலவை செய்து கொண்டிருப்பது இந்த இரு துறையினர்தாம். இதில் ஏதாவது ஆரோக்கிய மாறுதல் புகுத்த முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் இரண்டில் ஒன்றில் சேரவும். அல்லது உருப்படியாக வேறு ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.

○ எஸ். வி. ராஜசேகர், சென்னை–5.

? கிரிக்கெட்டில் அம்பயரிடம் தொப்பி, ஸ்வெட்டர் இத்யாதிகளை பௌலர் கொடுப்பது சரியா?

! அதில் தவறில்லை. பாகிஸ்தானில் ஆடும் போது நம்மவர் ஒரு மினி டி. வி.; கிரிக்கெட் ரூல் புக்; அம்பயர்கண்களைச் சோதித்து வழங்கப்பட்ட பொருத்தமான மூக்குக் கண்ணாடி இவற்றையும் கொடுத்து வைக்கலாம். மூக்குக் கண்ணாடி அணிந்து ரீப்ளேயை டி. வி.யில் பார்த்து ரூல் புக்கைப் புரட்டி நோக்கி அப்புறமும் தவறான தீர்ப்பு வழங்கும் ஆற்றல் அந்நாட்டு அம்பயர்களுக்கு உண்டு!

○ எம். ராஜேந்திரன், லால்குடி.

? அப்போலோ ஆஸ்பத்திரியில் தமிழக முதல்வர் சீரியஸான நிலைமையில் இருக்கும் போது அவர் உற்சாகமாய் இருப்பதாக வானொலி மூலம் கூறி வந்தது ஏன்?

! வானொலி மட்டுமென்ன? டி. வி., பத்திரிகைகள் எல்லாமே அப்படித்தான் பேசி வந்தன. அமைச்சர்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டாக்டர்கள் சொல்வதைத்தானே இவர்கள் ஏற்று மக்களுக்கு வழங்க முடியும்? அமெரிக்க டாக்டர் வந்து, 'அவர் மரணத்தின் வாசலில் நின்றார்; உங்கள் டாக்டர்கள் திறமையால் திரும்பி வந்தார்' என்று சொன்ன பிறகுதானே நிலைமை எவ்வளவு ஆபத்தானது என்பதை மக்கள் புரிந்துகொண்டார்கள்! இல்லாது போனால் எம். ஜி. ஆர். உற்சாகமாக இருப்பதாகவே தொடர்ந்து நம் அமைச்சர்கள் நம்மை ஏமாற்றிக்கொண்டே இருந்திருப்பார்கள். ஏனென்று கேட்டால் அச்சமும் சுயநலமும்தான் காரணம். மக்கள் அதிர்ச்சிக்கு உள்ளானால் என்ன செய்வார்களோ, எப்படி நடந்து கொள்வார்களோ என்ற அச்சம். தாற்காலிகமாக அவை கிடத்தில் யார் என்ற பிரச்சினையில் விட்டுக் கொடுக்க மனம் வராததால் அதைச் சந்திக்காமலே வாரக்கணக்கில் ஒத்திப் போடுகிற சுயநலம்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

க. தியாகராஜன்,
எம். 152/2, மந்தாரக்குப்பம் காலனி,
நெய்வேலி–607 802.

○ ஸ்ரீபாதராவ்



○ ஸ்டேர்லிங்மேயர்



○ கிரிஸ்டோஃபர்பிளாக்



○ ஃபிரைட்மன்



நேருக்கு நேர்



கேசட்டில் திருக்குறள்

சமீபத்தில் திருக்குறள் வீ. முனுசாமி அவர்களின் ஐம்பதாண்டுக் காலத் திருக்குறள் சேவையைப் பாராட்டி விழா நடந்தது. திருக்குறளாருடன் ஒரு சந்திப்பு.

நிருபர்: எத்தனையோ தமிழிலக்கியங்கள் இருக்க, நீங்கள் ஏன் குறளுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறீர்கள்?

திருக்குறள் வீ. முனுசாமி: இங்கே, மற்ற தமிழிலக்கியங்களை உணவு போலவும், குறளை ஊறுகாய் போலவும் நினைத்தார்கள். நான் 'திருக்குறளில் இல்லாத விஷயம் இல்லை; குறள் மூலம் இந்த சமுதாயத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த முடியும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவன். எனவே மற்ற இலக்கியங்களை ஊறுகாயாகவும், குறளை உணவாயும் அளிக்கிற பணியில் ஈடுபட்டு வருகிறேன்.

நிரு: உங்களுக்குத் திருக்குறள் மீது இத்தனை ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

திரு: எப்படி திடீரென ஆர்வம் ஏற்பட்டது என்று எனக்குச் சரியாய் ஞாபகமில்லை.' எனக்கு இருபது வயது இருக்கும். திருக்குறள் மீது அபரிமிதமான பற்றும், ஆர்வமும் ஏற்பட்டது. அந்த வேகத்தில் 1330 குறளையும் மனப்பாடம் செய்து விட்டேன்.

நிரு: ஆச்சர்யமாய் இருக்கிறதே இது எப்படி முடிந்தது?

திரு: அத்தனை குறளையும் மனப்பாடம் செய்ய எனக்குப்பல மாதம் பிடித்தது. நான் என்ன பண்ணுவேன் தெரியுமா? பத்து, இருபதுகுறட்பாக்களை ஒருகாகிதத்தில் எழுதி, பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, காலை பல் தேய்க்க ஆரம்பிப்பது முதல் இரவு தூங்கப்போகும் வரை படித்து மனப்பாடம் பண்ணிக்கொண்டே இருப்பேன். அடிக்கடி, முன்னால் மனப்பாடம் பண்ணியவற்றைச் சொல்லிப் பார்த்துக் கொள்வேன்.

நிரு: குறளை எந்த விதத்தில் நீங்கள் பரப்பி வருகிறீர்கள்?

திரு: நிறைய கூட்டங்களில் குறள் பற்றிப் பேசியிருக்கிறேன். பள்ளிகளில், கல்லூரிகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறேன். தமிழ்நாட்டில் நான் பேசாத பள்ளிகள், கல்லூரிகள் ரொம்பக்குறைவு.

நிரு: தமிழ்நாட்டில் மட்டும்தானா உங்கள் பணி?

திரு: பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த போது, டெல்லியில் நிறையக் கூட்டங்களில் பேசியிருக்கிறேன். பாராளுமன்றத்தில் குறளை மேற்கோள் காட்டியிருக்கிறேன். டெல்லியிலும் சரி, பம்பாயில் சில காலம் இருந்த போதும் சரி, குறள் வகுப்புக்கள் நடத்தியிருக்கிறேன். இன்னும் பொதுக் கூட்டங்களில் பல நகரங்களில்...

நிரு: அயல்நாடுகளில்?

திரு: சிங்கப்பூர், மலேசியா, மலாக்கா போன்ற இடங்களுக்கெல்லாம் போய் விழாக்களில் குறள் பற்றிப் பேசியிருக்கிறேன். என் குறள் சொற்பொழிவை அவர்கள் காஸெட்டுகளாய் வெளியிட்டுள்ளனர். இதற்கு மாணவர்களிடையே நல்ல வரவேற்பு.

நிரு: உங்களுக்கு நகைச்சுவை மிக இலகுவாய் வருகிறதே?

திரு: அதுதான் என்னுடைய ப்ளஸ் பாயிண்ட். திருக்குறளுக்கு, படித்தவர்களுக்குப் புரியும் படியாகத்தான் விளக்கம் எழுதியிருக்கிறார்கள் மற்றவர்கள். ஆனால்

மதுரை கூடலழகர் பெருமாள் கோவில்
ஸ்ரீ ஆண்டாள் திருக்கோலம்
வண்ணப்படம்: ரேவதி ராஜ்கண்ணு

பாமர மக்களுக்கும் புரியும் வகையில் எளிமையாகவும், அனைவரும் ரசிக்கும்படியாய் நகைச்சுவையோடும் விளக்கம் சொல்லி வருவது நான் ஒருவன்தான். திருக்குறள் சம்பந்தமாய் இதுவரை நாலு புத்தகங்கள் எழுதியிருக்கிறேன்!

நிரு: நீங்கள் தலைவராய் உள்ள திருக்குறள் பரப்புக் கழகத்தின் மூலம் என்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?

திரு: திருக்குறள் பிரசாரம் செய்ய இளைஞர்களுக்குப் பயிற்சி தரப் போகிறோம். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் ஒப்புவிக்கிற போட்டிகள் நடத்தப் போகிறோம். பள்ளிகளில், திருக்குறளை இசையுடன் சொல்லியபடி, தாள கதிக்கு ஏற்ப உடற்பயிற்சி செய்யக் கற்றுத் தரவிருக்கிறோம். இதனால் இரட்டிப்புப் பலன் இளைய பாரதத்தினரிடம் ஏற்படும். தவிர நாட்டியம், நாடகம் மூலமாகவும் திருக்குறளைப் பரப்பத் திட்டம் வைத்திருக்கிறோம்.

எஸ். சந்திரமௌலி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அங்கமெங்கும் புத்தம் புதிய உணர்வு பெற்றிடுக.



பட்டுப்புடவைகளிலே புத்தம்புதிய கற்பனைகள். சென்னையில் மிகப்பெரிய புடவை ஷோரூம்களில் ஒன்றிலிருந்து தேர்க் தெடுப்பதற்கு 30000 பட்டுப் புடவைகள். காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், பொச்சம்பள்ளி, சேலம், கும்பகோணம், பெங்களூர் மற்றும் பனாரஸிலிருந்து வந்த மிகச்சிறந்த ரகங்கள். ஒவ்வொரு புடவையும் உங்களுக்குப் புத்தம்புதிய உணர்வைத் தந்திடும். புத்தம்புதிய உணர்வு பெற்றிட வாருங்கள்.

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்

மிகப் பெரிய பட்டுப்
புடவை ஷோரூம்

பனகல் பார்க் எதிரில், (மாடியில்)
சென்னை-600 017

நீங்கள் முற்றிலும் மாறிவிடுவீர்கள்!

உரிமை: லக்ஷ்மி ஸில்க் ஹவுஸ்
(மதராஸ்) அண்ட் கம்பெனி

Market Movers/LSH/348/TM